கல்கி

KALKI 21-9-75 75 காசு





நாகரீகம், அத்துடன் நீடித்தும் உழைப்பவை—பின்னி மட்டுமே நயமுடன் இணைத்துத்தர முடியும்!

Interpub BB/53/75 Tam




கல்கி

ராக்ஷஸ
புரட்டாசி 5

○

செப்டம்பர் 21
1975


○



தொடர்ந்து எண்களுள்ள புள்ளிகளை நேர் கோடுகளால் இணைத்துக் கொண்டு வாருங்கள். முடிவில் உங்கள் முகம் மலரும்.


★ அருகிலுள்ள உருவங்களுள் ஒன்றே ஒன்றுமட்டும் இணை சேராத தனியன். அது எது என்று கூற முடியுமா?

([illegible])



கண்டுபிடியுங்களேன்!

★ எண்களை வாரி இறைத்தது போலிருக்கிறதல்லவா? குழம்ப வேண்டாம். ஒன்றிலிருந்து இரண்டுக்கும் இரண்டிலிருந்து மூன்றுக்கும் இப்படியே


ரகஸியம்,
பரம ரகஸியம்!
அமெரிக்க
நிதி
உதவி
தட்டுங்கள்
திறக்கப்படும்

கல்கி

மலர் 35

இதழ் 8

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற - எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா -- பாரதியார்

நகர்ப்புற நிலத்துக்கு வரி

சுயராஜ்யா பத்திரிகைக்கு திரு எம். ரங்கநாத சாஸ்திரி ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதன் சாராம்சம்:

வீட்டுச் சொத்துக்கள் மீது மொத்தம் நாலு வரிகள் விதிக்கப் படுகின்றன. நகரசபையின் சொத்து வரி அடிக்கடி உயர்கின்ற ஒன்று. மத்திய அரசின் செல்வ வரி நிலத்தின் மதிப்பு உயர்வதால் உயர்ந்து கொண்டே போகிறது. நகர்ப்புற நில வரி சமீபத்திய அவசரச் சட்டத்தின் விளைவாக மிகவும் அதிகரித்திருக்கிறது. அவை போதாத தற்கு வருமான வரி வேறு. இவற்றை யெல்லாம் கொடுத்துத் தீர்த்த பிறகு வீட்டுச் சொந்தக்காரருக்கு ஒன்றும் மிஞ்சுவதில்லை.

வீட்டுச் சொத்துக்களுக்கு இவ்வளவு கடுமையான வரிகளை விதிப்பதால் ஏற்படும் விளைவுகளைச் சம்பந்தப்பட்டவர்கள் யோசித் துப் பார்க்காதது வருந்தத்தக்க விஷயம். இந்த வரிச் சுமைகள் மக்களுக்கு வீடு கட்டுவதில் உள்ள ஆர்வத்தைக் குறைத்துவிடு கின்றன. ஜாகை வசதிகள் நகர்ப்புறத்தில் மிகவும் குறைவாக இருக் கும் இக்காலத்தில் இது நல்லதல்ல. பாங்கிலோ அல்லது வேறு ஓர் நிறுவனத்திலோ பணத்தை மூதலீடு செய்வதே அதிக லாபம் தரு கிறது. தேசிய உடைமையான பாங்குகளில் மூவாயிரம் ரூபாய் வருமானத்துக்கு வரி கிடையாது. லட்சத்து ஐம்பதாயிரம் முதலீடு செய்தால் சொத்து வரி கிடையாது. ஆக வீடு கட்டுவதில் ஆர்வம் குறைவதில் வியப்பில்லை.

நகர்ப்புற நில வரி காரணமாக வீடுகளை அதிக நெருக்கமாகக் கட்டுகின்றனர். இதனால் விசாலமான தோட்டங்கள் நகரில் இல்லா மல் போய் காற்றோட்டம் குறைந்து மக்களின் ஆரோக்கியத்துக்கு ஊறு விளைகிறது.

சென்னை நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகள் பலவற்றிலேயே தண்ணீர், தெரு விளக்கு, சுகாதார வசதிகள் இன்னும் ஏற்பட வில்லை. அவ்வாறிருக்க நகர்ப்புற எல்லைக்கு அப்பாற்பட்ட பகுதி களையும் — இத்தகைய வசதிகள் எதையும் எண்ணிக்கூடப் பார்க்க முடியாத பகுதிகளையும் — நகர்ப்புற நிலம் என்பதாகச் செயற்கை யாகப் பெயரிட்டு அழைத்து வரியும் விதிப்பது அநீதியாகும். பதினாறு கிலோ மீட்டர் சுற்று வட்டாரம் என்னும்போது பல நிலங்கள் இன்னும் சாகுபடியில் உள்ளன. அவற்றின் உரிமையாளர் இனி நகர்ப்புற நிலவரி செலுத்தியாக வேண்டும்!

என்ன சேதி?

சீர்திருத்தத்தைச் சீராகச் செய்யுங்கள்!

நிலச் சீர்திருத்தத்தைப் பொறுத்து மட்டுமல்லாமல் வேறு பல அம்சங்களிலும் தமிழகம் முன்னணியில் இருப்பதாகப் பெருமை பேசுகிற தருணத்தில் 'ஹிந்து' நாளிதழில் பிரசுரமாகியுள்ள ஒரு கடிதம் கவலை தருகிறது.

நிலச்சுவான்தார்களிடமிருந்து அரசு எடுத்துக்கொண்டுவிட்ட நிலங்களுக்கு நஷ்டஈடு தருவதில் ஏகமாகத் தாமதமாகிறது என்பதுதான் அக்கடிதத்தின் சாரம். அதிர்ஷ்டமுள்ள சிலருக்குச் சுமார் ஐந்து கோடி ரூபாய் வரை விநியோகமாகி யிருக்கிறது. என்றாலும் 1972—73ல் எடுத்துக்கொள்ளப்பட்ட நிலங்களுக்கு இன்றுவரை நஷ்டஈடு பெறாத ஏராளமான நிலச்சுவான்தார்களும் இருக்கிறார்கள். தாமதத்துக்கான காரணம் தெரியவில்லை.

ஒருவரிடமிருந்து பிடுங்கி இன்னொருவருக்குத் தந்துவிடுவது சீர்திருத்தமாகாது. நியாயமான நஷ்டஈடு உரிய காலத்துக்குள் தரப்படாதபோது சீர்திருத்தம் என்ற பெயர் அநீதி என்பதாக மாறிவிடும்.

இந்த நோக்கில் பார்க்கும்போது சீக்கிரமே நகர்ப்புறச் சொத்துக்களுக்கு வேறு உச்சவரம்பு வரலாம் என்ற செய்தி மனக் கலக்கத்தை அதிகரிக்கவே செய்கிறது. அப்போது இன்னும் எத்தனை பேர் நஷ்டஈடு பெறாமல் தவிக்கப் போகிறார்களோ!

இதே நாளிதழில் கடமையாற்ற வேண்டிய நேரத்தில் தூங்கிக் கொண்டிருந்த ஒரு போலீஸ்காரர் உத்தியோகத்திலிருந்து கட்டாய ஓய்வு பெற்றார் என்ற செய்தியும் இடம் பெற்றிருக்கிறது!

சிந்திக்க வைக்கும் சிகாகோ செய்தி

சிகாகோ செய்தி யொன்று நாம் அவசரமாகக் கவனிக்க வேண்டிய ஒரு மாபெரும் பிரச்னையைச் சுட்டிக்காட்டி அணுகு முறையையும் உணர்த்துகிறது:

1980க்குள் சுமார் ஒன்றரைக் கோடிப் பேர்களுக்குப் புதிதாக வேலை வாய்ப்புக்கள் ஏற்படுத்த வேண்டி யிருக்கும் என்று அமெரிக்க அரசு கணித்திருக்கிறது. தொழில் வர்த்தக அதிபர்கள் கூட்டமொன்றில் ஜனாதிபதி ஃபோர்டு இதைக் கூறினார். ஒன்றரைக் கோடி புதிய வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்த சுமார் மூன்றரைக் கோடி ரூபாய் புதிய தொழிலகங்களில் அல்லது விஸ்தரிப்புத் திட்டங்களில் முதலீடாக வேண்டும்.

ஜனாதிபதி ஃபோர்டு அமெரிக்கக் காங்கிரஸை (நாடாளு மன்றம்) வரிச் சலுகைகளை அறிவித்து முதலீடு பெருக உதவுமாறு கேட்டுக்கொண்டார். அரசுக் காரியாலயங்களில் ஃபைல்கள் குவிவதைக் குறைக்க வேண்டும் என்றும் அரசு ஊழியர்கள் எதற்கெடுத்தாலும் மேலிடத்தை எதிர்பாராமல் தாமாகவே பொறுப்பேற்றுச் செயலாற்ற ஊக்கமளிக்க வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

ராஜாஜி சிந்தனை

மனிதனும் மிருகமும்

அறிவு நல்லதை நாடும் மேதா விலாசமாக வளராமல் தீமையின் கருவியாகி மனித இனத்தின் எதிரியாகி விட்டது. ஆர்தர் கோயிஸ்லர் சமீபத்தில் எழுதியது போல மனிதர்கள் உருவாக்கிய அரசாங்கங்களை விட வன விலங்குகள் இயல்பாகவே சிறப்பானவைதாம். அவை மாறுபட்ட இனத்தைச் சேர்ந்த மிருகங்களைக் கொன்றாலும் அவற்றுள் எந்த இனமும் தனது இனத்தைச் சேர்ந்த மிருகங்களைத் தாக்குவதோ கொல்வதோ இல்லை. ஆனால் இருபதாம் நூற்றாண்டு மனிதர்கள் இதைத் தங்கள் அரசாங்கங்கள் மூலம் செய்கிறார்கள்.

விஞ்ஞான வளர்ச்சி காரணமாக மனிதன் தாழ்வடைந்து விட்டான். பிரதிபிம்பங்களைக் கோணலாக்கும் கண்ணாடி நாம் மேலே செல்வதாகக் காட்டினாலும் நாம் கீழேதான் போய்க் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெளிவாக உணர்கிறேன்.

அணுகுண்டுகளைக் குவிப்பதால் சர்வ நாசம் விளையப் போகிறது என்று பலர் அஞ்சும்போது அத்தகைய ஒரு காட்டு மிராண்டித்தனம் நிகழ்வதைத் தடுக்க ஐ.நா. சபை ஏதும் செய்யக் கூடும் என்பது நம்பிக்கை ஒளிக் கீற்றாகத் தெரிகிறது.

சுயராஜ்யா, நவம்பர் 15, 1969

உங்கள் குறையும் என் நிறைவும் 4

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய ஸ்வாமிகள்

பட்டண வாழ்க்கை ரொம்பவும் ஒரு தினுசாகப் போய்க் கொண்டிருக்கிறது என்பதால் நான் கிராமாந்தரங்களிலேயே இருப்பது என்றுதான் சில வருஷங்களாகவே வைத்துக் கொண்டிருந்தேன். பட்டணத்துப் பக்தர்கள் அடிக்கடி என்னிடம் வந்து, நான் இங்கே வரவேண்டும் வரவேண்டும் என்று ரொம்பவும் பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்கள். நான் விடாப்பிடியாக இருந்தும் அவர்கள் விடாமல் ரொம்பப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தார்கள். அப்புறம் எனக்கே தோன்றிற்று, 'இத்தனை பேர் இத்தனை பிரியமாகக் கேட்டுக் கொண்டும், 'வரவே மாட்டேன்' என்று நாம் இருந்தால் அது பிடிவாதம்தானே? பிடிவாத ஸ்வபாவம் என்பது தப்புதானே? நமக்கு அதுதான் என்னத்துக்கு? பிடிவாதத்தை விட்டுவிடுவோம்' என்று. அதனாலே சில 'கண்டிஷன்'கள் போட்டு, அதுகளை நிறைவேற்றினால் நான் வருவதாகச் சொன்னேன். 'நீங்கள் சிகை வைத்துக் கொள்ள வேண்டும், ஸந்தியா வந்தனம், பிரம்ம யக்ஞம் பண்ண வேண்டும்' என்றெல்லாம் கண்டிஷன் போட்டேன். இன்னொருத்தரை ஒரு காரியம் பண்ண வைப்பதற்கு சுய அநுஷ்டானம்தான் வழி என்று இத்தனை நாழி சொல்லிவிட்டு, இந்த மாதிரி 'அதைப் பண்ணு, இதைப் பண்ணு' என்று நான் உத்தரவு போட்டது சரியில்லை என்றுதானே தோன்றுகிறது? வாஸ்தவத்தில் நான் அப்படி நிபந்தனை போட்டது, அதன்படியே எல்லாரும் பண்ணி விடுவார்கள் என்று எதிர்பார்த்ததால் அல்ல. உத்தரவு போட்டு ஊரையெல்லாம் மாற்றிவிடலாம் என்றும் நினைக்கவில்லை. பின்னே ஏன் அப்படிச் சொன்னேன் என்றால், அவர்களாகவே 'இது நம்மால் முடியாத காரியம்' என்று என்னைக் கூப்பிடுவதை விட்டு விடுவார்கள் என்ற எண்ணத்தில்தான். என்னை வரவழைக்க வேண்டும் என்பதற்காக மட்டும் சில ஆசார அநுஷ்டானங்களைப் பண்ண ஆரம்பித்தால் அது பிரயோஜனமில்லை. அது சாச்வதமாக இருக்கவும் இருக்காது. அதற்காகவே பிடிமானம் இருந்து செய்தால்தான் ஸ்திரமாக இருக்குமே தவிர, இன்னொன்றை உத்தேசித்து இதைச் செய்தால் நிலைத்து நிற்காது. ஒரு உபயோகமும் இல்லாத காரியத்துக்கு நம்மைப் பட்டணத்துக்குக் கூப்பிடுகிறார்களே அவர்களுக்கு ஏதாவது சமாதானமாக இருக்கட்டும் என்றுதான் கண்டிஷன் போட்டேன். பக்தர்கள் கண்டிஷன்படி செய்வதாகவும் தெரியவில்லை. ஆனால் நான் வந்தாக வேண்டும் என்று மட்டும் அவர்களும் வெறுமே பிடிவாதம் பிடித்தார்கள். கடைசியில் நமக்குப் பிடிவாதம் என்கிற கெட்ட ஸ்வபாவம் வேண்டாம் என்பதற்காகவே வந்துவிட்டேன்.

வந்த பிறகு ஒரு மாசம், ஒன்றரை மாசம் அதிகமாக நான் ஒன்றும் பேசவில்லை, உபந்நியாசம் பண்ணவில்லை. அப்புறம்தான் இந்தக் காரியம் ஆரம்பித்தது. போகப் போக ஜாஸ்தியாகி விட்டது. நித்தியம் காலமே எழுந்திருந்தால் உபந்நியாசம், நடு ராத்திரி வரை உபந்நியாசம் என்றாகி விட்டது. ஏதோ கூப்பிட்டார்கள், வந்தேன், என்றால் அதற்காக இப்படி ஒருநாளைப் போல பேசுவானேன்? உபந்நியாசம், கேட்கிறதற்கு ஒரு கச்சேரி மாதிரி இருந்திருக்கிறது. பல பேருக்குக் கேட்கிற மட்டில் திருப்தியாக இருந்திருக்கிறது; அழகாகத் தோன்றியிருக்கிறது. அது கேட்கிறவர்கள் சமாசாரம். அதன் விளைவும் (Effect) தற்கால சாந்திதான். இது தெரிந்தும் நான் ஏன் இப்படிப் பண்ணிக்கொண்டிருந்தேன், சாச்வதப் பிரயோஜனம் கொடுக்காதது என்று தெரிந்தே ஏன் கச்சேரி பண்ணிக் கொண்டிருந்தேன் என்றால், இதிலும் ஒரு பிரயோஜனம் தெரிந்ததால்தான். அந்தப் பிரயோஜனம் எனக்குத்தான்! முதலில் நான் இதை நினைத்து 'லெக்சர்' அடிக்கவில்லை. ஆனால் போகப் போக அதில் **எனக்கு** ஒரு பெரிய பிரயோஜனம் ஏற்படுவதாகத் தெரிந்தது. என்ன பிரயோஜனம்? நான் பல விஷயங்கள் பார்ப்பதில், படிப்பதில் எனக்கு ஏதாவது சந்தேகங்கள் வருகின்றன. பல பாஷைகள் சிக்கலான சமாசாரங்கள் பார்க்கிறபோது, ஒரு பதத்துக்கு அர்த்தம் தெரியவில்லை; ஏதோ ஒரு பச்சிலைக்குப் புரியாத பாஷையில் பேரைப் பார்த்தால் அது இன்னதென்று புரிவதில்லை. இன்னும் இப்படிப் பல சந்தேகம் வருகிறது. நானாகவே இதற்குப் புஸ்தகங்கள் தேடி சந்தேக நிவர்த்தி செய்து கொள்வதென்றால், ஒரு சின்ன சமாசாரம் கண்டு பிடிப்பதற்கு பத்து நாள்கூட ஆகிவிடும். ஆனால், இந்தப் பட்டணத்து ஜனங்கள் கூடியிருக்கும்போது பலவிதமான சாஸ்திரங்கள், ஸயன்ஸ்கள் எல்லாவற்றிலும் நன்றாகப் படித்தவர்கள் அவர்களில் இருப்பதால், நான் எந்தச் சந்தேகத்தைக் கூட்டத்திலே எடுத்துப் போட்டாலும் சட்டென்று அதற்குத் தெளிவு ஏற்பட்டு விடுகிறது. எனக்குத் தோன்றும் பலவிதமான சந்தேகங்களையும் உபந்நியாசத்தின் நடுவில் அப்போதைக்கப்போதே தெளிவு செய்து கொள்ள ரொம்பவும் செளகரியமாக இருந்தது. நான் இங்கே வந்ததில் உங்களுக்கெல்லாம் என்ன பிரயோஜனம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் எனக்கு இப்படிப் பெரிய பிரயோஜனம் ஏற்பட்டது.

(தொடரும்)

1959ல் சென்னை பிரவாசத்தில் அருளிய உரை.



"இரண்டாம் தரமான
பொருள்களை நான் எப்பொழுதும்
வாங்குவதே இல்லை.
40 சதவிகிதத்திற்கும் அதிகமான
மைதா கலந்த பானத்தை
நான் ஏற்பதேயில்லை.

விவாவையே தரும்படி நான்
கடைகளில் வற்புறுத்துகிறேன்.
ஏனென்றால்

விவா வில் நிறைந்த பாலும் நிறைந்த மால்ட்டும் உள்ளன

இதில் மாவோ, மைதா
அல்லது வேறு தானியக்
கலவைகளோ ஏதுமில்லை."



ASP/JIL 6C 75/TAM

ஜகஜ்ஜித் இன்டஸ்ரீஸ் லிமிடெட்
இந்தியாவில் மால்டை
மிக அதிக அளவில் தயாரிப்போர்.

விவா
நீங்கள் தரும் பணத்துக்கு
அதிக நன்மைகள்
அளிக்கிறது.

குற்றவாளிகளுக்குக் குலைநடுக்கம் ஏற்படச் செய்கின்றன போலீஸ் நாய்கள். சென்ற ஆண்டு பிரிட்டிஷ் போலீஸ் கைது செய்தவர்களுள் கிட்டத்தட்ட 14,000 பேர் நாய்களின் உதவியால் பிடிபட்டவர்கள்தாம். குற்றவாளிகள் நடுங்கக் கேட்பானேன்! ஆனால் இந்தப் புள்ளி விவரம் நாய்கள் செய்து வரும் பணியில் ஒருபகுதியைத்தான் உணர்த்தும். நன்மக்களுக்கு உதவும் ஆக்க ரீதியான பணிகள் பலவற்றையும் போலீஸ் நாய்கள் செய்கின்றன.



கடந்த சில ஆண்டுகளில் நாய்களுக்குத் தரப்பட்ட விசேஷப் பயிற்சிகளின் விளைவாக வெடிமருந்துகள், போதைப் பொருள்கள், புதைக்கப்பட்ட உடல்கள், திருட்டுச் சொத்துக்கள், ஓட்டை விழுந்த குழாய் வழியே காஸ் வெளிப்படுதல் முதலியவற்றைக் கண்டு பிடிக்க அவை உதவுகின்றன. காணாமல் போனவர்களை வேட்டையாடுவதும் உண்டு.

சுமார் 1500 அல்ஸேஷன் நாய்கள் பிரிட்டிஷ் போலீஸாரால் பயன்படுத்தப்படுகின்றன. இவைத் தவிர பல நூறு நாய்களைப் பாதுகாப்பளிக்கும் தனியார் நிறுவனங்களும் பிரிட்டிஷ் போக்குவரத்துப் போலீஸும் உபயோகிக்கின்றன. போக்குவரத்துப் போலீஸ், ரயில்வேயின் உடைமைகள், துறைமுகங்கள் ஆகியவற்றைப் பாதுகாப்பது.

நடுங்க வைக்கும் நாய்கள்!



எகிப்தியர் பயன்படுத்தினர்!

ஏழுவாயிரம் ஆண்டுகளுக்கு முன் பணக்காரர்களின் சமாதிகளைக் காப்பதற்கு நாய்களை எகிப்தியர் பயன்படுத்தினர் என்றாலும் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில்தான் இங்கிலாந்தில் போலீஸ் நாய்ப் பிரிவு ஏற்படுத்த வேண்டும் என்பதில் சிரத்தை உண்டாயிற்று. அதன் பிறகும் 1940 வரை விசேஷ முன்னேற்றமில்லை. 1945–46 வாக்கில் உள்துறை அமைச்சகத்தின் ஒத்துழைப்புடன் நாய் பயிற்சி நிலையங்கள் தோன்றின. இன்று பல நாடுகளிலிருந்து போலீஸ் அதிகாரிகள் டஜன் கணக்கில் வந்து நாய் வளர்ப்பு பற்றி பிரிட்டிஷ் போலீஸ் நிறுவனங்களில் பயிற்சி பெறுகிறார்கள்.

போலீஸ் நாய்கள் அத்துமீறி வருபவர்களைத் தாக்கப் பழகியவையல்ல. இவை ஒரு மனிதனைத் தப்பிஓடாமல் நிறுத்தி வைக்குமேயன்றித் தாக்காது. இது கடைசிப் பயிற்சியாகும். இதற்கு முந்தைய இரு பாடங்கள் சொற்படி கேட்பதும், மோப்பம் பிடிப்பதும் ஆகும்.

சரியான நாய்களைத் தேர்ந்தெடுப்பது ரொம்ப முக்கியம். ஆரம்பத்தில் டாபர்மான் நாய்களை விரும்பி ஏற்றனர். அவை இன்றும் பணியாற்றுகின்றன என்று

(மேலே) ஹெலிகாப்டர் பயணத்துக்கு நன்கு பழகியுள்ள நாய் இது. தப்பிச் செல்பவனைப் பிடிக்க ஹெலிகாப்டர் கீழிறங்கி வந்து நாயை விடுவிக்கிறது. உடனே நாய் அவனைத் துரத்திக்கொண்டு ஓடுகிறது. (கீழே) போலீஸ் நாய் மாக்ஸ் வெடிமருந்துகளை மோப்பம் பார்த்துக் கண்டுபிடிப்பதில் விசேஷத் தேர்ச்சி பெற்றுள்ளது. இங்கே அதனைப் பயிற்சிக் கட்டத்தில் காப்பாளர் பீட்டருடன் காண்கிறோம்.

லும் அல்ஸேஷன் நாய்களே இப்போதெல்லாம் முதலிடம் பெறுகின்றன. ராட்வெய்லர், ஜெர்மன் பாயிண்ட்டர் ஆகிய இதர ஜாதி நாய்களும் போலீஸ் பணிக்கு ஏற்கப்படுவதுண்டு. வெடிமருந்தைக் கண்டுபிடிக்கப் பழகிய முதல் நாய் வெய்மாரனர் ஜாதியைச் சேர்ந்தது.

போலீஸ் நாய் விடுதிகள்

பிரிட்டிஷ் போலீஸுக்கு நாய்கள் மூன்று விதங்களில் கிடைக்கின்றன. முதலாவது பொதுமக்களின் நன்கொடை. இரண்டாவது, உயர்ஜாதி நாய்களின் இனப் பெருக்கத்துக்கு என்றே இயங்கும் நிறுவனங்களிலிருந்து விலைக்கு வாங்குவது. மூன்றாவது போலீஸாரே நடத்தும் நாய்ப் பண்ணையிலிருந்து பெறுவது. போலீஸாரின் நாய்ப்படை விரிவடைய அடைய முதல் இரு முறைகளில் நாய்களைப் பெறுவது சிரமமாகி வருகிறது. தனியார்த் துறையில் உள்ள பாதுகாப்பு நிறுவனங்களும் நல்ல நாய்களைப் பெறப் போட்டி போடுகின்றன. எனவே போலீஸாரே தற்போது உயர் ஜாதி நாய்களின் இனப் பெருக்கத்தில் சிரத்தை காட்டுகிறார்கள்.

நாய்களின் வம்சாபிவிருத்தி, தேர்வு செய்தல், பழக்குதல் ஆகியவை பற்றி நன்கு அறிய லண்டன் போலீஸின் நாய்ப் படையைக் கவனித்தால் போதும். பொதுப் பணிகளுக்காகவும் விசேஷப் பணிகளுக்காகவும் இன்று லண்டன் போலீஸார் 320 நாய்களை வைத்திருக்கின்றனர்.

புதையுண்ட குண்டுகளைக் கண்டுபிடித்து அவற்றைச் சேதமின்றி வெடிக்கச் செய்யும் பிரிவு ஒன்று ஸ்காட்லண்டு யார்டு போலீஸில் உண்டு. இப்பிரிவுக்கு இந்த ஆண்டுத் தொடக்கத்தில் அரசி எலிஸபெத் விஜயம் செய்த போது மூன்றரை வயதான லாப்ரடார் ஜாதி நாய் ஒன்றை அவருக்கு அறிமுகப்படுத்தினார்கள். அது உடனே தனது நுணுக்கமாக மோப்பம் பிடிக்கும் மூக்கை அரசியின் கைப்பையைச் சுற்றிலும் மரியாதையுடன் ஓட விட்டது! காரணம் புரிகிறதா? தற்காப்புக்காக அரசி ஒரு சிறு துப்பாக்கியைக் கைப்பையில் வைத்திருப்பது வழக்கமாயிற்றே.

ஆரம்ப பாடங்கள்

மூன்று மாதங்கள்வரை தாயையும் குட்டியையும் பிரிப்பதில்லை. பிறகு ஒவ்வொரு நாய்க்குட்டிக்கும் அதன் காப்பாளர் அறிமுகமாகிறார். காப்பாளர்கள் அனைவரும் முதலில் போலீஸ் பயிற்சி பெற்றுத் தேறவேண்டும். பிறகுதான் நாயின் காப்பாளராக முடியும். நாய்க்குட்டி தன் காப்பாளர் வீட்டிலேயே அவர் குடும்பத்துடன் சேர்ந்து வாழ்கிறது. இது போலீஸ்காரருக்கும் நாய்க்குமிடையே அன்பும் நட்பும் நம்பிக்கையும் பெருகவும் ஒருவரை யொருவர் நன்கு புரிந்து கொள்ளவும் உதவுகிறது. ஒரு வருஷம் வரை நாயை உலாவ அழைத்துச் செல்கிறார் காப்பாளர். அப்போதே பயிற்சியும் ஆரம்பமாகிவிடுகிறது.

கட்டளைக்குக் கீழ்ப்படிதலும் சுத்தமாக இருப்பதும் அடிப்படைக் கல்வி. உதாரணமாக சுவர்களையும் விளக்குக் கம்பங்களையும் முகரக் கூடாது என்று கற்றுத் தரப்படுகிறது.

ஒன்பது மாதமானவுடன் நாய்க்குட்டி காப்பாளருடன் கெஸ்டன் பகுதிக்குப் போகிறது. இங்கே ஏழு நாள் தொடக்கப் பயிற்சி பெறுகிறது. நாய்க்கு ஒரு வயதானவுடன் 12 முதல் 14 வாரம் வரை நீடிக்கும் பயிற்சி அளிக்கிறார்கள். கூடவே காப்பாளரும் அதனைப் பழக்கும் பயிற்சிகளை மேற்கொள்கிறார். இப்போது கட்டளைக்குக் கீழ்ப்படிதல், ஆரோக்கியமாக விளங்குதல், மோப்பம் பிடித்துப் பின்தொடர்தல், உயரே ஏறுதல், திறந்த வெளியில் தேடுதல், பூட்டியிருக்கும் வீட்டினுள் புகுந்து தேடுதல், சந்தேகத்துக்குரியவரைப் பின்துரத்திச் சென்று அவரைப் பிடித்து வைத்தல் ஆகியவற்றில் நாய் தேர்ச்சி பெறுகிறது.

விட்டெறிந்ததைக் கொண்டு வா!

தேடிக் கண்டுபிடிக்கும் பயிற்சியில் முதல் கட்டம் நாயின் இயல்பான குணத்தைப் பயன்படுத்துவதாகும். விட்டெறிந்ததைக் கொண்டு வந்து தருவது நாய்க்குப் பிறவியில் அமையும் குணம். சற்றுத் தூரத்தில் விட்டெறிந்ததை முதலில் கொணர்ந்து தரும்; பிறகு அடர்ந்த புதருக்கிடையில் ஒரு பொருளை விட்டெறிந்து அதைத் தேடிக் கொணரச் செய்வர். காப்பாளர் தொடக்கத்தில் இதற்கு உதவுவார். பிறகு பொருளைக் கண் மறைவாக ஒளித்து வைத்துவிட்டு மோப்பச் சக்தியால் கண்டுபிடிக்கச் சொல்வார்கள். இதற்கும் தொடக்கத்தில் காப்பாளர் உதவுவார்.

நாயின் திறமை அதிகரிக்க அதிகரிக்க தேடுவதைக் கஷ்டமாக்குவார்கள். கண்டுபிடிக்க வேண்டிய பொருளைக் கட்டிடத்துக்குள்ளும் அலமாரிக்குள்ளும் கூரையிலும் டப்பாவினுள்ளும் மரத்தின் மீதும் பூமிக்கடியில் புதைத்தும் வைப்பார்கள்.

படிப்படியாக வளரும் திறமை

நாயின் திறமை ஒவ்வொரு கட்டத்திலும் கணிக்கப்படுகிறது. காப்பாளரின் கட்டளையை இம்மியளவும் பிசகாமல் நிறைவேற்றுகிறதா என்று பார்ப்பதுடன் நாயின் ஆற்றலை முழுமையாகக் காப்பாளன் உணர்ந்திருக்கிறானா என்றும் பார்க்கிறார்கள். இந்தப் பயிற்சிகளில் அவசரப்படவே கூடாது. ஒரு கட்டத்தில் முழு வெற்றி பெற்ற பிறகே அடுத்த கட்டத்துக்குப் போக வேண்டும். இந்தப் பரீட்சைகளிலெல்லாம் தேறிய பிறகும், நாயுடன் காப்பாளரும் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் மறு பயிற்சிக்கு வந்து கொண்டே இருப்பார்.

பயிற்சி அளிப்பதில் எவ்வளவு கண்டிப்பும் கடுமையும் தேவையோ அதே அளவு நாயுடன் ஓடிப் பிடித்து விளையாடுவதில் உற்சாகமும் காட்ட வேண்டும். வெற்றிகரமாக ஒரு காரியத்தை நாய் செய்து முடித்ததும் காப்பாளர்

அதனைத் தட்டிக் கொடுத்துப் பாராட்ட வேண்டும்.

எட்டு மணி நேர ஷிஃப்டில் நாய்கள் ரோந்து சுற்றுகின்றன. இதில் ஒரு மணி நேரம் அதற்குத் தேகப்பயிற்சி தரவும் உடலை சுத்தப்படுத்தவும் உணவளிக்கவும் போய் விடும். நாயுடன் சிறிது நேரம் நடந்து ரோந்து வருவார் காப்பாளர். பின்னர் நாயுடன் ஒரு போலீஸ் வானில் ஏறி பீட் பகுதி முழுவதையும் சுற்றி வருவார். இந்தப் போலீஸ் வான்கள் அளவில் சிறியதாயிருந் தாலும் மற்ற போலீஸ் வான்களைப் போலவே இவற்றிலும் ரேடியோ தொடர்பு உபகரணங்கள் உண்டு. ஒவ்வொரு வானிலும் இரு நாய்களும் அவற்றின் காப்பாளரும் இருப்பர்.

பொறுமை தேவை

நாயைத் தேர்ந்தெடுப்பதில் கவனம் செலுத்துவது போலவே காப்பாளர் தேர்விலும் கவனம் வேண்டும். நாயை நன்கு புரிந்துகொள்ள காப்பாளருக்கு விசேஷத் தகுதிகள் தேவை. எல்லாவற்றையும் விட முக்கியம் பொறுமையைக் கடைப்பிடிப்பது. பயிற்சி காலத்தில் நாய்க்கு ஏற்படக் கூடிய கஷ்டங்களை அநுதாபத்துடன் புரிந்துகொள்பவராய் இருப்பது அவசியம்.

ஒரு நாய் ஒன்பது அல்லது பத்து வருஷங்கள் சேவை புரிகிறது. பிறகு அதைக் காப்பாளருக்கே பரிசாக வழங்கிவிடுகிறார்கள். இதனை ஏற்கக் காப்பாளர் மறுப்பது மிக அபூர்வம். நாயிடம் தேவையான அளவு கருத்துச் செலுத்தத் தம்மால் முடியாதென்று உணரும் ஒருசிலரே மறுதலிப்பர்.

காணமற்போன மனிதர்களை நாய்கள் கண்டுபிடித்தன என்பதற்கு ஆயிரக் கணக்கான ஆதாரங்கள் உள்ளன. உயிரோடு கண்டுபிடித்ததும் உண்டு. இறந்தவர்களின் உடல்களைக் கண்டுபிடித்ததும் உண்டு. மரணம் யதேச்சையான விபத்தினால் நேர்ந்திருக்கலாம்; சில சமயம் கொலையாகவும் இருக்கலாம். கொலை நடந்திருக்கலாம் என்ற சந்தேகம் எழும்போது நாய்கள் பெரிதும் உதவுகின்றன. புதைக்கப்பட்ட உடல்களைக் கண்டுபிடித்திருக்கின்றன. இந்த நிபுணத்துவத்துக்கு வேறு ஒரு விதமான சோதனை சென்ற ஆண்டு ஏற்பட்டது.

நானூறு உடல்கள்!

இஸ்ரேல் – எகிப்திய யுத்தத்தின்போது சினாய் பாலைவனத்தில் இறந்துவிட்ட சிப்பாய்களின் உடல்களைக் கண்டுபிடிக்க பிரிட்டிஷ் போலீஸ் நாய்களின் உதவியை ஐ. நா. சபை நாடியது. மிக நவீன எலக்ட்ரானிக் கருவிகளை வைத்துக் கொண்டு பல வாரங்கள் பாடுபட்டதில் எட்டு சடலங்களே கிடைத்தன.

லண்டன் போலீஸைச் சேர்ந்ததும் லங்காஷயர் போலீஸைச் சேர்ந்ததுமான இரு நாய்கள் வந்தன. முன்பு யுத்த களமாக விளங்கிய பாலைவனத்தில், எதிரி டாங்குகளுக்கும் வீரர்களுக்கும் வைக்கப்பட்ட வெடி கண்ணிகளிடமிருந்து சாமர்த்தியமாகத் தப்பியபடியே தேடின. சில வாரங்களில் நாற்பது உடல்களைக் கண்டுபிடித்தன. பாலைவனத்தில் அலை அலையாகப் படியும் மணலில் இந்தச் சடலங்கள் பல அடி ஆழத்தில் புதைந்து கிடந்தன. இந்த வெற்றியைக் கண்டு மேலும் நான்கு பிரிட்டிஷ் போலீஸ் நாய்களைத் தருவித்தார்கள். இவை ஆறு வாரங்களில் நானூறு உடல்களைத் தேடிக் கண்டு பிடித்து விட்டன. இவற்றுள் ஒன்று எட்டு அடி ஆழத்தில் புதைந்து கிடந்தது! இரு தரப்பு அரசுகளும் இந்த நாய்களைப் போற்றி நன்றி செலுத்தின.

டாம் லாண்ட்ராக் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்

வி. ராஜேந்திரன்

கணவன்.

அவன் சொல்லுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியதுதான் ஒரு மனைவியின் கடமை.

ஆனால் இந்த ஒரு விஷயத்தில்...?

சூர்யாவுக்குத் தயக்கமாக இருந்தது. அவள் தயக்கம், ராகவனின் கோபத்தை அதிகப்படுத்தியது.

''வேறே யாருக்காகப் போய்ச் சொல்லப் போறே..... என்னுடைய பிரமோஷன்... அதுக்கு நீ இவ்வளவு தயங்குறேன்னு, எனக்கே வெட்கமாஇருக்கு...'' என்று முகத்தை முறித்துக் கொண்டான் ராகவன்.

''நான் ஏன் தயங்குறேன்னு உங்களுக்குப் புரியலே...'' என்று கூறினாள் சூர்யா சற்றுப் பயத்தோடு.

''ஏன்? மனைவி சிபாரிசிலே பிரமோஷன் வாங்கினவன்னு மற்றவங்க என்னைப் பற்றி ஒரு மாதிரியாப் பேசுவாங்களேன்னு?'' என்று அதே கோபத்தில் கேட்டான் ராகவன்.

''நான் அதைக்கூடப் பெரிசா நினைக்கலே!''

''பின்னே?''

அந்தக் காரணத்தைச் சொல்ல அவளுக்கு வாய் வரவில்லை. மௌனமாக இருந்தாள்.



மகராஜன் கொடுப்பான்

''வேறென்ன காரணம் ? சொல்லேன்.''

''சொன்னு நீங்க தப்பா நினைக்கக் கூடாது.''

''இல்லே.''

''எந்த வேலைக்குப் பிரமோஷன் ஆகணும்னு நீங்க ஆசைப்படுறீங்களோ — அதே வேலைக்கு உங்களைவிட சீனியர் ஒருத்தர் இருக்காருன்னு நீங்க சொன்னீங்க இல்லையா?''

''ஆமாம்...அதுக்கென்ன?''

''அப்படின்னு முறைப்படி அவருக்குத் தானே பிரமோஷன் கிடைக்கணும். நியாயப்படி அது அவருக்குச் சேர வேண்டியது. அதை நாம தட்டிப் பறிச்சா?''

ராகவனுக்குச் 'சே' என்றாகி விட்டது.

அவனவன் பதவி உயர்வுக்காகத் தவிக்கிறான். தவங் கிடக்கிறான். தகாத காரியங்களெல்லாம் கூடச் செய்கிறான். இவள் என்னடாவென்றால் தத்துவம் பேசுகிறாள்.

''நீ தத்துவம் பேசிக்கிட்டு இரு. நான் நல்லதொரு சந்தர்ப்பத்தை இழந்துட்டு...'' அவன் பேசி முடிக்கவில்லை. அவள் குறுக்கிட்டாள்:

''பரவாயில்லேங்க... உங்களுக்குன்னு ஒரு சந்தர்ப்பம் நிச்சயமா வரும். இன்னொருத்தருக்குச் சேர வேண்டியது நமக்கு வேண்டாம்....''

''வாயை மூடு''என்று கத்தினான் ராகவன்.

அதற்குமேல் கோபத்தில் என்ன சொல்வது என்று அவனுக்குத் தெரியவில்லை.

பயத்தில் என்ன சொல்வதென்று அவளுக்கும் தெரியவில்லை.

ராகவன் வேலை செய்யும் அலுவலகத்தில் அவனுடைய பதவிக்கு மேம்பட்ட பதவியொன்று காலியாக இருக்கிறது. வெளி நாடு சென்றிருக்கும் மானேஜிங் டைரக்டர் வந்தவுடன் இந்தப் பதவிக்கு ஒருவரை நியமிப்பார்.

அந்த ஒருவர் நிச்சயம் ராகவன் இல்லை. ஏனெனில் அவனை விட சீனியர் ஒருவர் இருக்கிறார்.

அதாவது சீனியாரிடி!

ராகவனுக்கு அதைப் பற்றிக் கவலை யில்லை.

தனியார் நிறுவனங்களைப் பொறுத்தவரை கம்பெனி அதிபர் நினைத்தால் போதும்.. யாருக்கு வேண்டுமானாலும் பிரமோஷன் கொடுத்து விடலாம்.

ஆனால் அவரை எப்படி நினைக்க வைப்பது?

ராகவனுக்கு அது ஒன்றும் பெரிய பிரச்னையே இல்லே. மானேஜிங் டைரக்டரின் மனைவியிடம் சூர்யா ஒரு வார்த்தை சொன்னால் போதும். அடுத்த நாளே பிரமோஷன் ஆர்டர்!

அப்படி யென்ன சூர்யாவுக்குச் செல்வாக்கு?

வேறொன்றுமில்லே. மானேஜிங் டைரக்டரின் மகள் திருமணத்துக்குச் சூர்யாவையும் அழைத்துக் கொண்டு போன ராகவன் அவரது மனைவியிடம் சூர்யாவை அறிமுகப் படுத்தி வைத்தான். அவ்வளவுதான்.

என்ன பாசமோ – சூர்யாமேல் உயிராகி விட்டாள் அந்த அம்மாள். வாரத்துக்கு ஒரு முறை சூர்யாவைப் பார்ப்பதற்காக வீட்டுக்கே வந்து விடுவாள். சுருக்கமாகச் சொன்னால் அந்த அம்மாளுக்குச் சூர்யா ஒரு மகள் மாதிரி.

இதைவிடப் பலமான சிபாரிசு என்ன வேண்டும்?

ஆனால் சூர்யா தயங்குகிறாளே... அது மட்டுமல்ல... அந்தத் தயக்கத்துக்கு ஒரு



வறட்டுக் காரணமும் சொல்கிறாள் – 'நியாயமாக இன்னொருவருக்குச் சேர வேண்டிய பதவியை நாம் தட்டிப் பறிக்கிறோமாம்.'

'நான்சென்ஸ்... இந்தக் காலத்தில் நியாய அநியாயங்களை எவன் பார்க்கிறான்... அவனவன் முன்னேறினால் சரி.'

"சூர்யா... நீ வந்து சொல்லாட்டியும் சரி. நானே அந்த அம்மாவைப் போய்ப் பார்க்கப் போறேன்" என்றான் ராகவன் ஒரு தீர்மானத்தோடு.

சூர்யா பேசாமல் இருந்தாள். என்ன பேசுவது... கணவனுக்குப் பிரமோஷன் வெறி தலைக்கேறி இருக்கும்போது?

"என்ன பேசாம இருக்கே?"

வேண்டாம் என்று சொன்னால் கணவன் கேட்கப் போவதில்லே. தனியே அனுப்பவும் மனமில்லே. சூர்யா மனத்தைத் தேற்றிக் கொண்டாள்.

'கணவனின் ஆசை அபிலாஷைகள்தான் பெரிது. தர்ம நியாயங்களெல்லாம் அதற்கு அப்புறம்தான்....'

"சரிங்க... நானும் வர்றேன். நாளைக்குக் காலையிலே போகலாம்... ஞாயிற்றுக் கிழமை!"

மறுநாள் காலை.

பதினொரு மணிக்கெல்லாம் அவர்கள் புறப்பட்டு பஸ் ஸ்டாண்டுக்கு வந்து விட்டார்கள்.

நல்ல வெயில். பஸ் ஸ்டாண்டு வெறிச்சோடிக் கிடந்தது. ஒரு பிச்சைக்காரக் கிழவனையும் கிழவியையும் தவிர வேறு யாருமில்லே.

அந்தக் கிழவி ஒரு குருடு.

"குருட்டுக் கழுதை...வேறே இடத்துக்குப் போகக் கூடாது? எனக்குப் போட்டியா இங்கேயே குந்திக்கினு இருக்காளே..."

இந்த முணுமுணுப்பைப் பார்த்து ராகவன் திரும்பிப் பார்த்தான். கிழவனின் அர்ச்சனை அது.

கிழவி வாயைத் திறக்கவில்லே. "சாமீ... தர்மம் போடுங்க சாமீ..." என்று நொக்கிப் போன குவளையைக் குலுக்கியபடியே இருந்தாள்.

சூர்யாவுக்கு வேதனையாக இருந்தது. பிச்சை எடுப்பதிலும் எத்தனை போட்டி பூசல்! பர்ஸைத் திறந்து சில்லறை இருக்கிறதா என்று துழாவிப் பார்த்தாள் சூர்யா. ஒரு ஐந்து பைசா, ஓர் இரண்டு பைசா.

ஐந்து பைசாவைக் கிழவிக்கும் இரண்டு பைசாவைக் கிழவனுக்கும் அவள் கொடுத்ததும்– "சனியன்! என் வயத்திலே மண்ணு போட வந்திருக்காளே..." என்று மீண்டும் ஆரம்பித்தான் கிழவன்..

சூர்யாவுக்குப் பொறுக்கவில்லே.

"ஏ, தாத்தா, அதுக்குத்தான் கண் தெரியாதே! அதை ஏன் திட்டுறே? நீ வேறே இடத்துக்குப் போனால் என்ன?" என்று கேட்டாளோ இல்லேயோ–

"நல்லா இருக்கும்மா நீ சொல்றது...இது எனக்கு வாடிக்கையான இடம்.. வருஷம் வருஷமா குந்திக்கினு இருக்கேன். இந்த மூதேவி போன வாரம் வந்தவ...." என்றான் கிழவன்.

சூர்யாவுக்கு வேதனே. ஆனால் ராகவனோ?

"ஒனக்குன்னு இந்த இடம் எழுதி வைச்சிருக்கா என்ன?" என்று சிரிப்போடு சிரிப்பாகக் கேட்டான்.

கிழவன் பதில் சொல்லாமல் கிழவியையே வெறித்துப் பார்த்தபடி இருந்தான்.

ராகவன் விஷயத்துக்கு வந்தான்.

"சூர்யா...! மானேஜிங் டைரக்டர் மனைவிகிட்டே என்ன சொல்லப் போறே?" என்று கேட்டான்.

''நான் ஒண்ணும் சொல்லல்லே. நீங்களே சொல்லுங்க...''

''நோ...நோ... நீயே சொல்லு...அவங்க தட்டிக் கழிக்கிற மாதிரி ஏதாவது சொன்ணுங்கன்னு நீ விட்டுடக் கூடாது. மறந்தும் எனக்கு சீனியர் ஒருத்தர் இருக்கிறதைச் சொல்லிவிடாதே!.....'' என்று ராகவன் சொன்னதை....

சூர்யா எந்த மறுப்பும் சொல்லாமல் கேட்டுக்கொண்டிருந்தபொழுது—

ஒரு பஸ் வந்தது. அது அவர்கள் போகக் கூடிய பஸ் இல்லே.

உட்கார்ந்திருந்த கிழவன் தட்டுத் தடுமாறி எழுந்து, ''சாமீ...'' என்று கெஞ்சியபடி பஸ்ஸை நெருங்கினுன். குருட்டுக் கிழவிக்கு என்ன தெரியும்? உட்கார்ந்த இடம்தான்.

பிரயாணிகள் இறங்கி ஏறியதும் பஸ் நகர்ந்தது. அப்போது—

பஸ்ஸிலிருந்த ஒருவர் கிழவியை நோக்கி ஏதோ வீசினுர். அது தவறுதலாகக் கிழவன் காலருகில் வந்து விழுந்தது. கிழவன் அதை ஆவலோடு எடுத்ததை ராகவன் ஓரக் கண்ணுல் பார்த்தான்.

பத்து பைசா!

இரண்டு மூன்று தடவை அதைத் தேய்த்துப் பார்த்துக் கொண்ட கிழவன், கிழவியைப் பார்ப்பதும், பிறகு தன் கையிலிருந்த காசைப் பார்ப்பதுமாக இருந்தான்.

ராகவனுக்குத் தமாஷாக இருந்தது.

கிழவன் என்ன செய்யப் போகிருன்? அவனைப் பொறுத்த மட்டில் பத்துப் பைசா என்பது பெரிய தொகை. அதைக் கிழவியிடம் கொடுத்து விடுவாணு?

''சூர்யா.. இந்த வேடிக்கையைப் பாரேன். யாரோ ஒருத்தர் அந்தக் கிழவிக்குப் பத்து பைசாவைத் தூக்கி எறிந்தார். அது கிழவன் கையிலே கிடைச்சிடுச்சு. அப்படியே அபேஸ் பண்ணப் போறுன்...'' என்று ராகவன் சூர்யாவிடம் சன்னமான குரலில் கூறியபடி கிழவனைப் பார்த்தபோது—

அந்தப் பத்துப் பைசாவைக் கிழவியின் குவளையில் அலட்சியமாகத் தூக்கி எறிந்த கிழவன்—

''ஏ மூதேவி... எவனே ஒருத்தன் ஒனக்கு பத்துப் பைசா எறிந்தான். ஒன் குவளையிலே போட்டிருக்கேன்'' என்றுன்.

''நீ அந்த பைசா எடுத்துக்க...'' என்று குவளையில் கையை விட்டுத் துளாவி அந்தக் காசை எடுத்து நீட்டினுள் கிழவி.

''சீ....சீ... உனக்குச் சேர வேண்டியது எனக்கு எதுக்கு? எனக்கும் ஒரு மகராஜன் கொடுப்பான்...'' என்று கிழவன் கூறியதும், ராகவனின் நெஞ்சில் யாரோ மிதித்த மாதிரி இருந்தது.

வாழ்க்கையின் எல்லேக் கோட்டில்—வறுமையின் மத்தியில் நிற்கும் ஒரு பிச்சைக்காரக் கிழவன் — அவனிடம் இவ்வளவு நேர்மையா?

'அந்தக் கிழவன் எங்கே... இன்னெருவருக்கு நியாயமாகச் சேர வேண்டிய பதவி உயர்வைத் தட்டிப் பறிக்க நினைக்கும் நாம் எங்கே? அந்தக் கிழவனின் நேர்மையில் துளிக்கூட நம்மிடம் இல்லாமல் போய்விட்டதா?' — ராகவனின் மனச்சாட்சி அவனைச் சாட்டையால் அடித்தது. அந்த வலியினுல் செயலற்று நின்றுவிட்ட அவனை—

''என்னங்க... டாக்ஸி ஒண்ணு நிக்குது... சீக்கிரமா அதிலே போயிடலாம்...'' என்ற சூர்யாவின் குரல் உசுப்பியது.

''இல்லே சூர்யா... நான் என் மனசை மாத்திக்கிட்டேன்.... வீட்டுக்குப் போகலாம் வா....'' என்று சுய உணர்வான கழிவிரக்கத்தில் ராகவன் சொன்னதும்—

''ஏன்...ஏன்...!'' என்றுள் சூர்யா.

''நோ... அது இன்னெருவருக்குச் சேர வேண்டிய பிரமோஷன்... அதுக்கு நான் ஆசைப்படக் கூடாது... எனக்கும் ஒரு நாள் பிரமோஷன் கிடைக்கும்''

சூர்யாவினுல் நம்ப முடியவில்லே.

இவரா இப்படிப் பேசுகிருர்!

''பல தடவை நானும் இதைத்தான் சொன்னேன். அப்ப எல்லாம் உங்களுக்குப் புரியலே... பஸ் ஸ்டாண்டிலே திடீர்னு ஞானேதயம் வந்திடுச்சாக்கும்!'' என்று சிரித்தபடியே கேட்டாள் சூர்யா.

அதனுலென்ன! ஞானேதயம் எந்த இடத்திலும் எந்தச் சமயத்திலும் வரலாம்.

சரஸாவின் மாணவி சுதா



பால சுப்பிரமணிய சங்கீத சபாவின் ஆதரவில் அரங்கேறிய குமாரி சுதா, கலேமாமணி கே. கே. சரஸாவின் மாணவி. பண்பட்ட நடனக் கலேத் தேர்ச்சியைச் சங்கராபரண அலாரிப்பிலேயே பரவலாகக் காண முடிந்தது. துரிதமான பாத வேலேகள், துல்லியமான அடவுகள், ஜதிஸ்வரத்தில் லய சுத்தம் யாவும் சேர்ந்து நடன நிகழ்ச்சியைக் களைகட்டச் செய்தன. மோகனத்தில் ''ஏன் பள்ளி கொண்டீரய்யா'' நல்லதொரு வடிவம் பெற்று பாவ பூர்வமான அபிநயங்களோடு வெளிப்பட்டது. ஸ்ரீமதி சீதா சுப்பிரமணியத்தின் தேன் குரலில் எழுந்த பதங்கள் நடன நிகழ்ச்சிக்குச் சிறப்புச் சேர்த்தன. மேடைக்கேற்ற முகப்பொலிவும், கலேயார்வமும் கொண்ட குமாரி சுதாவின் வருங்காலம் கலேவளம் பொருந்தியதாக விளங்கட்டும்.

— காந்தன்



அழகு உயர்ந்து திகழ

ராசி

'ராசி' பட்டு மற்றும் பருத்தி
நூல் புடவைகள் உங்கள் அழகு
எடுப்பாகத் திகழ உதவுகின்றன.




ராதா சில்க் எம்போரியம்
சன்னதித் தெரு, மயிலாப்பூர்
சென்னை-600 004

ராதா சில்க் எம்போரியம்
29, கோவிந்த் மஹால்,
86-B, மரைன் டிரைவ்
பம்பாய்-400 002

சார்பு நிறுவனம்
ராதா சில்க்ஸ்
தன் பில்டிங், மவுண்ட் ரோடு
சென்னை-600 002

EP-RASI-101



ஒவ்வொரு மாதமும் உங்கள் மனைவிக்கு ஒருபரிசு கொடுங்கள் -யூகோபாங்க்சேமிப்பு

எல்லோரையும் கவரத்தக்க ஒரு ஆச்சர்யம்! எதிர் பாராத பரிசு-ஆபரணத்தின் மினுக்குதலோ சேலையின் பளபளப்போ இல்லாதது. இருந்தும் அவளால் எதிர்க்க முடியாத ஒரு பரிசு. எக்காலத்திலும் அவளைச் சந்தோஷப் படுத்தும் சேமிப்பு.

விவரங்களுக்கு உங்கள் அருகில்
உள்ள யூகோ பாங்க் கிளையை
அணுகவும்

யூனைடெட் கமர்ஷியல் பாங்க்

UCOC-51A TAM

முப்பத்தி மூன்றாம் அத்தியாயம்

மந்திராலோசனை

வாதாபிப் பெரும் போரில் பல்லவ சைனியம் மகத்தான வெற்றியடைந்து ஒரு வார காலம் ஆயிற்று.

வாதாபிக் கோட்டையின் பிரதான, வாசலுக்கு எதிரில் சற்றுத் 'தூரத்தில்' பிரம்மாண்டமான ரிஷபக் கொடி வானளாவி உயர்ந்து கம்பீரமாகக் காற்றிலே பறந்து கொண்டிருந்தது.

அதனடியில் இருந்த கூடாரத்துக்குள்ளே மாமல்லரின் மந்திராலோசனை சபை கூடியிருந்தது.

மாமல்லரைச் சுற்றிலும் வீற்றிருந்த மந்திரிமார்களின் முகங்களில் மாபெரும் போரில் வெற்றிபெற்ற பெருமித உணர்ச்சியோடு சிறிது கவலைக்கு அறிகுறியும் காணப்பட்டது.

மாமல்லரின் வீர சௌந்தரிய வதனத்திலோ அச்சமயம் எள்ளும் கொள்ளும் வெடித்துக்கொண்டிருந்தன!

சிவகாமியின் சபதம்




மந்திராலோசனை சபையில் ஏதோ அபிப்பிராய பேதம் ஏற்பட்டுக் கார சாரமான விவாதம் நடந்திருக்கவேண்டும் என்று தோன்றியது.

அது வாஸ்தவந்தான்; அபிப்பிராய பேதத்துக்குக் காரணமா யிருந்தது வாதாபி நகரப் பிரமுகர்களிடமிருந்து வந்த சரணாகதி ஓலையேயாகும்.

* * *

போர்க்களத்திலிருந்துதிரும்பிவந்ததும் பல்லவ சைனியம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. ஒரு பகுதியைக் கிழக்கே யிருந்து வந்து கொண்டிருந்த வேங்கிப் படையைத் தாக்குவதற்கு வசதியாக இரண்டு காத தூரம் கிழக்கே கொண்டு போய் நிறுத்தி வைத்தார்கள். இன்னொரு பகுதி சைனியத்தைக் கொண்டு வாதாபிக் கோட்டையைத் தாக்கிக் கைப்பற்றுவதற்கு ஆயத்தம் செய்தார்கள்.

கோட்டையைத் தாக்கும் விஷயத்தில் மாமல்லர் மிகவும் ஆத்திரம் கொண்டிருந்தார். பெரும் போரில் வெற்றி பெற்றுத் திரும்பிய வீரர்களுக்கு இளைப்பாற அவகாசம் கொடுப்பதற்குக் கூட அவர் விரும்பவில்லை. சேனாதிபதியையும்





மற்றவர்களையும் ரொம்பவும் துரிதப்படுத்தினார். தாமே குதிரை மீதேறிக் கோட்டையைச் சுற்றி வந்து ஆங்காங்கே இருந்த வீரர்களை உற்சாகப் படுத்தினார். ஒரே மூச்சில் அகழியைக் கடப்பது எப்படி, கோட்டை மதில் மீது தாவி ஏறுவது எப்படி, அங்கே காவல் இருக்கக்கூடிய சளுக்க வீரர்கள் மீது ஈட்டியை எறிந்து கொல்லுவது எப்படி, கோட்டைக்குள் புகுந்ததும் அவர்கள் செய்ய வேண்டிய காரியங்கள் என்னென்ன ஆகிய விஷயங்களைப் பற்றி மாமல்ல சக்கரவர்த்தி தாமே அந்த வீரர்களுக்கு விவரமாகக் கூறினார். மாமல்லரின் இத்தகைய நடவடிக்கைகளைக் குறித்துச் சேனாதிபதி பரஞ்சோதி கோபமும் வருத்தமும் அடைந்து, "இந்தக் காரியங்களையெல்லாம் என்னிடம் விட்டுவிடக் கூடாதா? என்னிடம் தங்களுக்கு அவ்வளவு நம்பிக்கை இல்லையா?" என்று கேட்கும்படி நேர்ந்தது.

மாமல்லர் இப்படிக் கோட்டைத் தாக்குதலை ஆரம்பிக்கும் விஷயத்தில் அவசரப்பட்டதற்குக் காரணம், எங்கே தாக்க ஆரம்பிப்பதற்கு முன்னால் கோட்டைக்குள்ளிருந்து சமாதானத் தூது வந்துவிடுமோ என்ற பயம்தான். அவர் பயந்தபடியே உண்மையில் நடந்துவிட்டது. மறுநாள் கோட்டைத் தாக்குதலை ஆரம்பிக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டிருந்த சமயத்தில் கோட்டை முன் வாசலில் சமாதான வெள்ளைக் கொடி தூக்கப்பட்டது. நூலேணி வழியாக இருவர் இறங்கி வந்தார்கள். சேனாதிபதி பரஞ்சோதியிடம் தாங்கள் கொண்டு வந்த ஓலைகள் இரண்டையும் சமர்ப்பித்து விட்டுத் திரும்பினார்கள்.

அந்த ஓலைகள் இரண்டில் ஒன்று கோட்டைத் தலைவன் தளபதி பீமசேனன் சக்கரவர்த்திக்கு எழுதிக் கொண்டது. வாதாபி நகரப் பிரமுகர்கள் கூடி யோசித்துக் கோட்டையை எதிர்ப்பில்லாமல் காஞ்சி சக்கரவர்த்தியிடம் ஒப்படைத்துவிடுவது என்று தீர்மானித்திருப்பதாகவும், வாதாபி அரண்மனைகளில் உள்ள சகல செல்வங்களையும் கோட்டைக்குள்ளே இருக்கும் யானைப் படை குதிரைப் படைகளையும் மாமல்ல சக்கரவர்த்திக்குச் சமர்ப்பித்து விட இணங்குவதாகவும் இன்னும் அவர் விதிக்கும் மற்ற எல்லா நிபந்தனைகளுக்கும் உட்படச் சம்மதிப்பதாகவும் அந்த ஓலையில் எழுதியிருந்தது. மாமல்ல சக்கரவர்த்தி கருணை கூர்ந்து கோட்டையைத் தாக்காமலிருக்கவேண்டும் என்றும், நகர மாந்தர்களையும் அவர்களுடைய வீடு வாசல் சொத்து சுதந்திரங்களையும் காப்பாற்றிக் கொடுத்து அருள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டிருந்தது. மேற்படி சமாதானக் கோரிக்கையை மாமல்ல சக்கரவர்த்தி ஒப்புக் கொள்ளக் கருணை கூர்ந்தால் கோட்டைக் காவல் தலைவனாகிய தளபதி பீமசேனன் தன் கீழ் உள்ள எல்லா வீரர்களுடனும் சரணாகதி அடையச் சித்தமாயிருப்பதாகத் தெரிவித்து ஓலையை முடித்திருந்தான்.

மேற்படி சமாதான ஓலையைப் பற்றி எவ்விதத்திலும் சந்தேகப்படுவதற்கு இடம் இருக்கவில்லை. உண்மையும் அப்படித்தான். கோட்டை வாசல்





களின் உச்சி மண்டபங்களில் நின்று கவனித்த வாதாபிவாசிகள் பல்லவ சைனியத்துக்கும் சளுக்க சைனியத்துக்கும் நடந்த பெரும் போரைப் பற்றியும் அதன் முடிவைப் பற்றியும் ஒருவாறு தெரிந்து கொண்டார்கள். போரில் பல்லவ சைனியம் வெற்றி பெற்றது என்பது ஸ்பஷ்டமாகத் தெரிந்து விட்டது. அதன் பயனாக வாதாபி மக்களிடையே பெரும் பீதி உண்டாகிப் பரவிற்று. வீதிகளிலும் வீடுகளிலும் ஓலமும் புலம்பலும் எழுந்தன. கோட்டைக் காவலுக்கு அவசியமான வீரர்களோ யுத்த தளவாடங்களோ இல்லையென்பதும், முற்றுகை நீடிக்கும் பட்சத்தில் அதைச் சமாளிப்பதற்கு வேண்டிய உணவுப் பொருள் நகருக்குள் சேமித்து வைக்கப் படவில்லை யென்பதும் எல்லாருக்கும் தெரிந்திருந்தன. ஒரு மாதம் முற்றுகை நீடிக்கும் பட்சத்தில் நகரமக்கள் பட்டினி கிடக்கும்படி நேரிடும். சத்துருப் படைகள் கோட்டையைத் தாக்கி ஜயித்து உள்ளே பிரவேசித்தால், அப்போது அவ்வீரர்களிடம் ஜனங்கள் எவ்விதக் கருணையையும் எதிர்பார்க்க முடியாது. இலட்சக்கணக்கான ஸ்திரீகளும், குழந்தைகளும் வயோதிகர்களும் அதோகதி அடையும்படி நேரிடும்.

இதையெல்லாம் யோசித்து வேறு வழியில்லை யென்று கண்டதன் பேரில் தான் வாதாபி நகரப் பிரமுகர்களும் கோட்டைக் காவலன் பீமசேனனும் மேற்கண்டவாறு சமாதான ஓலை அனுப்பினார்கள்.

அதன் பேரில் யோசித்து முடிவு செய்வதற்கு மாமல்லர் மந்திராலோசனை சபை கூட்டினார். இந்த மந்திராலோசனை சபையில் மாமல்லர் சிறிதும் பொறுமையின்றி ஆத்திரப்பட்டு எரிந்து விழுந்ததைப் போல் அதற்குமுன் எப்போதும் நடந்து கொண்டது கிடையாது. ஓலையைப் பார்க்கும் போதே அவருக்குக் கோபம் கோபமாய் வந்தது. எல்லாரும் கேட்கும்படி ஓலை படிக்கப்பட்ட போது மாமல்லரின் கண்களில் தணல் பறந்தது.

எந்தக் காரணத்தினாலோ அந்தச் சமாதானக் கோரிக்கை சக்கரவர்த்திக்குப் பிடிக்கவில்லை என்பது அவருடைய முகபாவத்திலிருந்தும் பேச்சுவார்த்தை நிகழ்ந்ததிலிருந்தும் அங்கிருந்த மற்றவர்களுக்கு நன்றாய்த் தெரிந்தது.

எனினும், சக்கரவர்த்தி அந்த ஓலை விஷயமாக அவர்களுடைய அபிப்பிராயத்தைக் கேட்ட போது தங்கள் மனத்தில் பட்டதை ஒவ்வொருவரும் உள்ளது உள்ளபடி சொன்னார்கள். அதாவது, சரணாகதியை ஒப்புக் கொண்டு நகரத்தையும் நகர மக்களையும் காப்பாற்ற வேண்டியதுதான் என்று சொன்னார்கள்.

சக்கரவர்த்தியின் கோபம் மேலும் மேலும் அதிகமாகி வந்தது. ஒவ்வொருவரும் சமாதானத்துக்கு அனுகூலமாக அபிப்பிராயம் சொல்லி வந்தபோது மாமல்லர், ''அப்படியா?'' ''ஓஹோ!'' என்று பரிகாசக் குரலில் சொல்லிக் கொண்டு வந்தார். சேனாதிபதி பரஞ்சோதியும் இலங்கை மானவன்மரும் மட்டும் அபிப்பிராயம் சொல்லாமலிருந்தார்கள்.

''நீங்கள் ஏன் ஒன்றும் சொல்லாமல் சும்மா நிற்கிறீர்கள்? சேனாதிபதி! உங்களுடைய அபிப்பிராயம் என்ன?'' என்று மாமல்லர் குறிப்பிட்டுக் கேட்டார்.

''பிரபு! நானும் சண்டையை நிறுத்த வேண்டும் என்றுதான் அபிப்பிராயப்படுகிறேன். குற்றமற்ற ஜனங்களைக் கஷ்டப்படுத்துவதில் என்ன பிரயோசனம்? மேலும் சரணாகதி அடைவதாக அவர்கள் சக்கரவர்த்தியிடம் உயிர்ப்பிச்சை கேட்கும்போது வேறு என்ன செய்ய முடியும்?'' என்றார் பரஞ்சோதி.

'' சேனாதிபதி! என்ன சொல்கிறீர்? நீர்கூடவா இப்படியெல்லாம் தர்ம நியாயம் பேச ஆரம்பித்துவிட்டீர்? புலிகேசி நம் நாட்டில் செய்த அக்கிரமங்களையெல்லாம் மறந்துவிட்டீரா? இந்த நகரத்தை நாம் எரித்துச் சாம்பலாக்க வேண்டிய அவசியம் இருக்கிறதென்பது உமக்குத் தெரியாதா? தெரிந்திருந்துமா இப்படிப் பேசுகிறீர்? திடீரென்று உங்களுக்கெல்லாம் என்ன வந்து விட்டது? யுத்தம் போதும் போதும் என்று ஆகிவிட்டதா? இரத்தத்தைக் கண்டு பயந்துவிட்டீர்களா? உயிர் மேலும் உடைமை மேலும் ஆசை வந்துவிட்டதா? மானவன்மரே! நீர் ஒருவராவது என்னுடைய கட்சியில் இருக்கிறீரா? அல்லது நீரும் இந்த

கோத்ரெஜின்

புதிய டர்கிஷ் பாத்



அமோகமான சோப், நம்பமுடியாத விலையில்

Rs. 1·10 மட்டுமே (வரிகள் தனி)

கோத்ரெஜ் மட்டுமே அளிக்கக் கூடிய சோப் அபரிமிதமான நுரை...நீடித்த உபயோகம்...புத்துணர்ச்சியளிக்கும் நறுமணம் மற்றும் சிக்கன விலை.

கோத்ரெஜின் டர்கிஷ் பாத்

Interpub/GTB/1/75/TAM


ஒப்பற்ற வெள்ளைவெளேர்-
சலவைக்கே ஸூப்பர் ஸர்ஃப்...
ஒப்பற்ற வெள்ளைவெளேர்!
அதி உன்னதமான துலக்கும் சக்தி படைத்தது
ஸூப்பர் ஸர்ஃப், கண்மறைவான அழுக்கையும்
அகற்றிவிடுகிறது. பிறர் பொருமைப்படும்
அளவுக்கு அதி உன்னதமான வெண்மை
அளிக்கிறது உங்கள் துணிகளுக்கு.
அதிசயமென்ன, இந்தியாவின் தலைசிறந்த ரகமாக
விளங்குகிறது ஸூப்பர் ஸர்ஃப்!
SUPER
Surf
washes whitest of all
இந்துஸ்தான் லீவரின் தரமான தயாரிப்பு
லின்டாஸ்-SU. 181-140 TM.

புத்த பகவானுடைய பரமாவந்த சிஷ்யர்களுடன் சேர்ந்து சாத்விகத்தை மேற்கொண்டு அஹிம்சாவாதியாகிவிட்டாரா ?'' என்று தீச்சுடர் போன்ற வார்த்தைகளை மாமல்லர் பொழிந்தார்.

மாமல்லருடைய மனப் போக்கை மானவன்மர் நன்கு உணர்ந்திருந்தார். சிவகாமிக்கு மாமல்லர் கொடுத்திருந்த வாக்குறுதியை எந்தவிதத்திலும் நிறைவேற்ற விரும்புகிறார் என்பதையும், சமாதானக் கோரிக்கையை ஒப்புக்கொண்டால் மேற்படி வாக்குறுதியை நிறைவேற்ற முடியாதென்பதையும் அவர் உணர்ந்திருந்தார். உண்மையில் சேனாதிபதி பரஞ்சோதி சமாதானத்துக்குச் சாதகமாக அபிப்பிராயம் சொன்னது மானவன்மருக்கு மிக்க வியப்பை அளித்தது.

சமாதானத்துக்கு இணங்கிவிட்டால், கோட்டைத் தாக்குதலுக்கென்று மானவன்மர் விசேஷப் பயிற்சி அளித்திருந்த யானைப் படையை உபயோகப்படுத்துவதற்குச் சந்தர்ப்பமே இல்லாமல் போய்விடும் என்பது ஒரு பக்கம் அவர் மனத்தில் கிடந்தது.

இந்த நிலைமையில் மானவன்மர், ''பிரபு! பல்லவ நாட்டு வீர தளபதிகள் எல்லாரும் ஒருவித அபிப்பிராயம் சொல்லியிருக்கும்போது வேறு அபிப்பிராயம் கூற எனக்குத் தயக்கமாயிருக்கிறது. அதிலும் சேனாதிபதியாருக்கு மாறாக எதுவும் சொல்ல நான் விரும்பவில்லை !'' என்றார்.

மாமல்லர் அதிகாரத் தொனியில், ''மானவன்மரே ! எல்லாரும் ஒரே அபிப்பிராயத்தையே தெரிவிக்க வேண்டும் என்றிருந்தால் இந்த மந்திராலோசனை சபை கூட வேண்டியதில்லை. இங்கே எல்லாரும் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தைத் தைரியமாகக் கூறலாம். யாருக்கும் அஞ்ச வேண்டியதில்லை !'' என்று கர்ஜித்தார்.

''பிரபு! தாங்கள் ஆக்ஞாபிப்பதால் சொல்கிறேன். இந்தச் சமாதானக் கோரிக்கையை ஒப்புக் கொள்ளக் கூடாது என்று எனக்குத் தோன்றுகிறது. செய்கிற பாதகத்தையெல்லாம் செய்துவிட்டு அப்புறம் சரணாகதி அடைந்துவிட்டால் போதுமா?'' என்பதற்குள் சேனாதிபதி பரஞ்சோதி குறுக்கிட்டு, ''வாதாபி நகர ஜனங்கள் என்ன பாதகத்தைச் செய்தார்கள் ? பாதகன் புலிகேசி செய்த காரியத்துக்கு அவர்களை எப்படிப் பொறுப்பாக முடியும் ?'' என்று கேட்டார்.

அதற்கு மானவன்மர், ''சேனாதிபதி இவ்விதம் சொல்வது எனக்கு மிக்க வியப்பாயிருக்கிறது. புலிகேசி செய்த அக்கிரமங்களையெல்லாம் இந்த ஜனங்கள் பார்த்துச் சந்தோஷப்பட்டுக் கொண்டுதானே இருந்தார்கள் ? அந்த அக்கிரமங்களைத் தடுப்பதற்கு இவர்கள் எந்தவிதத்திலாவது முயன்றார்களா ? பாதகன் புலிகேசிக்குப் பலம் அளித்ததெல்லாம் இவர்கள்தானே ? புலிகேசி கொள்ளையடித்துக் கொண்டு வந்த பொருள்களையெல்லாம் பகிர்ந்து அநுபவித்தது இவர்கள்தானே ? புலிகேசி சிறைப்பிடித்துக் கொண்டு வந்த ஆண்களையும் பெண்களையும் அடிமை கொண்டு வேலை வாங்கியது இவர்கள்தானே ? ஆயனச் சிற்பியாரின் குமாரியை இந்த நகரின் நாற்சந்தியில் நடனமாடச் சொல்லிப் பார்த்து இந்த நகர மக்கள் பல்லவ சாம்ராஜ்யத்தையே அவமதித்து அழியா வசைக்கு ஆளாக்கவில்லையா? இதையெல்லாம் நமது வீர சேனாதிபதி மறந்து விட்டாரா?'' என்று மானவன்மர் கூறியபோது மாமல்லரின் பார்வை கூரிய வாளைப்போல் சேனாதிபதியின் மீது பாய்ந்தது.

அப்போது சேனாதிபதி பரஞ்சோதி, ''பல்லவேந்திரா ! மானமவன்மருக்கு ஞாபகம் இருக்கும் விஷயம் எனக்கு ஞாபகம் இல்லாமல் போய்விடாது. அதைப் பற்றித் தங்களிடம் தனியாகப் பிரஸ்தாபிக்க வேண்டும் என்றிருந்தேன். ஆனால், மானவன்மர் சிவகாமி தேவியைப் பற்றிப் பேச்சு எடுத்துவிட்டபடியால் நானும் இப்போதே சொல்லிவிடுகிறேன். சமாதான ஓலை கொண்டு வந்த தூதர்கள் இன்னோர் ஓலை எனக்குத் தனியாகக் கொண்டு வந்தார்கள். சிவகாமி தேவி எழுதிய அந்த ஓலை இதோ இருக்கிறது. தயவுசெய்து பார்த்தருள வேண்டும்!'' என்று சொல்லித் தமது வாளின் உறையிலிருந்து ஓலை ஒன்றை எடுத்துச் சக்கரவர்த்தியிடம் கொடுத்தார்.

பல்லவேந்திரர் அந்த ஓலையைப் படித்தபோது ஏற்கனவே சிவந்திருந்த அவருடைய கண்கள் இன்னும் அதிகமாகச் சிவந்து தணற்பிழம்புகளாகத் தோன்றின. அளவு மீறிய கோபத்தினால் ஓலையைப் பிடித்திருந்த அவருடைய கைகள் நடுங்கின.

படித்து முடித்ததும் அந்தப் பனை ஓலைச் சுருளைச் சக்கரவர்த்தி தம் இரு கரங்களினாலும் கிழித்துப் போட யத்தனித்தார்.

அப்போது சேனாதிபதி குறுக்கிட்டு, ''பல்லவேந்திரா! ஓலை என்னுடையது. கருணைகூர்ந்து திருப்பிக் கொடுத்தருள வேண்டும்!'' என்றார். (தொடரும்)


விரிந்த சிறகுடனே
விரைந்தெழும் பறவைபோல்
விண் மீனைப் பறித்துவரும்
விசித்திரக் கண்ணோட்டம்
வீசுவது டெரிகோலா சேலையடி.
கட்டாவ்



திறமை மிக்க திலகங்கள்

இந்திரா சோமசுந்தரம்

தந்தையார் திரு ப. மு. சொக்கலிங்கம் பிள்ளை மருத்துவத் துறையில் டாக்டர். புதல்வியோ தமிழ் இலக்கியத் துறையில் ஒரு டாக்டர்.

குழந்தைகள் வெறும் பள்ளிக் கல்வியினால் மட்டும் பெரும் பயன் அடைய மாட்டார்கள் என்ற நம்பிக்கையில் தினமும் வீட்டுக்கு ஓர் ஓதுவாரை வரவழைத்து, குழந்தைகளுக்குப் பாவத்துடன் பக்திப் பாடல்களைக் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்திருந்தார் தகப்பனார். புதல்விக்கு அந்தப் பாடல்களைக் கற்றுக் கொள்வதில் இயல்பாகவே ஆர்வம் இருந்தது. அந்த ஆர்வமே பிற்காலத்தில் 'திருவாசக'த்தையே ஆராய்ச்சி நூலாக எடுத்துக் கொண்டு விரிவான கட்டுரை எழுதி, சென்னை சர்வ கலாசாலையில் டாக்டர் பட்டம் வாங்க உதவியது. அந்தப் பெண்மணிதான் இப்போது கிண்டியில் உள்ள பச்சையப்பன் அறக் கட்டளையைச் சேர்ந்த செல்லம்மாள் கல்லூரியின் முதல்வர் ஸ்ரீமதி இந்திரா சோமசுந்தரம்.

பழகுவதற்கு இனிய சுபாவமும் உயர்ந்த பண்புகளும் உள்ள இவரை நான், கடந்த ஐந்து வருடங்களாக அறிவேன். இப்போது நானும் அவரும் அனைத்துக் கல்லூரிகள், சர்வ கலாசாலை சம்பந்தப்பட்ட பல குழுக்களில் அங்கம் வகிப்பதால், அவருடைய உழைப்பை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. எந்தப் பொறுப்பையும் ஒரு வித அலங்காரத்துக்காகவோ விளம்பரத்துக்காகவோ அவர் ஏற்றுக் கொள்ளாமல் திறம்படக் கடமையாற்றுவா...

பச்சையப்பன் கல்லூரியில் இவர் எம். ஏ. வகுப்பில் தமிழ்ப் பாடத்தை எடுத்துக் கொண்டு சேர்ந்த போது, இவருக்கு ஆசிரியர் டாக்டர் மு. வ. அவரது நூல்களை ஏற்கனவே படித்திருந்த இவருக்கு, அவரிடமே நேரில் பாடம் கற்றுக் கொள்ளும் வாய்ப்புக் கிட்டியபோது; அளவற்ற மகிழ்ச்சி. இதையும்விட மட்டற்ற பெருமிதம், இவர் தம் கணவருடன், டாக்டர் மு.வ.வின் இல்லத்திலேயே ஒரு பகுதியில் இரண்டு ஆண்டு காலம் குடியிருந்து இல்லறம் நடத்தியதுதான். அதற்கு முன்பு மு. வ. அவர்களின் இல்லத்தில் யாரும் குடியிருந்ததில்லை. அப்புறமும் யாரும் அனுமதிக்கப்படவில்லை.

இவரும் ஒரு மருத்துவர் ஆக வேண்டும் என்றுதான் இவர் தந்தை விரும்பினார். அதற்காகவே இவர், விஞ்ஞான பாடங்களைத் தேர்ந்தெடுத்து அண்ணாமலை சர்வ கலாசாலையில் பி.எஸ்ஸி. வகுப்பில் சேர்ந்தார். ஆனால் இவரைக் கவர்ந்ததோ, இரண்டாவது பிரிவின் கீழ் வந்த தமிழ்ப் பாடம். அதை போதித்தவர் காலம் சென்ற டாக்டர் ஏ. ஸி. செட்டியார். கடைசிப் பரீட்சையில் இவர் தமிழ்ப் பாடத்தில் முதல் பரிசு வாங்கவே, இவர் வாழ்க்கைப் பாதையின் திசை திரும்பியது. அப்போது பூம்புகாரில் நடந்த தமிழ் விழாவைப் பார்க்கச் சென்ற இவர், டாக்டர் சேதுப்பிள்ளை, மு. வ., தெ. பொ. மீனாட்சி சுந்தரம் ஆகியோரின் இனிய சொற்பொழிவுகளைக் கேட்டார். எண்ணமெல்லாம், மருத்துவத் துறையிலிருந்து விலகித் தமிழ் மொழியால் வந்துவிட்டது. தந்தையும் விட்டுக் கொடுத்துவிட்டார். இவர் எம். ஏ. பட்டம் பெற்றது, உத்தியோகம் தேடும் நோக்கத்தில் அல்ல! ஆத்ம திருப்திக்காகத்தான். ஆனாலும் ஆங்கிலத்திலும் தமிழிலும் நன்கு தேர்ச்சி பெற்றிருந்த இவரைத் தேடி ஓர் உத்தியோகம் வந்தது.

முதல் மாதப் பணிக்கான ரூ. 250 - ஊதியத்தை 'செக்' காகப் பெற்ற ஸ்ரீமதி இந்திராவுக்கு ஒரே உணர்ச்சிக் கொந்தளிப்பு. அதை அந்த நேரத்தில் அங்கே வந்த ஆர். பி. எஸ். அவர்கள் காலடியில் வைத்து வணங்கி எழுந்தார். ஆர். பி. சேதுப்பிள்ளை தானே, அந்தப் பணிக்காக இந்திராவைத் தேர்ந்தெடுத்தார்!

'' எழுந்திரம்மா ! உன்னிடம் இருக்கும் திறமைக்கு, மாதம் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாய் கொடுத்தால்கூடத் தகும்'' என்று பாராட்டினார் ஆர்.பி.எஸ். ''அந்த வாக்கு இப்போது ஏறத்தாழப் பலித்துக் கொண்டு வருகிறது'' என்கிறார் ஸ்ரீமதி இந்திரா.

எம். லிட். ஆராய்ச்சிப் பட்டத்துக்குப் பிறகு இவர் வேலைக்குப் போக முயற்சிக்கவில்லை. ஆனாலும் ஒரு நாள் செய்திப் பத்திரிகையில் வெளியான விளம்பரம் இவர் கவனத்தைக் கவர்ந்தது. வெளியூரில் ஆரம்பிக்கப்படவிருக்கும் கல்லூரி, தமிழ் ஆசிரியை, டியூட்டர் போன்ற பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரியது. இவரும் வேடிக்கையாக, கணவரிடம்கூட யோசனை கேட்காமல், டியூட்டர் பதவிக்கும், ஆசிரியை பதவிக்கும் விண்ணப்பங்கள் போட்டார். ஒரு பதிலும் வரவில்லை. ஒரு மாத காலம் ஓடி விட்டது. ஒரு நாள் நகரக் கல்லூரி

சொல்பவர்:

கே. எஸ். நாகராஜன்







தந்தைக்கு விழா தனயனுக்கும் விழா

இவ்வாண்டு ரசிகமணி டி. கே. சி.யின் தொண்ணூற்றாவது பிறந்த நாள் விழா, அவரது மகன் தீபன் அவர்களுக்கும் சேர்த்து நடந்த விழா போல் அமைந்து விட்டது!

சென்னையில் பேசிய திரு வி. சந்திரசேகரனும் சரி, குற்றாலத்தில் பேசிய திரு பி.ஸ்ரீ. ஆசார்யா அவர்களும் சரி காலம் சென்ற திரு தீபன் அவர்களைப் பற்றி மனம் நெகிழ்ந்து பேசினார்கள். மாடர்ன் ரிவியூ பத்திரிகையில் ஒரு கட்டுரையின் அடியில் காலி இடத்தை நிரப்ப "கடவுள் பெரிய சாம்ராஜ்யங்களைக் கண்டு சலித்துக் கொள்கிறார்; ஆனால் சின்னஞ்சிறு பூவைக் கண்டு அவர் சலித்துக் கொள்வதே இல்லை" என்ற கருத்துள்ள வாக்கியம் வெளியாகியிருந்தது. இதைப் படித்த தீபன், திரு சந்திரசேகரனிடம், "இது மிக நன்றாக இல்லையா!" என்று சொன்னாராம். சந்திரசேகரன் இவ்வளவு சின்ன வயதில் இவ்வளவு கருத்தாழம் உள்ள வாக்கியத்தை ரசிக்க வேண்டுமானால் திரு தீபன் சாதாரண இளைஞன் அல்ல என்று கருதினாராம். அதற்கேற்பவே, தீபன் இலக்கியத் தரம் வாய்ந்த அருமையான கதைகள் கட்டுரைகள் கவிதைகள் எல்லாம் இயற்றிப் பெருமையுற்றார்.

திருக்குற்றாலத்தில் ரசிகமணியைப் பற்றிப் பேசி வந்த பி. ஸ்ரீ.யும் தீபனைப் பற்றிக் கூறினார். பி.ஸ்ரீ.க்கும் டி. கே. சி.க்கும் நட்பு ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே ஏற்பட்டதாகும். ஆரம்ப நாட்களில் டி. கே. சி. கூச்சத்தின் உறைவிடமாகத் திகழ்ந்தார் என்று பி.ஸ்ரீ. சொன்னதும், 'டி.கே.சியா அப்படி இருந்தார்?' என்று சபையோர் வியந்து போயினர். கம்பராமாயணத்தில் டி. கே. சி. செய்த சில திருத்தங்களைப் பற்றி மிகவும் பாராட்டிப் பேசி வந்த போதுதான் தீபனைப் பற்றிய ஒரு விஷயத்தை பி. ஸ்ரீ. சொன்னார்.

ஒரு நாள் டி.கே.சி. சுந்தரகாண்டத்திலிருந்து ஒரு பாடலைச் சொல்லி வந்தார். அசோக வனத்திலுள்ள சீதை ராமனைப் பற்றி நினைக்கையில் குகனோடு அவர் செய்து கொண்ட தோழமையையும் நினைவுகூர்கிறாள்.

ஆழநீர்க் கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக்(கு) எம்பிநின் தம்பியான்
தோழன் மங்கை கொழுந்தி எனச்சொன்ன
வாழி நண்பினை உன்னி மயங்குவாள்

இந்தப் பாடலில் இரண்டாவது அடியின் கடைசியில் "யான்" என்று டி. கே. சி. திருத்தம் செய்துள்ளார். "யான் தோழன்" என்று வரும். பழைய பாடம் "நீ தோழன்" என்பது. இது அவ்வளவு பொருத்தமாக இல்லை என்று டி. கே. சி. விளக்கிக் கொண்டிருந்தார். கம்பனில் ஊறிய பி. ஸ்ரீ. அவர்களுக்கு டி. கே. சி. செய்த திருத்தம் மிகப் பொருத்தமாகப்பட்டது. அப்போது அருகிலிருந்த தீபன், "அப்பா! நீங்கள் செய்த திருத்தம்தான் சரி, கம்பனே கூட அப்படித்தான் சொல்லியிருக்கிறான். முந்திய அயோத்திய காண்டத்தில் குகப்படலத்தில் குகனை,

தோழமை என்றவர் சொல்லிய
சொல் ஒரு சொல்அன்றே

என்கிறான். அதனால் இங்கு 'யான் தோழன்' என்றுதான் இருக்க வேண்டும்!" என்றாராம். சிறு வயதில் தீபன் இவ்வளவு நுட்பமாகக் கம்பராமாயணத்தைப் படித்திருந்ததைக் கண்டு வியந்தார் பி. ஸ்ரீ. தீபன் மட்டும் இன்னும் சில நாட்கள் உயிருடன் இருந்திருந்தாரானால், சில அம்சங்களில் தந்தையையே விஞ்சியிருப்பார்!" என்று பி. ஸ்ரீ. குறிப்பிட்டார்.

—எஸ். வி. எஸ்.

ஒன்றில் பணியாற்றும் பேராசிரியர் ஒருவரும் அவர் மனைவியும் இவரைச் சந்திக்க வந்தார்கள். அவர்கள் தெரிவித்த விஷயம் ஸ்ரீமதி இந்திராவை ஆச்சரியத்துக்குள்ளாக்கியது. இவர் டியூட்டர் பதவிக்காக விண்ணப்பித்துக் கொண்ட வெளியூர்க் கல்லூரியின் நிர்வாகிகள், இவரை அந்தக் கல்லூரிக்கு முதல்வராகவே தேர்ந்தெடுத்துவிட்டனர்!


அந்தக் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றிய மூன்றரை வருட காலத்தில், சர்வகலாசாலைப் பரீட்சைகளில் மாணவிகளை எழுபத்திரண்டு சதவிகிதம் வெற்றிபெறச் செய்தார். பிறகு அந்தக் கல்லூரியில் பி. ஏ. வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்ட போது, இவராகவே அங்கிருந்து விலகி, சென்னைக்கு வந்துவிட்டார். புதிதாகத் தொடங்கப்பட்ட கிண்டி செல்லம்மாள் கல்லூரியில் முதல்வராகப் பதவி ஏற்றுக் கொண்டார். அந்தக் கல்லூரியை மிகச் சிறந்த மகளிர் கல்லூரியாக்கத் தம் முழுக் கவனத்தையும் செலுத்தி வருகிறார்.

—கோமதிஸ்வாமிநாதன்


புத்தக விற்பனையில் புதிய சகாப்தம் படைத்தவர் குல்ஷன் நந்தா.
கடீபதங்க், ஷர்மீலீ போன்ற வெற்றிப்படங்களின் கதை ஆசிரியர் குல்ஷன் நந்தா.
குல்ஷன் நந்தாவின்
இன்பத் தென்றல்
தமிழாக்கம்:
ரா. வீழிநாதன்
கல்கி 28.9.75 இதழிலிருந்து தொடங்குகிறது
விஜயா

டிஸ்கான்

40% எ.:கிலை மீதப்படுத்தும் உறுதியான பிடிப்பு




டிஸ்கான் பார்கள் ரீ-இன்ஃபோர்ஸ்ட் கான்க்ரீட் வேலைகளுக்கு வலிமையளிக்கின்றன. 40% எ.:கிலை மீதப்படுத்த உதவுகின்றன. கட்டிடங்கள், இணைப்புப்பாலங்கள் அணைக்கட்டுகள், ரிஸர்வாயர்கள், அஸ்திவாரங்கள், நீர்ப் பாசனத் துறை மற்றும் மின்சார சம்பந்தக் கட்டிட வேலைகளில் டிஸ்கான் கோல்ட் ட்விஸ்டெட் பார்கள் சிக்கனத்தை ஏற்படுத்துவதோடு வலிமையூட்டுகின்றன.

சொந்தமாகவே நம் நாட்டிலேயே தயாரிக்கப்படும் ஹை ஸட்ரெங்க்த் பார் டிஸ்கான் மட்டுமே ஆகும். இது டாடா ஸ்டீலின் அதிநவீன விஞ்ஞான முறைகளின் விளைப்பயனாகும். ஜூர்கியில் உள்ள ஸ்ட்ரக்சரல் எஞ்ஜினீயரிங் ரிஸர்ச் ஸென்டர் மூலம் உள்நாட்டு ஆராய்ச்சித் திறன், வேலைத்திறன் இவற்றை க்ரிப் பார்த்துறையில் பயன்படுத்தி டாடா ஸ்டீல் மதிப்புள்ள அந்நியச் செலாவணியை மீதப் படுத்த உதவியுள்ளது.

ஒவ்வொரு டிஸ்கான் க்ரிப் பாரும் ஐஎஸ்ஐ தாகிர்ணயம் ஐஎஸ் 1786க்குட்பட்டுள்ளது. மேற்பட்ட விவரங்களுக்கு எழுத வேண்டிய முகவரி:

தி டைரெக்டர் ஆ:ப்
மார்க்கெட்டிங் & ஸேல்ஸ்
தி டாடா அயர்ன் அண்ட்
ஸ்டீல் கம். லிட்.
43, சௌரிங்கீ ரோடு,
கல்கத்தா 700016.

டாடா ஸ்டீல்



TIS-9089

நறுமணம்

ரா. வீழிநாதன்

சினிமாக் கதை: 10

“உன் கையில் இதென்ன சுட்ட வடு?''

அந்தக் கிராமத்துக்கு வைத்திய விஷயமாக வந்த டாக்டர் விருந்தாவன் அவள் கையில் உள்ள வடுவைப் பார்த்துக் கேட்டார்.

அவள் விழிகள் பேசினவே ஒழிய, அவள் பேசவில்லை. அவளுக்குப் பதிலாக சிகிச்சை பெற்ற மூதாட்டி சொன்னாள்:

''இவள் பெயர் குஸும். இவளுக்கு ஐந்து வயதில் கல்யாணம். ஆனால் புகுந்த வீட்டார் ஏனோ இவளைப் புறக்கணித்து விட்டனர். என்ன, ஏது என்று எந்தக் காரணமும் கூறவில்லை. இருந்தாலும் இவள் கொண்ட கணவனையே தெய்வமாகப் போற்றி வழிபடுகிறாள். அவன் முகம்கூட இவளுக்குத் நினைவிருக்க நியாயம் இல்லை. ஆனால் அவன் நினைவு மறக்கவில்லை. அந்தப் பிள்ளை வேறு ஒருத்தியை மணந்து கொண்டு விட்டான் என்று கேள்விப்பட்டபொழுது இந்தப் பெண் செய்த காரியம்தான் இந்தச் சுட்ட வடு. இளம் பிராயத்திலேயே இவளது கையில் அந்தப் பிள்ளையின் பெயரைப் பச்சை குத்தியிருந்தார்கள். அந்தப் பிள்ளை வேறு ஒருத்தியின் கைக்குச் சொந்தமாகி விட்டான் என்று தெரியவே, ஒருநாள் இவள் விளக்குச் சுடரில் கையைக் காட்டிவிட்டாள்; பொசுங்கி விட்டது!''

இதைக் கேட்ட விருந்தாவனுக்குத் தன் உள்ளம் பொசுங்கினாற் போன்றதோர் உணர்வு. வீட்டுக்குத் திரும்பியவன் தன் தாயாரிடம் முதல் காரியமாகக் கேட்டான்: ''ஏனம்மா! எனக்கு ஐந்து வயதில் திருமணமானதாகச் சொல்லுவாயே! அந்தப் பெண் நம் வீட்டு மருமகளாக ஏனம்மா வரவில்லை?''

''அந்தக் கதையை ஏன் கேட்கிறாய் இப்பொழுது? ஆசைப்பட்டுத்தான் அந்த இடத்தில் பெண் எடுத்தோம். அழகான பெண், துடியான பெண், தன்மானமுள்ள பெண் என்று வாய்க்கு வாய் அவளைப் பாராட்டினோம். மகாலட்சுமி போல அவள் வீட்டுக்கு வந்தால் பெருமை என்று கனவு கண்டு கொண்டிருந்தோம். திடீரென்று கிராமத்தில் ஒரு வாய்க்கால் தகராறு. உன் அப்பா ஒரு கட்சி, அந்தப் பெண்ணின் அப்பா இன்னொரு கட்சி! உங்கப்பாவுக்குத்தான் எப்போதும் மூக்குக்குமேலே கோபமாச்சே! ஊர்ச் சண்டையை விலைக்கு வாங்கிக் கொண்டவர், அதை வீட்டுச் சண்டையாக மாற்றி விட்டார். அந்தப் பெண்ணை வீட்டுக்கு அழைக்க மாட்டேன் என்று கூறிவிட்டார். அப்பா மேலேவந்த கோபத்தைப் பெண் பாவமாக்கிப் பழி தீர்த்துக் கொண்டு விட்டார். அவர் பிடிவாதத்துக்கெதிரே என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அந்தப் பெண் பாவம்தான் இரண்டாந்தாரமாகக் கட்டிய மனைவி கூட உனக்குத் தக்கவில்லையோ, என்னவோ!''

தாயார் கண்களைக் கசக்கிக் கொண்டாள்.

''....வந்து அம்மா... இன்னிக்குப் பக்கத்துக் கிராமத்துக்குப் போயிருந்தேன், வைத்திய விஷயமாக. அங்கே ஒரு பெண்ணைப் பார்த்தேன். அவள் கையிலே ஒரு சுட்ட வடு இருந்தது. அதைப் பற்றி ஏனோ கேட்கத் தோன்றியது. அந்தக் கதையோடு என் கதையை முடிபோட்டு எண்ணிப் பார்த்தேன். உன்னையும் கேட்டு உன் மனப் புண்ணைக் கிளறிவிட்டேன். மன்னிச்சுக்கோ, அம்மா!''

''அந்தப் பெண் ரொம்ப ரோஷக்காரி. நீ சொல்றதைப் பார்த்தால் அவள் நம்ம குஸுமாகத்தான் இருக்கணும். அன்னைக்கு உங்க அப்பா பண்ணின தவற்றுக்கு இன்னைக்குக் கூட நாம் பிராயச்சித்தம் செய்துவிடலாம், அந்தப் பெண் மட்டும் சம்மதித்தால்!'' என்றாள் தாயார். இவ்வளவு கூறினாலும் தாயாருக்குத் தான் வலியப் போய் அவளைத் தன் வீட்டுக்கு மருமகளாக அழைத்து வரவேண்டும் என்ற எண்ணம் ஏற்படவில்லை. அவளையும் தன்மான உணர்வு தாக்கியதோ?

“அப்பா! எனக்கு எத்தனை அம்மாக்கள்?''

''எதற்காக இந்தக் கேள்வி கேட்கிறாய்?''





“ஃபோன் பில் குறைய வழி கண்டு பிடிச்சுட்டிங்களாமே!”

“இல்லே, இங்கே இருக்கிற பாட்டி எனக்கு ஓர் அம்மா! சமைக்கப் போட வருகிற குட்டி காளி இன்னோர் அம்மா! இன்னிக்கு உன்னோடு ஓர் ஊருக்கு வந்தேனே, அங்கே ஓர் அம்மா!”

“யார் அது?”

“நீ ஒரு பெரியம்மாவுக்கு வைத்தியம் பார்க்கப் போனபொழுது, என்னைத் தன் வீட்டுக்கு அழைக்கப் போனாங்களே, அவங்களைத்தான் சொல்றேன். ரொம்பப் பிரியமா லட்டு—கிட்டு எல்லாம் தின்னக் கொடுத்தாங்க. அப்புறம் குடிக்கத் தண்ணி கேட்டால், ‘நீ என்னை ‘அம்மா’ன்னு சொல்லு, அப்பத்தான் தண்ணி தருவேன்னு சொன்னாங்க. நானும் விடவில்லே. ‘நீ தண்ணி கொடுத்தால் சொல்றேன், இல்லேன்னா முடியாதுன்னு சொல்லிப்பிட்டேன். அப்புறம் நான் உன்னைப் பார்க்க ஓடி வந்தேன். நீ என்னைப் பார்க்க வந்தே. அந்த அம்மா எனக்குத் தண்ணியைத் தூக்கிட்டு வந்தாள்! ஆனால் அதை வாங்கி நீ குடிச்சுட்டே!”

“போக்கிரிப் பயலே! அதை நீ பார்த்தாட்டியா?”

“ஆமாம், இந்த இரண்டு கண்களாலேயும் பார்த்தேன்! ஆமாம், அவங்க யாரு?”

“உன் அம்மா தாண்டா!”

“நிஜமாகவா?” மகிழ்ந்து ஓடினான் சரண்.

“ஆமாம். நான் கமலாவைக் கல்யாணம் செய்து கொண்ட கதையை நீ கேட்கவே இல்லையே!”

“அதுதான் கதையாகிப் போய்விட்டதே! எனக்குத் தெரிந்து என்ன ஆகணும்?” என்றாள் குஸுமம்.

“என்ன அப்படிச் சொல்லிட்டே? அறியாப் பருவத்திலே ஒருத்திக்கு நான் மாலையிட்டது கனவாகத் தேய்ந்து போனாலும், நினைவு மட்டும் பசுமையாக இருந்தது. ஒருத்தியிருக்க இன்னொருத்தியை மணக்க என் மனம் துணியவில்லே. ஆனாலும் ஒரு நிர்ப்பந்த நிலையில் நடந்ததை, நடந்தபடியே கூறிவிடுகிறேன். நம்பினால் நம்பு, நம்பாவிட்டால் போ!” என்ற விருந்தாவன் தொடர்ந்தான்:

“என் நண்பனுக்கு வேட்டை என்றால் ஆசை. அவன் என்னை நேபாளக் காட்டுக்கு துணையாக அழைத்துச் சென்றான். அங்கே ஒரு குக்கிராமம். நோய்வாய்ப்பட்ட தன் பாட்டியுடன் கமலா வசித்து வந்தாள். பாட்டி அவளைப் பாபுவின் கையில் ஒப்படைத்துவிட்டுக் கண்மூட விரும்பினாள். அந்தப் பாபுதான் கமலாவுக்காக அவள் பார்த்து வைத்திருந்த பிள்ளை. பல ஆண்டுகளுக்கு முன்பு போனவன் திரும்பவில்லை. கமலாவுக்குத் தெரியும், அவன் திரும்பாத இடத்துக்குப் போய்விட்டான் என்று! ஆனாலும் பாட்டியின் நம்பிக்கையைப் பொத்திப் பாதுகாத்தாள். எதேச்சையாக அந்த மூதாட்டியின் அருகில் நான் போகும்படியாயிற்று. வைத்தியன் என்ற முறையில் அவள் படும் அவஸ்தையைத் தாளாமல்தான். ஆனால் கிழவி தன் பேத்திக்குப் பார்த்த பாபுவாக என்னை எண்ணி விட்டாள். என்னையும் அவளையும் இணைத்துவிட்ட மகிழ்ச்சியில், என் கையைப் பற்றியபடியே உறங்கிப் போனாள். அந்த உறக்கம் அவளது கடைசி உறக்கமாகவும் ஆகிவிட்டது.

“அவள் ஈமச்சடங்குக்கு ஒரு வழி செய்து விட்டு நாங்கள் புறப்பட்டு விட்டோம். கமலாவை அவள் விருப்பத்துக்கு அங்கேயே விட்டுவிட்டு!

“வெகு தூரம் வந்த பின்தான் என் நண்பனுக்குப் பர்ஸைக் கமலாவின் வீட்டிலேயே மறந்துபோய் வைத்து வந்தது நினைவுக்கு வந்தது. திரும்பி வந்து பார்த்தால் கமலா அசட்டுக் காரியம் ஒன்று செய்திருந்தாள். ஆம், தன் முடிவுக்கு வழி தேடி விஷம் அருந்தி யிருந்தாள். அவள் உயிரைக் காப்பாற்றி அவளை உயிர்த்துணையாக்கிக் கொண்டேன், நிர்ப்பந்தம் காரணமாக. வாழ்க்கைப் பயணத்துக்கு ஒரு துணை கிடைத்து விட்டது என்று எண்ணிய வேளையிலே சரணுக்கு என்னைத் தந்தையாக்கிவிட்டு, அவள் தன் கதையை முடித்துக் கொண்டாள். இதற்கு என்ன பொருள்?”

“என்ன பொருளா?” விடை அளித்தவள் விருந்தாவனின் அன்னை: “நாளைக்குப் போய் நான் என் மருமகள் குஸுமை வீட்டுக்கு அழைத்து வரவேண்டும் என்பதுதான்!”

“குஞ்சு இல்லையா?” என்று கேட்டுக் கொண்டே தன் பேரனோடு உள்ளே நுழைந்தாள் பாட்டி.

“குஞ்சு யார் பாட்டி?”

“உனக்குப் பொம்மை, ஊதல், பலூன் எல்லாம் கொடுப்பானே, அவன்தான்!”

“அவர் எனக்கு மாமாவாம், பாட்டி! என்னிடம் காசே வாங்க மாட்டார்!—ஆமாம், அவர் இந்த அம்மாவுக்கு என்ன உறவு?”

“கூடப் பிறந்தவன்!”

“அப்போ அவர் சொன்ன உறவு சரிதான். அம்மாவுக்குக் கூடப் பிறந்தவங்கன்னா எனக்கு மாமா தானே?—ஆனாலும் இந்த மாமா ரொம்பப் பொல்லாதவர். நேத்திக்கு எனக்கு ஓர் ஊதல் கொடுத்தார். அதை இந்தக் கையிலே வச்சிண்டு இந்தக் கைக்கு இன்னொரு ஊதல்

இயற்கை உங்களுக்கு அளித்துள்ளது எழில்மிகு கேசம்...
அதனை அவ்வண்ணமே வைத்திருப்பீர்
ஹேலோ கேச பராமரிப்புமூலம்



HSR.G.I.TH

ஹேலோ ஷாம்பூக்கள் மட்டுமே சீரான, சிறந்த உத்தியின்படி தயாரிக்கப்படுகின்றன—உங்கள் கேசத்தின் பராமரிப்பிற்கெனவே

ஹேலோ காஸ்மெடிக் ஷாம்பூ:
இந்த விசேஷ ஷாம்பூவை உபயோகித்து, உங்கள் கேசம் எவ்வளவு மெருகேறும், மிருதுவாகவும் இருக்கக் கூடும் என்பதைக் கண்டு கொள்ளுங்கள்.

ஹேலோ எக் ஷாம்பூ:
விசேஷ போஷாக்கு மிக்க இந்த ஷாம்பூவில் உள்ள வளமிக்க முட்டைப் பதார்த்தின் பயனாக உங்கள் கேசம் கட்டுக்கோப்புடன், கவர்ச்சியாகத் திகழ்கிறது.




ஹேலோ லெமன்—ஃப்ரெஷ் ஷாம்பூ:
உங்கள் கேசத்திற்கு இயற்கையான தூய்மையான பளபளப்பைத் தருகிறது.

ஹேலோ கான்ஸென்ட்ரேட் ஷாம்பூ:
ஏராளமான நுரையாத்தின் மூலம் உங்கள் கேசத்தை மென்மையாகவும், கட்டுக்கடங்கியும் வைத்திருக்க சிறிதளவே போதும்.


இயற்கை ஆரோக்கியத்துடன் கூடிய கேசத்திற்கு—இன்றே உபயோகிக்கத் தொடங்குவீர் ஹேலோ

குழந்தைகளின் தேக சக்தி விரைவில் செலவாகிவிடும்...



உடனடி சக்தி தருவது க்ளாக்ஸோஸ்-D !

நிமிடங்களில் குழந்தைகளுக்குப் புத்துணர்வூட்டுகிறது க்ளாக்ஸோஸ்-D; எனவே, விளையாடிய பின் படிப்பில் கவனம் செலுத்தப் புதுத் தெம்பு தருகிறது அவர்களுக்கு. குடிநீர், பழச்சாறு ஆகியவற்றிலேயோ, அல்லது அப்படியே தனிப்படவோ சாப்பிடலாம். நிமிடங்களில் ஊக்குவிக்கிறது உங்களை.



நிமிடங்களில்
தென்பூட்டுகிறது
உடம்பிலே

க்ளாக்ஸோஸ்-D®
க்ளாக்ஸோ தயாரிப்பு

ஒரு நல்ல பொருள் தகுதி வாய்ந்தவர்களின் கையில் கிடைத்தால், அது எப்படியெல்லாம் பரிமளித்து மணம் பரப்பும் என்பதற்குச் சான்று குஷ்பூ. பெண் மனத்தைப் படம் பிடித்துக் காட்டுவதில் சரத்சந்திரருக்கு இணை சரத்சந்திரர்தான் என்பதை அவரது நவீனங்களைப் படிப்பவர்கள் அறிவார்கள். அந்தப் பெண் மனத்துக்கு ஓர் உயிரோவியம் தீட்டி வெற்றி கண்டிருக்கிறார் குல்ஜார். திரையுலக ஃபார்முலாக்களுக்கு விடை கொடுத்துக் கதையை அதன் இயல்பில் ஓடவிட்டுப் படம் முழுவதும் நறுமணம் கமழச் செய்து விட்டார்.

குழந்தைக் கல்யாணக் கதையிலும் தூய காதலை மணக்க மணக்கத் தூவி யிருக்கிறார். உயிருள்ள உரையாடல்கள் வேறு அதற்கு மணம் கூட்டுகின்றன.

படங்களில் பொதுவாக 'ஷோ பீஸா'க - காட்சிப் பொருளாக வரும் ஹேமமாலினி இந்தப் படத்தில் தமக்கு நடிக்கவும் வரும். தம்மால் சிறந்த நடிகை என்று பெயரும் பெற முடியும் என்பதை மொட்டவிழ் மலராக நிரூபிக்கிறார். ஜிதேந்திராகூட அவ்வளவா உணர்ச்சிகளை உள்ளடக்கி நிற்கும் பாத்திரமாக வெற்றிமுகம் நோக்குகிறார்! ஷர்மிளா டாகூர் வரும் இடங்கள் வெகு குறைவுதான் என்றாலும் தம் நடிப்புக்கு உயிரைக் கொடுத்து உயிர் விடுகிறார். மாஸ்டர் ராஜுவின் நடிப்பில் குழந்தைத்தனம் கொப்புளிக்கிறது. இயல்பு மாறாத மணம்!

இசையும் பாடலும் இசைந்து இனிமை மணம் பரப்புகின்றன. சுருங்கச் சொன்னால் சரத்சந்திரர் அதிர்ஷ்டக்காரர்! இயக்குநர் குல்ஜாரின் கைவண்ணத்தில் அவரது 'பாபு மோஷாய்' இரட்டை மணம் பரப்புகிறார்.

கேட்டேன், 'போடா, போக்கிரிப் பயலே' என்று விரட்டி விட்டார்! — ஏன் பாட்டி நானா போக்கிரிப் பயல்? இன்னொரு ஊதல் கொடுத்தால் இந்த மாமாவுக்கு என்ன குறைஞ்சு போச்சாம்?''

சரணின் இந்தப் பேச்சில் மகிழ்ந்து போன குஸும், ''என்ன சாப்பிடுகிறீர்கள்? மோர் கொண்டு வரட்டுமா?'' என்று கேட்டாள் சரணின் பாட்டியைப் பார்த்து.

''இல்லை, இன்று இங்கே சாப்பிட்டு விட்டே போறதாக வந்திருக்கிறேன்!'' இந்த உரிமைக் குரலைக் கேட்டு, அடுப்பில் தூங்கும் பூனையை எழுப்பப் போனாள் குஸும். இல்லாமை என்பதை இல்லாமையாக்கிக் காதோடு காது வைத்தாற்போல் ஒத்துழைத்து அன்றைய இன்சுவை விருந்துக்கு உதவியவன் விருந்தாவன் என்பது குஸுமுக்கு மட்டுமே தெரியும்.

மாமியாருக்கோ ஒரே மகிழ்ச்சி. மருமகள் இனி தன் வீட்டுக்கு வந்துவிடுவாள் என்ற நம்பிக்கையில் அவள் கையில் அச்சாரமாக எதையோ திணித்து விட்டு விடை பெற்றாள்.

விருந்தாவனும் சரணை அழைத்துப்போகும் சாக்கில், மறுநாள் அவளையும் அழைத்துப் போகப் போவதாகக் காதைக் கடித்து விட்டுச் சென்றான்.

ஆனால் அழைக்கப் போன வண்டியில் சரண் மட்டுமே வந்தான். குஸும் வரவில்லை. அவளுக்குப் பதிலாக அன்று மாலை குஞ்சு மட்டும் வந்தான். ''அம்மா! இந்தக் காப்புக்களைக் குளியலறையில் நீங்கள் மறந்து வைத்துவிட்டு வந்து விட்டீர்களாம். குஸும் கொடுக்கச் சொன்னாள்!'' என்று கூறி அவள் கொடுத்திருந்த அச்சாரத்தைத் திருப்பி விட்டான்.

தான் கட்டியிருந்த கோட்டை தவிடுபொடியாகிவிடவே, விருந்தாவனின் தாயாருக்கு ஆத்திரமான ஆத்திரம்! 'என்ன இருந்தாலும் ஒரு பெண்ணுக்கு இத்தனை ரோஷம் கூடாது. இவள் வராவிட்டால் என்ன, என் மகனுக்கு வேறு பெண்ணா கிடைக்க மாட்டாளோ? அவனுக்குக் கையோடு கையாக ஒருத்தியைத் தேடிக் கல்யாணம் செய்து வைத்து விட்டுத் தான் மறு காரியம்' என்று பெண் தேடப் புறப்பட்டு விட்டாள், நகரத்துக்கு!

விருந்தாவனோ ஒன்றும் புரியாமல் திண்டாடினான். 'நான் வண்டி அனுப்பிச் சரணோடு வருமாறு கடிதமும் அனுப்பினேனே! அவள் ஏன் வரவில்லை? ஊரை இந்தக் கொள்ளை நோய் பற்றிக் கொண்டிராவிட்டால், நானே நேரில் சென்று அழைத்து வந்திருப்பேன். ஆனாலும் இவளுக்கு இத்தனை ஆணவம் கூடாது' என்று குமைந்தான்!

நோயின் தீவிரம் அதிகமாகவே விருந்தாவனின் பணி பெருகியது. குழந்தைக்கு அந்த நோய் பரவிவிடக் கூடாதே என்ற கவலையில் சொல்லாமல் கொள்ளாமல் குஸும் சரணைத் தன்னிடம் தருவித்துக் கொண்டு விட்டாள். குழந்தையைத் தேடி அவள் வீட்டுக்குப் போனான் விருந்தாவன். நோய் அடங்கும் வரையில், பணி நேரம் போக மற்ற நேரங்களில் தன் வீட்டிலேயே வந்து தங்கும்படி அவனையும் உரிமையோடு வேண்டிக்கொண்டாள் குஸும்.

இவள் என்ன நீரா, நெருப்பா? இவளைப் புரிந்து கொள்ளவே முடியவில்லையே! இவள் என் குழந்தையிடத்தில் காட்டும் அக்கறை, என்னிடம் காட்டும் அக்கறை — எல்லாம் இவளைப் பற்றி நல்லபடிதானே நினைக்க வைக்கின்றன! அப்படிப்பட்டவள் ஏன் என் வீட்டுக்கு வர மறுக்கிறாள்?' என்று மனத்தைப் போட்டு உலுப்பிக் கொண்டே அவள் சொன்னபடியெல்லாம் ஆடினான். கடைசியில் ஒரு நாள் பெண்ணின் மனத்தைப் புரிந்து கொள்ள முடியாதவனாக அவளிடம் கேட்டே விட்டான்.

''பெண்ணின் அதிகாரத்தைக் காட்டி நான் உங்களை ஆட்டிப் படைத்தது போல, ஆணின் அதிகாரத்தைக் காட்டி அழைத்துப் போகத் தெரியவில்லையே உங்களுக்கு!'' அவளுக்குக் கண்களில் நீர் ததும்பியது.

'' அதுதான் வண்டி அனுப்பினேனே? அதோடு கடிதமும்....''

''கடிதமா? வரவில்லையே!''

''அப்போ....!''

அவன் சிரித்தான்.

''சரி, சரி! புறப்படு! அம்மா வருவதற்குள்ளாக ஓர் அதிர்ச்சியைக் கொடுப்போம்!'' என்றான் விருந்தாவன் அதிகாரத்தோடு.

பொன்னியின் புதல்வர்

சுந்தா



60. பொல்லாத நாற்பது

எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல் அறிவு வேண்டும்

— பாரதியார்

அப்போது நம் தேசம் நெடுகிலும் நடந்து வந்த தனிமனிதர் சத்தியாக்கிரகத்துக்கு, ''சத்தியப் போர்'' என்று கல்கி பெயரிட்டு, அதே தலைப்பின் கீழ் விகடன் இதழ்களில் பட்டியல் வெளியிட்டு, எங்கெங்கே யார் யார் சிறைப்பட்டார்கள் என்ற விவரங்களைக் கொடுத்து வந்தார். அந்தப் பட்டியல் வளர்ந்து கொண்டிருக்கையில் ஐரோப்பாவில் யுத்த நிலைமை மோசமாகிக் கொண்டிருந்தது. ஜெர்மன் விமானங்கள் சாரி சாரியாய் பிரிட்டன் மீது கவிந்து சரமாரியாய்க் குண்டுகளை வீசி பயங்கரமான அளவில் உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் விளைவித்தன.

பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கும் இந்தியாவுக்கும் இடையே என்னதான் பிணக்குகள் இருந்தபோதிலும் பிரிட்டிஷ் மக்களின் அந்தச் சோதனை காலத்தில் அவர்கள்பால் பெரும்பாலான இந்திய மக்கள் அனுதாபம் கொண்டார்கள். அவர்களுடைய அஞ்சா மனநிலையை மெச்சினார்கள். அந்த உணர்ச்சிகளை எதிரொலிக்கும் தலையங்கம் ஒன்றை ''நமது அனுதாபம்'' என்ற தலைப்புடன் அந்நாளில் கல்கி எழுதினார். அதிலே அவர் நம் நாட்டில் முன்பு நடந்த ஒரு கோர நிகழ்ச்சியை நினைவுகூர்ந்தது, வியக்கத் தக்கதொரு எழுத்து வன்மை.

புற்றில் எறும்புகள் வசிப்பது போல் லட்சக்கணக்கான ஜனங்கள் நெருக்கமாக வாழும் லண்டன் நகரில் ஜெர்மன் விமானங்கள் வந்து கண்ட இடத்தில் கண்டபடி எரிகுண்டுகளையும் வெடி குண்டுகளையும் போடுகின்றன. வீடுகள், பள்ளிக்கூடங்கள், ஆஸ்பத்திரிகள், மாதா கோயில்கள், கண்காட்சி சாலைகள், சினிமாக் கொட்டகைகள், கப்பல் தளங்கள் — இவை எல்லாவற்றின் மீதும் வர்ஜா வர்ஜமின்றிக் குண்டுகள் விழுகின்றன. கட்டிடங்கள் இடிந்து விழுகின்றன; கண்ணாடிகள் நொறுங்கிச் சிதறுகின்றன. நாலு பக்கங்களிலும் தீப்பிடித்து எரிகின்றது; புகை திரள் திரளாய்க் கிளம்பி ஆகாயத்தை மூடுகின்றது.

கம்பீரமான மாளிகைகள் நின்ற இடத்தில் மொட்டைச் சுவர்கள் நிற்கின்றன. செமண்ட் தளவரிசை போட்ட வழுவழுப்பான சாலைகளில் பெரிய பெரிய பாளங்கள் வாயைப் பிளந்து கொண்டு காணப்படுகின்றன. அழகான நந்தவனங்களில் பசேலென்ற புல் தரையில் ஆகாச விமானங்கள் விழுந்து எரிந்து கொண்டிருக்கின்றன...

சென்ற மார்ச் மாதத்தில் ஒரு மூட இந்திய இளைஞன், லண்டனில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில், மாஜி பஞ்சாப் கவர்னராகிய ஸர் மைக்கேல் ஓட்வயரைச் சுட்டுக் கொன்றான். சில நாளைக்கு முன் அவன் மரண தண்டனைக்கு ஆளாகி உயிரை இழந்தான். அந்த மூட இளைஞன் மட்டும் இப்போது உயிரோடு இருந்திருக்கும் பட்சத்தில் தான் செய்த காரியம் எவ்வளவு கொடுமையானது என்பதை உணராமல் போனாலும், அது எவ்வளவு மூடத்தனமானது என்பதையாவது உணர்ந்திருப்பான். ஜாலியன் வாலாபாக் படுகொலைக்குக் காரணமாய் இருந்தார் என்பதற்காகவே ஸர் மைக்கல் ஓட்வயரை அந்த மூட இளைஞன் கொன்றான். இப்போது மட்டும் அந்த ஓட்வயர் உயிரோடிருந்து லண்டனில் நடக்கும் ஜெர்மன் விமானக் கொடுமைகளைப் பார்த்திருந்தால், தாம் காரணமாயிருந்த ஜாலியன் வாலாபாக் படுகொலை எவ்வளவு பாதகமானது என்பதை உணர்ந்து பச்சாதாபப்பட்டிருப்பார் அல்லவா?


ஓட்வயருக்கு அத்தகைய சந்தர்ப்பம் கிடைக்காமல் அந்தப் பாவி செய்தது மட்டுமல்ல, தானும் ஓர் அரிய சந்தர்ப்பத்தை இழந்து விட்டான். இன்றைய தினம் அந்த இளைஞன் உயிரோடிருந்து லண்டன் நகரின் கோரக் காட்சிகளைப் பார்த்திருந்தால், ஒரு தேசத்தின் மக்கள் தங்கள் சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காக எவ்வளவு மகத்தான தியாகங்களுக்கெல்லாம் உட்படத்



○ தனி நபர் சத்தியாகிரகம் செய்ய அண்ணாவின் அனுமதி வீட்டு முகவரிக்கு வந்தது....

○ ...திரு வாசன் இதைக் கேட்டு ஆச்சரியப்பட்டார். "நீங்கள் பெயர் கொடுத்திருப்பது பற்றி என்னிடம் முன்னுலேயே ஒரு வார்த்தை சொல்லவில்லையே?" என்றார்....

○ ....இந்தவகை பேச்சு நடந்து கொண்டிருக்கும் போது அங்கிருக்க விரும்பாத நான் போவதற்காக எழுந்தேன். வாசன் என்னை உட்காரச் சொன்னார்.





தயாராயிருக்கவேண்டும் என்பதை உணர்ந்திருப்பான். ஒரே ஒரு ஜாலியன் வாலாபாக்கைக் கண்டு, நமது மக்கள் அந்தக் காலத்தில் எவ்வளவு மிரண்டு போனார்கள்! வீர புருஷர்கள் என்று பெயர் பெற்ற பாஞ்சால நாட்டார் ஒரு நிமிஷத்தில் கோழைகளாகி, வீதிகளில் மார்பால் ஊர்ந்து சென்றார்களே!

ஆனால் இன்று லண்டனைப் பாருங்கள்! ஒரு ஜாலியன்வாலா பக்கா? எத்தனை ஜாலியன்வாலாபாக்குகள் நடக்கின்றன?... ஜாலியன்வாலாபாக் படுகொலை ஒரு கால் மணி நேரத்தில் தீர்ந்து போயிற்று. லண்டனில் எவ்வளவு நாளாக இந்த வெடி குண்டு பயங்கரம் நீடித்து நடந்து கொண்டிருக்கிறது!

ஆனாலும், லண்டன்வாசிகள் புகார் செய்கிறார்களா? மூக்கால் அழுகிறார்களா? ஜெர்மனிக்குப் பணிந்து விடலாம் என்று யாராவது மூச்சு விடுகிறார்களா? கிடையவே கிடையாது! "இதைக் காட்டிலும் எத்தனை மகத்தான கஷ்டங்கள் வந்தாலும் வரட்டும்; அந்த ராட்சஸ நாசிக் கொடுங்கோன்மைக்கு மட்டும் ஒரு நாளும் பணிய மாட்டோம்" என்று மார்தட்டிக் கொண்டுதான் நிற்கிறார்கள்.

இன்றைய தினம் லண்டனையும் இங்கிலாந்தையும் பாதுகாத்துக் கொண்டிருப்பவை, வானை நோக்கிச் சுடும் பீரங்கிகளும், 'ஸ்பிட்பைர்' விமானங்களும் மட்டும் அல்ல; இங்கிலீஷ் மக்களின் ஆச்சரியமான உறுதியும் திட சங்கல்பமும்தான் அவர்களைக் காத்து நிற்கின்றன.

யுத்தப் பயிற்சி பெற்று உயிர் விடத் துணிந்திருக்கும் போர் வீரர்கள் மட்டும் அல்ல—சாதாரண மக்கள், ஸ்திரீகள், கிழவர்கள், குழந்தைகள் உட்பட சகலமான ஜனங்களும், இரும்பு மனம் படைத்தவர்கள் போல் உறுதியாய் நிற்கிறார்கள். "ஈயத்துக்கும் நெருப்புக்கும் பயந்து எங்கள் சுதந்திரத்தைப் பறிகொடோம்" என்று கம்பீரமாய்த் தலை நிமிர்ந்து நிற்கிறார்கள்.

இந்தத் தைரியமும் துணிச்சலும்தான் இன்று லண்டனையும், பிரிட்டனையும் முக்கியமாகப் பாதுகாத்துக் கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட வீர பிரிட்டிஷ் மக்களுக்கு நமது மனமார்ந்த அனுதாபத்தைச் செலுத்துகிறோம். அவர்கள் இந்தப் பெருஞ் சோதனையில் தேறி, வெற்றி வீரர்களாய் வெளிக்கிளம்ப வேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.

இவ்வாறு, வெளியே நடந்த வன்முறைச் சமர் பற்றியும், உள்ளே நடந்த சாத்வீகப் போர் பற்றியும் மாறி மாறி "சீரியஸ்" தோரணையில் எழுதி வந்த கல்கி திடீரென 29-10-40 விகடன் இதழில் 1940ம் ஆண்டினை விமரிசனம் செய்யும் தலையங்கத்தைக் கோணங்கித்தனமாய்த் தொடங்கியது, அசம்பாவிதம்போல் தோன்றிற்று.

விகடர் தமது மூக்குக் கண்ணாடியை மேஜை மீதெல்லாம் தேடிப் பார்த்தும் அகப்படாமல் திண்டாடிக் கொண்டிருந்தபோது, (வானர) அரசியல் திருபர் வந்து சேர்ந்தார்.

"திருபரே, திருபரே! நம்முடைய மூக்குக் கண்ணாடி எங்கே பறந்து போயிற்று?" என்று விகடர் விசாரித்தார்.

உடனே திருபர் அது எங்கேயாவது பறந்து கொண்டிருக்கிறதா என்று உயர அறையை



கணவன் சொன்னான் : "என் மனைவி இரவு இரண்டு மணி வரை விழித்திருக்கிறாள், டாக்டர். அதை எப்படியாவது குணப்படுத்த வேண்டும்."

டாக்டர் கேட்டார் : "தூக்கம் வராமல் விழித்திருக்கும்போது அவள் என்ன செய்கிறாள் ?"

கணவன் : "நான் எப்போது வீட்டுக்குத் திரும்புவேன் என்று எதிர் பார்த்துக் காத்திருக்கிறாள்."

எம். எஸ்.

ஒரு தரம் பார்த்துவிட்டு, விகடரையும் ஒரு முறை கவனித்தார். "உங்கள் கண்ணாடி பறந்து உங்கள் மூக்கின் மீதுதான் உட்கார்ந்திருக்கிறது. அந்தக் கண்ணாடிக்கு அடியில் தங்கள் திருமூக்கு இருக்கிறது."

வேடிக்கை உரையாடல் இத்துடன் நிற்கிறது. தலையங்க அரங்கு அதிர்கிறது. பூதாகாரமான மனிதர் ஒருவரின் திடும் பிரவேசம். யார் அவர்? வானர நிருபர் அறிமுகப்படுத்துகிறார்: "இவர்தான் ஸ்ரீ காலஸ்வாமியார். இவருக்கு இப்போது, 1940-ஆம் வயது முடியப் போகிறது. மகா பொல்லாத ஆத்மா."

அதைத் தொடர்ந்து அந்தப் பொல்லாத ஆத்மாவின் ஆட்சிக் காலத்தில் நடந்த பொல்லாத வினைகள் எல்லாம் அடுக்கடுக்காய் விசாரணைக்கு வருகின்றன. விசாரணையின் இறுதியில், "பொல்லாத ஆத்மா" என்ற குற்றச்சாட்டு ஊர்ஜிதம் ஆகிறது.

அந்தத் தலையங்கத்தின் தலைப்பே "பொல்லாத நாற்பது".

உலகத்துக்கும் தேசத்துக்கும் பொல்லாததாய் இருந்த அந்த நாற்பது, கல்கியின் உத்தியோக வாழ்வுக்கும் பொல்லாததாய் இருந்தது. அந்தத் தலையங்கம் வெளியானதற்கு இரண்டாம் நாள் அந்தப் பொல்லாத ஆண்டின் கடைசி நாள்; அதுவே ஆனந்த விகடனில் கல்கியின் பதவி காலத்தின் கடைசி நாளாகவும் இருந்தது.

முன்னிரண்டு விடுதலைப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றிருந்த கல்கி, அப்போது தொடங்கி இருந்த மூன்றாவது பெரும் போராட்டத்திலும் கலந்து கொள்ள விருப்பம் கொண்டார். ராஜாஜி சிறை சென்றதைக் கண்டதும், அந்த விருப்பம், பேராவலாக வளர்ந்தது. ஏற்கெனவே சில ஆண்டுகளாய் அவரை வருத்திக் கொண்டிருந்த ஆஸ்த்மா நோய், அந்தப் பனிக்காலத்தில் கடுமையாகியிருந்தது. டாக்டர்களைக் கேட்டிருந்தால் சிறை வாசம் பற்றி நினைக்கவே கூடாது என்று தடுத்திருப்பார்கள். ராஜாஜியைக் கேட்டிருந்தாலோ, அவரும் கண்டிப்பாய்த் தடுத்திருப்பார் என்பதோடு, அந்தத் தடைக்குக் கட்டுப்படுவதாய் வாக்குறுதி அளிக்கும்படியும் கேட்டிருப்பார். ஆகவே அவர் யாருடனும் ஆலோசனை கலக்காமல் தாமே தீர்மானம் செய்து கொண்டு, மனைவியிடம் மட்டும் ஜாடையாகச் சொல்லிவிட்டு, சத்தியாக்கிரகம் செய்ய அனுமதி வேண்டி மகாத்மா காந்திக்கு விண்ணப்பம் அனுப்பினார். டிசம்பர் 31ம் தேதி காலையில் அண்ணலின் அனுமதி, வீட்டு முகவரிக்கு வந்தது. அதைக் கண்டு மகிழ்ச்சி கொண்ட கல்கி அந்த விவரத்தை ருக்மிணியிடம் தெரிவித்து, "இனி வாசனின் அனுமதிதான் வேண்டும்" என்று சொல்லிவிட்டு, மனைவியின் திகைப்புத் திருவதற்கு முன்னாலேயே அலுவலகத்துக்குப் புறப்பட்டு விட்டார்.

வாசனின் அறைக்குள் கல்கி நுழைந்த போது, அங்கே அவருடன் துமிலனும் இருந்தார். அவர் போகட்டும் என்று காத்திராமலும், பீடிகை ஏதும் போடாமலும், நேராகவே வாசனிடம் விஷயத்தைச் சொன்னார் கல்கி. இருவருக்கும் இடையே ஐந்து நிமிடம் பேச்சு நடந்தது. அதன் இறுதியில் கல்கி, வாசனின் அறையை விட்டுத் தமது அறைக்குச் சென்றார். தமது மேஜையின் இழுப்பறைகளைத் திறந்து, தமது சொந்தக் காகிதங்கள் முதலியவற்றை எடுத்துக் கொண்டார். அக்கம் பக்கத்து அறைகளிலிருந்த தமது சகாக்களிடம், தாம் வேலையை விட்டுவிட்டதாகச் சொல்லி விடை பெற்றுக்கொண்டார். கடைசித் தடவையாக மாடிப் படிகளிலும் வெளிப் படிகளிலும் இறங்கி வெளியே சென்றார். சற்றே திரும்பிப் பார்த்தபோது, அலுவலகச் சிப்பந்திகளிலும் அச்சுக்கூடத் தொழிலாளர்களிலும் சிலர், வாசல் படிகளில் திகைப்புற்று நிற்பதைக் கண்டார்.

மறுநாள் புத்தாண்டு தினத்தன்று, வீட்டிலிருந்தபடியே தமது ராஜினாமாக் கடிதத்தை அனுப்பினார்.

அதற்கு முந்திய நாள் அந்த ஐந்து நிமிட நேரத்தில், வாசனுக்கும் கல்கிக்கும் இடையே நடந்த பேச்சு என்ன என்பதை அப்போது ஒரு சாட்சியாக உடனிருந்த துமிலன், சுயவரலாற்றுப் போக்கில் அமைந்த, "நான் + நாற்பது"


பாராட்டுவோர் பலருண்டு
உங்கள் முகத்திற்கு, பகைகள் பல
உண்டு உங்கள் மேனிக்கு.
பக்கபலமாக வைத்துக்
கொள்வீர்—பாண்ட்ஸ்
வானிஷிங் க்ரீம்
பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம் உங்கள்
சருமத்தைக் காற்று, தூசி,
சீதோஷ்ண நிலைகளின் கொடுமைகளி
லிருந்து பாதுகாக்கிறது. ஈரத்
தளதளப்பை எழில்பட மேனியிலே
நிலை நிறுத்தும் ஒரு விசேட
'ஹ்யூமெக்டண்ட்' அதில் அடங்கி
யுள்ளது. அது பிசுக்கற்ற மழமழப்
பான பொலிவைத்தருகிறது.
அதைப் பரிபூரணப் பவுடர் படி
மானப் பூச்சாக உபயோகியுங்கள்.
பல மணி நேரங்களுக்கு உங்கள்
'மேக்-அப்'பை புதுமை குன்றாது
அழகுற வைக்கிறது. அல்லது
பூரணமான 'மேக்-அப்'
சாதனமாக வேண்டுமாகிலும்
உபயோகியுங்கள்.
பாண்ட்ஸ் வானிஷிங் க்ரீம்—பரிபூரணப் பவுடர் படிமான க்ரீம்.
POND'S
VANISHING CREAM
சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடெட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யூ. எஸ். ஏ. யில் இணைக்கப்பெற்றது)

இதோ ஒரு சிறந்த முறை—


புதிய ரம்யா

உங்கள் குடும்பத்தை சீரியமுறையில் சுத்தமாக்கும் டிடர்ஜன்ட்



பளபளப்பாய், வெண்மையாய் டிடர்ஜண்ட் சோப்பு துணிகளைத் தீவிரமாகச் சுத்தப்படுத்துகிறது — எப்படிச் செய்யவேண்டுமோ அப்படி. இன்னும் சிறப்பாக. பிரமிக்கத்தக்க அளவு சிறப்பாக.


புதிய ரம்யா விஞ்ஞான முறையில் கலவையானது. துணியில் ஆழச் சென்று, அழுத்தப் படிந்த ஒவ்வொரு துளி அழுக்கையும் இழுக்கும் தீவிரம் கொண்டது.



புதிய ரம்யா சர்பேக்டன்ட் (டோடிசில் பென்ஸீன் ஸல்போனேட்) தன் சுத்தமாக்கும் தன்மையால் அழுக்கைத் தாக்குகிறது; அதனை வெளியே இழுக்கிறது.

புதிய ரம்யாவிலுள்ள கார்பாக்ஸி மெதல் செல்லுலோஸ் கரைசலிலுள்ள வெளியேறும் அழுக்கைத் தனிப்படுத்துகிறது — உங்கள் ஆடைகளில் அது மீண்டும் படியாமல் பாதுகாக்கிறது; சுத்தம் நிறைவு உத்திரவாதமளிக்கிறது.





அழுக்குத் துணி வெளுக்க— பளீரென ஒளிவீச

அல்ட்ராமரீன் & பிக்மண்ட்ஸ் லிமிடெட், ராணிப்பேட்டை, தமிழ்நாடு

SAA/UPL/1801R TAM

என்ற தமது கட்டுரையில் வெளியிட்டுள்ளார். "ஒரு பத்திரிகாலயத்தில் திரை மறைவில் சில பெரிய நாடகங்கள் நிகழ்வதுண்டு" என்று அவர் தொடங்கி வாசனிடம் கல்கி, தம்மைக் காந்திஜி சத்தியாக்கிரகத்துக்குத் தேர்ந்தெடுத்து விட்ட செய்தியை அறிவித்ததை அடுத்து, என்ன நிகழ்ந்தது என்பதைச் சொல்கிறார்:

...திரு வாசன் இதைக் கேட்டு ஆச்சரியப் பட்டார்.

"நீங்கள் உங்கள் பெயரைக் கொடுத்திருப்பதைப் பற்றி என்னிடம் முன்னாடியே ஒரு வார்த்தை சொல்லவில்லையே!" என்று வாசன் கேட்டார்.

"நான்தான் ஒவ்வொரு போராட்டத்திலும் கலந்து கொள்கிறவனாச்சே! அது உங்களுக்குத் தெரியுமே!" என்றார் கல்கி.

"இருந்தாலும் நீங்கள் என்னிடம் முதலிலேயே சொல்லியிருக்கத்தான் வேண்டும். நீங்கள் போன பிறகு பத்திரிகை என்ன ஆகிறதாம்?"

"துமிலன் பார்த்துக் கொள்கிறார்."

"அது எனக்குத் தெரியும். நீங்கள் போராட்டத்தில் ஈடுபடுவது பத்திரிகையைப் பாதிக்கும். ஏற்கெனவே ஒரு முறை அச்சாபீசுக்கு ஜாமீன் கட்ட நேர்ந்தது உங்களுக்குத் தெரியாதா?...."

"பத்திரிகை ஆசிரியராக என் பெயர் போடப்படவில்லையே!"

"இருந்தாலும் உங்கள் தொடர்பு இருக்கிறதென்று அரசாங்கத்துக்குத் தெரியாதா?"

இத்தகைய பேச்சு நடந்து கொண்டிருக்கும் போது அங்கிருக்க விரும்பாத நான் போவதற்காக எழுந்தேன். திரு வாசன் என்னை உட்காரச் சொன்னார்.

"என்னை என்ன பண்ணச் சொல்கிறீர்கள்" என்று கல்கி பச்சையாகக் கேட்டார்.

"நீங்கள் போராட்டத்தில் சேரப் போவதில்லை என்று காந்திஜிக்கு எழுதிவிடுங்கள்."

"அது நடக்காத காரியம்!"

"அப்படியானால் பத்திரிகையுடன் தற்காலிகமாக உங்கள் தொடர்பு இல்லாமற் செய்து கொள்ளுங்கள்."

"ராஜிநாமா செய்யச் சொல்கிறீர்களா?"

"ஆமாம்" என்றார் திரு வாசன்.

"சரி; சிறை சென்று வந்த பிறகு பதவியை ஒப்புக்கொள்கிறேன்" என்றார் கல்கி.

"அதைப் பற்றி அப்போது பார்த்துக் கொள்ளலாம்!" என்று திரு வாசன் நிதானமாகக் கூறினார்....

ஐந்தே ஐந்து நிமிடங்களில், தாம் உழைத்து, வளர்த்து உருவாக்கிய அந்த விகடன் பத்திரிகையின் மாஜி துணை ஆசிரியராகி விட்ட திரு கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தியை திரு டி. சதாசிவம், கீழே விழாமல் பல விதத்திலும் தாங்கி, கல்கி பத்திரிகையை ஸ்தாபித்தது ஒரு தனிப் பெருங் கதை.

(தினமணி கதிர் 31–7–70)

சதாசிவம் — கிருஷ்ணமூர்த்தி கூட்டுறவினால் கல்கி பத்திரிகை தோன்றிய வரலாற்றைச் சற்றுப் பொறுத்து விரிவாகக் கவனிப்போம். அதற்கு முன்னால், இப்போது அந்தப் புதிய பத்திரிகை தோன்றுவதற்கு எது வழி துலக்கியதோ அதை மேலும் தொடர்ந்து ஆராய்வோம்.

ஆனந்த விகடனை விட்டு விலகியதும் தம்மைக் காண வந்த நண்பர்களிடம் பொதுவாகக் கல்கி "சத்தியாக்கிரகம் செய்வதற்காக விலகினேன்" என்றுதான் சொல்லியிருப்பார். அந்தரங்கமான சிலரிடம் தாம் விலக நேர்ந்ததற்கான காரணங்களை இன்னும் விவரமாகவே சொல்லியிருக்கலாம். வாய்மொழியாக அவர் சொல்லியிருக்கக்கூடியதை விட்டு விட்டு, எழுத்து மூலமாய்ப் பின்னர் அவர் வெளியிட்டதை மட்டும் பார்ப்போம்.

1941 ஆகஸ்டு முதல் தேதியன்று வெளியான முதல் கல்கி இதழைப் படித்த வாசகர்களில் பலர் அதை வரவேற்றுப் பாராட்டி எழுதியதுடன், முன்பு அதன் ஆசிரியர் விகடனை விட்டு விலகக் காரணம் என்னவென்றும் விசாரித்தார்கள். அவர்களில் ஒருவருடைய கடிதத்தை இரண்டாவது இதழில் கல்கி



கணவன்: இவ்வளவு நீண்ட நேரம் உன்னோடு டெலிபோனில் பேசியது யார்?

மனைவி: ராதா.

கணவன்: என்ன சொன்னாள்?

மனைவி: இனிமேல் என்னோடு பேசமாட்டேன் என்று சொன்னாள்.

-டெக்கான் ஹெரால்ட்-பாலி

வெளியிட்டு, அதன் அடியில் அதற்குப் பதில் எழுதினார். அதில் அவர், அதே இதழில் வெளியாகியிருந்த குமுதினியின் ''மௌன ரகசியம்'' என்ற கட்டுரையைச் சுட்டிக்காட்டி, அதன் கருத்தையொட்டி எழுதினார்: '''இரகசியங்களுக்குள் நான் மௌனம்' என்கிறார் பகவான். அந்த வகை ரகசியந்தான் இதுவும்.''

இதற்குப் பத்து மாதங்களுக்குப் பிறகு ராஜாஜி சம்பந்தமான கருத்துப் போர் ஒன்றில் ஆனந்த விகடனுடன் ஈடுபட்டிருக்கையில் இவ்வாறு எழுதினார் கல்கி:

சாதாரணமாய் ஒரு பத்திரிகையில் சில மாத காலம் ஆசிரியராய் இருந்தவர்கள் கூட அந்தப் பத்திரிகையை விட்டு விலக நேர்ந்தால் தாங்கள் விலக நேர்ந்த காரணங்களைப் பற்றி நீண்ட அறிக்கைகள் விடுவதைப் பார்த்திருக்கிறோம். ''கல்கி'' ஆசிரியர் விகடனிலிருந்து விலகி இப்பத்திரிகையை ஆரம்பித்த சமயம் அதன் காரணங்களை வெளியிடுமாறு நூற்றுக் கணக்கான கடிதங்கள் நேயர்களிடமிருந்து வந்தன. ஆயினும் நாம் அவ்விதம் செய்யவில்லை. நாம் பத்து வருஷம் உழைத்து வளர்த்த பத்திரிகைக்கு நம்மால் ஒருவிதத் தீங்கும் வரக்கூடாது என்ற எண்ணம்தான் காரணம். (கல்கி இதழ் 16-6-42)

இன்னும் பதினைந்து மாதங்களுக்குப் பிறகு, ''தினமணி'' ஆசிரியர் பதவியிலிருந்து டி. எஸ். சொக்கலிங்கம் விலக நேர்ந்தபோது, அது பற்றி ஒரு தலையங்கம் எழுதிய கல்கி, தாம் முன்பு விகடனில் அடைந்த அனுபவத்தை நினைத்துக் கொண்டார் எனத் தோன்றுகிறது. அத்துடன் அவர், பத்திரிகை முதலாளிகள் பற்றிய பொதுவான சில கருத்துக்களையும் வெளியிட்டார்:

ஒன்பது வருஷ காலமாக ஒருவர் ஒரு ஸ்தாபனத்தை உழைத்துப் பாடுபட்டு வளர்க்கிறார்; வாழ்க்கையில் வேறு ஒன்றிலும் ருசி இல்லாமல் அந்த ஸ்தாபனத்தின் வளர்ச்சியையே வாழ்க்கை இலட்சியமாகக் கொண்டு வளர்க்கிறார். அவராலேயே — அவருடைய உழைப்பினாலேயே அந்த ஸ்தாபனம் வளர்ந்து சீரும் சிறப்பும் அடைகிறது; பேரும் பெருமையும் பெறுகிறது. திடீரென்று ஒரு நாள் அவர் அந்த ஸ்தாபனத்தை விட்டு வெளியேற்றப் படுகிறார்! ஒரு பிரிவு உபசார வார்த்தைகூட இல்லாமல் ''போ!'' என்று பிடித்துத் தள்ளப்படுகிறார்!....

முதலாளித்துவம் என்பது எப்போதும், எங்கேயும், எந்தத் தொழிலிலும் தீமை பயப்பதுதான். ஆனால் பத்திரிகைத் தொழிலில் அது பன்மடங்கு தீமை பயப்பதாகும். ஏனெனில், மற்ற எந்தத் தொழிலையும்விடப் பத்திரிகைத் தொழில் பொதுமக்களின் உள்ளத்தில் அதிக மதிப்பைப் பெற்றிருக்கிறது. பத்திரிகையில் வரும் எந்த விஷயமும் ஒன்றுக்கு நூறு மடங்கு அதிக சக்தி உள்ளதாய்ப் போய்விடுகிறது. எந்தச் சக்தியையும் நல்லதற்கும் பிரயோகிக்கலாம், தீமைக்கும் உபயோகிக்கலாம் அல்லவா? பத்திரிகையின் சக்தியானது எழுத்தாளனின் கையிலிருந்து முதலாளியின் கைக்குப் போகும்போது, அதன் துஷ்பிரயோகத்துக்கு வசதியும் அதிகமாகி விடுகிறது.

முதலாளிகள் முதலில் எழுத்தாளர்களின் எழுத்து வன்மையினாலும் உயர்ந்த இலட்சியங்களினாலும் பத்திரிகைகளின் சக்தியை வளர்த்துக் கொள்கிறார்கள். பிறகு, எழுத்தாளர்களுக்கும் அவர்களுடைய இலட்சியங்களுக்கும் 'டிக்கட்' கொடுத்து விடுகிறார்கள். தங்களுடைய சொந்த நலன்களையும் சுய காரியங்களையும் சாதித்துக் கொள்வதற்காகவே பத்திரிகைகளைப் பயன்படுத்துகிறார்கள். (கல்கி இதழ் 10–10–43)


விகடனை விட்டுக் கல்கி விலகிய காலத்தில் பத்திரிகைகளில் உழைக்கும் எழுத்தாளர்களின் பாதுகாப்புக்கான சட்டம் ஏதும் உண்டாகியிருக்கவில்லை. ஒன்பது வருட காலமாய் விகடனின் ''வளர்ச்சியையே வாழ்க்கை லட்சியமாய்க் கொண்டு'', அதற்குச் ''சீரும் சிறப்பும் பேரும் பெருமையும்'' தேடிக் கொடுத்த கல்கிக்கு, கடைசி ஒரு மாதச் சம்பளத்தை மட்டும் கொடுத்துக் கணக்குத் தீர்த்து விட்டார் வாசன். அதன் மூலம் அவர் புலப்படுத்தியது என்ன? பணக் கடுத்தம் அல்ல. கல்கியின் மீது அப்போது கொண்ட மனக் கடுத்தமே!

இருவரில் ஒருவர், அந்த ஐந்து நிமிட நேரத்தில் வேறு விதமாய்ப் பேசியிருந்தால் அவர்களிடையே முறிவு நேராமல் இருந்திருக்குமோ? அல்லது, முறிவு நேர்ந்த பிறகு, இருவரில் ஒருவர் மீண்

அன்றும் இன்றும்




நேற்று நிறுவப்பட்டது ஜோதி விவசாய எந்திரக் கருவிகள்



இன்று வளமடைந்தது இன்ப நாள் இதோ

முன்னேற்றத்தின் இரகசியம்—

ஜோதி விவசாய எந்திரக் கருவிகள்



வேளாண்மையை ஒரு தொழிலாக மதிப்பவர் இன்றைய விவசாயி. எனவேதான், தரமான விவசாய எந்திரங்களை நாடுகிறார். ஜோதியின் அதி நவீன ஆராய்ச்சி நிலையத்தின் ஓயாத உழைப்பின் பயனே ஜோதி விவசாய எந்திரக் கருவிகள். இதன் காரணமாகத்தான் ஜோதி பம்பு, மோட்டார், ஸ்டார்ட்டர், கதிரடிப்புக் கருவி, மற்றும் இதர விவசாய எந்திரங்களிலே முழு நம்பிக்கை வைத்திருக்கிறார் அவர். நெடுங்காலம் உழைப்பதோடன்றி, மின்செலவைக் குறைத்துதவுகின்றன இந்த எந்திரங்கள்.

ஜோதி லிமிடெட் பரோடா 390 003

quality is our creed.

everest/27/JY-tm

கிளை: எய்ர் லைன்ஸ் ஹோட்டல், 177/179 மவுண்ட் ரோடு, சென்னை. போன்: 85007. வியாபாரிகள்: ராமு & கோ., சதி ரோடு, ஈரோடு; ராஜா டிரேடிங் கோ., அருணாசல ஆசாரித் தெரு, சேலம்; ஆட்டோமேட்டிக் பம்பு ஸ்பெஷலிஸ்ட்ஸ், 4 பாண்டி பஜார், சென்னை; முருகன் ஆட்டோமேட்டிக்ஸ், காளியம்மன் கோயில் தெரு, உசிலம்பட்டி; பிரீமியர் இண்டஸ்ட்ரீஸ், செம்புதாஸ் ஸ்ட்ரீட், சென்னை; மேலக்கடை எலக்ட்ரிகல்ஸ், பெண்ணாடம்.

டும் பேச்சுத் தொடங்கி நயந்து போயிருந்தால், ஏதேனும் உடன்பாடு ஏற்பட்டிருக்குமோ? சொல்வதற்கில்லை. ஆனால், கல்கியின் வாழ்க்கைக் கதியை கவனிக்கையில் அந்த முறிவு இன்றி யமையாததாய் இருந்தது என நிச்சய மாய்ச் சொல்லலாம்.

கல்கியின் கற்பனைக் கதைகளில் மட்டு மல்லாமல், அவருடைய வாழ்க்கைக் கதையிலும் விதியின் வினைகள் பல உண்டு. விகடனிலிருந்து அவர் விலகும் படி நேர்ந்தது அவற்றிலே ஒன்று. அப் படி நேர்ந்திராவிட்டால் அவருடைய தனிச் சிறப்பு வாய்ந்த புனைபெயரை மகுடமாய்க் கொண்ட தனியானதொரு பத்திரிகை தோன்றியிருக்க முடியுமா? அரசியல், இலக்கியம், மற்றும் நற் கலைகள் முதலிய துறைகளில், தனிப் பெரும் இயக்கங்களும் சாதனைகளும் நிகழ்ந்திருக்க முடியுமா?

கல்கியும் அவருடைய சொந்தப் பத் திரிகையும் புரிந்த சாதனைகளை இப் போது நாம் மதிப்பிட்டுப் பார்க்கையில் அந்தப் ''பொல்லாத நாற்பது'' நல்ல தற்கே வகை செய்தது எனத் தீர்ப்புக் கூறலாம். கல்கியும் பின்னர் திரும்பிப் பார்க்கையில் இவ்விதமே அதைப் பற்றி எண்ணியிருப்பார். ''நாடகக் காரி'' என்ற சிறுகதையின் முன்னுரைப் பகுதியில் அவரே சொல்கிறார்:

அற்ப அறிவு படைத்தவர்களாகிய மானி டர்கள் நன்மை என்று குதூகலிக்கிற காரி யங்கள் பெருந் தீமையாக முடிகின்றன. அவர்கள் தீமை என்று நினைத்து வருந்தும் காரியங்களிலிருந்து எதிர்பாராத நன்மைகள் விளைகின்றன. ஏற்கனவே பல முறை இந்த உண்மையை வாழ்க்கை அநுபவத்தில் கண் டிருந்தும் அச்சமயத்தில் மறந்து போனேன்.

(தொடரும்)

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு கே. ஆர். விஜயா எப்படி இருந்திருப்பார் ? ஜெய் சங்கர் எப்படி இருந்திருப்பார் ?.... எஸ். வி. சுப்பையா எப்படி இருந்திருப்பார் ? டி. எஸ். பாலையா எப்படி இருந்திருப்பார் என் றெல்லாம் பார்க்க ஆசைப்படுபவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது ! இந்தப் படத்தைப் பார்த்தால் போதும்.

காதலித்தவன் காதலித்தவளைக் கைவிட்டு அப்பாவின் நண்பரின் மகளை (கொஞ்சமும் மனம் இல்லாமல்தான்) மணக்கும்படியான ஒரு நிர்ப்பந்தமான சூழ்நிலையில் திருமணம் நடந்து விடுகிறது. இடைவேளைக்கு மேல் கதையில் சூடு பிடிக்கிறது. மர்மக் கொலை, போலீஸ் விசாரணை இவற்றுக்குப் பிறகு காத லர்கள் ஒன்று சேர்கின்றனர்.


கே. ஆர். விஜயாவும், ஜெய்சங்கரும் மிக வும் உருக்கமாகவும், நெருக்கமாகவும் நடித் திருக்கின்றனர். காதலிக்குத் துரோகம் செய் கிறோமே என்று உருகித் தவித்துப் போகி றார், ஜெய்சங்கர். காதலனால் கைவிடப்பட்ட அவல நிலையைக் கண்ணீரிலேயே விளக்கு கிறார் விஜயா. ஜெய்சங்கரின் கட்டாய மனைவியாக வந்து தற்கொலை செய்துகொண்டு பல குழப்பங்களுக்கும், படத்தின் நல்ல முடி வுக்கும் காரணமாயிருப்பவர் விஜயபானு.

ஒரு 'மாமாங்க'த்துக்கு முன்பு எடுக்கப் பட்ட படத்துக்கு, வெளியே தலை காட்ட இப் போதுதான் நேரம் வந்தது. ஆனால் அதே பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முற்பட்ட ரசி கர்கள் இப்பொழுதும் அப்படியே இருக்க மாட்டார்களே! ரொம்ப ரொம்ப வளர்ந்தி ருப்பார்களே ! என்னத்தைச் செய்ய ?

—காந்தன்



புரட்சி நடிகரைப் பல விதத்திலும் உயர்த்திக் காட்ட முயன்றதில் படப் பிடிப்பின் தரமும் வெகுவாக உயர்ந்து விட்டது! ஆரம்பக் காட்சியில் நிரம்ப அரசியல் வாடை வீசினாலும், படத்தில் ஒரு முழுமையான கதை இருக்கிறதென்பதை ரசிகர்கள் ஒப்புக் கொள்ளு வார்கள். படத்தின் பிற்பகுதி வேகமாய்ச் சென்று திரைக் கதைக்கு உயிர் ஊட்டுகிறது.



இதயக்கனி

கண்ணைக் கவரும் வண்ணக் காட்சிகள், கருத்தைக் கவரும் இயற்கை எழில்கள், பார்க்கும் இடம் எங்கும் பரவசமூட்டும் பச்சைப் பசேல் என்ற பசுமை போர்த்திய பசும் புல் வெளிகள், மனத்தை மயக்கும் மலைச் சிகரங்கள், வான வில்லிலிருந்து தெறித்தவை போன்ற பலவண்ணப் பூக்கள், சிந்தைக்கும் செவிக்கும் இனிய ஆறு பாடல்கள் -- இவற்றின் பிரமையிலிருந்து விடுபட்ட பிறகுதானே கதையைப் பற்றி நினைக்கத் தோன்றும். இவை போதாக் குறைக்குத் திடுக்கிடும் சம்பவங்கள்!

எஸ்டேட் முதலாளி மோகன் ஓர் இரகசியப் போலீஸ் அதிகாரியும்கூட. (இது எப்படி என்று கேட்காதீர்கள். அது அப்படித்தான்!) மோகன், தான் புகலிடம் தந்து காப்பாற்றிய ஏழைப் பெண்ணை ஊர் வம்புக்குப் பயந்து மணந்து கொள்கிறான்; அவளை மணந்து கொண்ட கையோடு அவள் ஒரு கொலைக் குற்றவாளி என்று தெரிந்ததும் அவன் துடித்த துடிப்பு...! அவள் உண்மையில் குற்றவாளியா என்பதை அறிய மோகன் எடுத்துக் கொண்ட வீரதீர சாகஸ முயற்சிகள்தான் கதை.

எல்லாவிதங்களிலும் எம். ஜி. ஆருக்கு மிகவும் வாய்ப்பான படம். ஆரம்பம் முதல் அவர் இல்லாத காட்சியே இல்லை! கல்யாணம் ஆனதும் வந்த முதல் கேஸில் மோகன் அடைந்த அதிர்ச்சியில் எம். ஜி. ஆரின் நடிப்பு களை கட்டுகிறது. அதன் பிறகு மனைவியைப் 'போலீஸ் கண்' கொண்டு பார்ப்பது, மனைவியின் கை ரேகைகளைப் பதிவு செய்ய மிக இயல்பான முறையில் ரிவால்வரில் அவளுக்குச் சுடப் பயிற்சி அளிக்கிற பாவனையில் நடயம் எடுத்துக் கொண்டது. எல்லாமே சிறந்த நடிப்பு.

வடநாட்டு ராதா ஸலூஜா மிகவும் பிரமாதப்படுத்தி விட்டார். பயம், ஏக்கம், பரிவு, பாசம், ஆகிய உணர்ச்சிகளுக்கிடையே அவரால் இளமை வேட்கையின் தீவிர உணர்ச்சியையும் மிகவும் சிறப்பாகக் காட்டி நடிக்க முடிகிறது! அவருக்கு இரவல் குரல் ஏற்பாடு செய்யாமல், அவரையே பேச வைத்திருப்பது பாராட்டுக்குரியது.


வெகுநாட்களுக்குப் பிறகு ராஜசுலோசனாவை வில்லியாகப் பார்க்கிறோம். அத்துடன் நல்ல நடிப்பையும் பார்க்கிறோம். சினிமா உலகின் பண்பட்ட 'தாயார்' பண்டரி பாய். நடிப்புக்குக் கேட்க வேண்டுமா ?

கவர்ச்சிக் காட்சிகளுக்கும் குறைவில்லை. ஏதோ ஸென்ஸார் இனி ரொம்ப கண்டிப்பும் கறாருமாக இருக்கப் போவதாகச் சொல்லிக் கொள்கிறார்கள்.

திரைக்கதை ராம. வீரப்பன்; டைரக்‌ஷன், ஏ. ஜகந்நாதன்; இரண்டுமே சிறப்பாயிருக்கின்றன. என். பாலகிருஷ்ணனின் ஒளிப் பதிவு இவ்வண்ணப் படத்தின் தனிச் சிறப்பு. படத்தின் முதல் காட்சியில், அறிஞர் அண்ணாவின் ''இதயக் கனி''யாக எம். ஜி. ஆரைக் காட்டி, அப்போது அண்ணாவின் உரையையும் சேர்த்திருப்பது அப்பட்டமான அரசியல் என்றாலும் ரசிகர்களின் பலத்த கைவொலியைப் பெறுகிறது.

மனத்தைத் துளியும் அலட்டிக் கொள்ளாமல், கண்ணை மூடிக்கொண்டு கடற்காற்றை நுகர்வது போல் ஒரு படம் பார்க்க விரும்பினால் சத்யா மூவிஸின் 'இதயக் கனி'யைப் பார்த்து மகிழலாம்!

—காந்தன்



THERE ARE ONLY TWO KINDS OF WOMEN-
THOSE WHO READ
femina
AND THOSE WHO DON'T
WHICH KIND ARE YOU?
If you are not already one among our 16 lakh readers*, do yourself a favour.....start ordering your copies of Femina today.
Twice every month, Femina will speak on issues that need to be talked about. We will take you from the metros to the suburbs, from the small towns to the villages, to show you the new Indian woman at work and in the home. We will bring you her ideas on health, politics, the economy, clothes, furniture, films and books—the whole business of living—right up to your doorstep. Maybe you will want to give Femina to your husband, your children, your friends. So that they can understand you better. Don't wait another day!
BUY YOUR COPY TODAY!!
*Source : ORG Survey
femina
INDIA'S FASTEST GROWING FORTNIGHTLY

நான் வணங்கும் மனித தெய்வம்-7

அன்னை பராசக்தி



எல்லா மதங்களும் ஒரே வழியைத்தான் காட்டுகின்றன என்ற உன்னதமான கொள்கையை மதிப்பவளாதலால் நான் கிறிஸ்தவ மதத்தவளாக இருந்த போதிலும் எம்மதத்தையும் சம்மதிக்கிறேன். பால கண்ணனின் திருவிளையாடல்களில் ஒரு கவர்ச்சி; முகம்மது நபியின் சகோதரத்துவ போதனையில் ஒரு மகிழ்ச்சி; கிறிஸ்து பிரானின் தியாக வாழ்க்கையில் ஒரு பக்தி — இப்படியாக அனைத்து மதங்களிலும் மன ஆறுதலையே பெற்று வருகிறேன்.

சிறப்பாக ஒருவரை நான் தெய்வமாகக் கருதி வணங்கி வருகிறேன். அவர் தாம் மதர் தெரஸா. பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் கண்காணாத ஒரு தேசத்திலிருந்து மிக இளம் பிராயத்திலேயே நம் பாரத நாட்டுக்கு வந்துவிட்ட இவர், கல்கத்தா நகரின் அசுத்த வீதிகளிலெல்லாம் நடந்து திக்கற்றவர்களைத் தொட்டுக் கை தூக்கி ஆதரிக்கவென்றே தம் வாழ்க்கையை அர்ப்பணித்து விட்டார். அழுக்கு ஆடை அணிந்தவர்களையும் வியாதி படைத்தவர்களையும் கண்டு காத தூரம் விலகிச் செல்லும் மனிதர்கள் நிறைந்த உலகில், எத்தகைய அசிங்கமான நோயாளியையும் தொட்டு ஆறுதல் மொழி கூறி, அடைக்கலம் அளித்து வருபவர் அன்னை தெரஸா. தெய்வத்தை அடைவதென்பது வெறும் வெற்றுப் பேச்சாலும், ஜப தபத்தாலும் அல்ல; பணியினாலும், தன்னலமற்ற உழைப்பாலும் தான் முடிகிறது என்பதை உலகுக்கு எடுத்துக் காட்டுகிறார் இந்த அதிசயப் பிறவி.

வாழ்நாளெல்லாம் உழைத்து உழைத்துக் கடைசிக் காலத்தில் கவனிக்க யாருமின்றித் தெரு ஓரங்களில் கிடக்கும் வயோதிகர்களுக்காக அனாதை மடங்களை அமைத்து அவர்களை அங்கு அழைத்துச் சென்று அன்புடன் பராமரித்து வருகிறார். இதைவிட ஒரு சிறப்புப் பணி உலகில் இருக்க முடியுமா? கிறிஸ்துபிரான் எவரையும் மதம் மாறும்படி பணித்ததில்லை. ''என்னுடைய உபதேசங்களை உலகமெல்லாம் போய்ச் சொல்லுங்கள்!'' என்று மட்டுமே தம் சீடர்களுக்கு பணித்தார்.

தெரஸா அம்மையாரும் எவரையும் மதம் மாறும்படி வற்புறுத்தவில்லை. ''மதத்துக்கும் எனக்கும் சம்பந்தமில்லை'' எனக் கூறும் இவர் ''மனிதனை ஆண்டவனருகே அழைத்துச் செல்வதே என் பணி'' என்று கூறிச் செயலிலும் காட்டுகிறார்.

முதன்முதலில் கல்கத்தா நகரில் அவர் அமைத்த மடம் காளி தேவியின் கோவிலுக்கு அருகில் இருந்தமையால் அவருக்குப் பல எதிர்ப்புக்கள் இருந்தன. கோவிலுக்கு அருகில் வியாதியஸ்தர்களை வைத்திருந்தால், அதனால் கோயில் தீட்டுப் படலாம் என்பது அவர்கள் வாதம். ஆனால் தீட்டு என்பது உடலால் அல்ல, உள்ளத்தால் ஏற்படுவதே என்ற பெரிய உண்மையை அவர்களுக்கு எடுத்துரைத்து அவர்கள் சீற்றத்தைத் தணித்தார் அன்னை.

கோபத்தோடு எதிர்த்து நின்ற மக்களின் முன் சிறிதும் அஞ்சாமல் நின்று அமைதியான புன்சிரிப்புத் தவழும் முகத்தோடு உண்மையை அன்னை விளக்கிச் சொன்னதும், அவர்கள் திகைத்துப் போய், அன்னையின் அருள் வாக்கை நெஞ்சில் பதிய வைத்துக் கொண்டார்கள்.

அப்போது அன்னையின் முகத்தில் ஜ்வலித்த வீர தேஜஸைக் கண்டு வியந்துபோன ஒருவர் 'தம் முன்னே நிற்பது அன்னை தெரஸா என்ற மானிடப் பெண்ணல்ல — பராசக்தியே அவர்' என்பதை உணர்ந்து கொண்டாராம். அவர் மட்டுமல்ல — கல்கத்தா நகரமே அந்த உண்மையை உணர்ந்து கொண்டது.

கிழக்கு வங்கத்திலிருந்து வந்த அகதிகளுக்கும், அங்கே பாகிஸ்தான் ராணுவத்தினரின் அட்டகாசத்தால் கற்பிழந்த பெண்களின் புனர்வாழ்வுக்கும் அவர் ஆற்றிய அளப்பரிய பணிகளைச் சரித்திரம் பொன்னெழுத்துக்களில் போற்றும்.

அன்னை தெரஸாவின் தியாக வாழ்க்கையை என்று முதன் முதலில் நான் படிக்கும் பேறு பெற்றேனோ அன்றே அவர் நான் வணங்கும் தெய்வங்களில் ஒருவராக என் இதயத்தில் உறைந்து விட்டார்.

—கலோசனு ஜஸ்டின்

வட்ட மேஜை

"தியாக பூமி" அத்தியாயம் என்னை 1939 சூழ்நிலைக்குக் கொண்டு சென்றுவிட்டது. எல்லாத் தாக்குதல்களுக்கும், விமர்சனங்களுக்கும் முடிவாகப் பதில் கூறுகையில் (நாரதர் பத்திரிகையில் என்ற ஞாபகம்) திரு கல்கி விமர்சகனின் இயல்பைச் சுருக்கிச் சொல்லி விளங்க வைத்தார்:

''ஒரு விமர்சகரிடம் தஞ்சாவூர்க்காரர் ஒருவர் சொன்னாராம், 'தஞ்சைப் பெரிய கோபுரத்தைப் பார்த்தீர்களா? 200 அடி உயரம். இம்மாதிரி கோபுரம் எங்கும் கிடையாது.' அதற்கு விமர்சகர் கூறினாராம்: 'கோபுரம் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் இன்னும் அரை அடி உயரமாக இருந்தால் இன்னும் நன்றாக இருக்கும்!'''

சென்னை—5
28—8—75 வெ. முத்துகிருஷ்ணன்.

ஆகஸ்டு 3ந் தேதி இதழில் கதிரியக்கத்துக்கு உட்படுத்தப்பட்ட உணவுப் பொருள்களை உண்பதால் ஆபத்து உண்டு என்று கருத்துப்பட எழுதியிருப்பதை பார்த்தேன். தேசிய போஷாக்கு நிறுவனம் இது சம்பந்தமாகப் பத்திரிகைகளில் வெளியிட்டுள்ள அறிக்கையின் அடிப்படையில் நீங்கள் எழுதியிருக்கிறீர்கள். அவர்கள் சில ஆராய்ச்சிகளை நடத்தியிருக்கிறார்கள். அணுசக்தி இலாக்காவுக்கு அந்த ஆராய்ச்சிகள் பற்றித் தெரியும். அந்த ஆராய்ச்சிகள் நடத்தப்பட்ட விதமும் அவற்றின் முடிவுகளும் சரியானவையல்ல என இவ்விலாக்கா கருதுகிறது.

பாபா அணுசக்தி ஆராய்ச்சிக் கேந்திரத்தின் முடிவுகளும் தேசிய போஷாக்கு நிறுவனத்தின் முடிவுகளும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாக இருப்பதால் மத்திய அரசு ஒரு நிபுணர் குழுவை இது சம்பந்தமாக விசாரணை செய்ய நியமித்திருக்கிறது.

கதிரியக்கத்தின் உதவியால் உணவுப் பொருள்களைப் பாதுகாப்பது பற்றிய ஆராய்ச்சிகளுக்குக் கோடிக்கணக்கான ரூபாய்களை அரசு செலவழித்திருக்கிறது என்பதாக நீங்கள் எழுதியிருப்பதும் கண்டிப்பாக ஏற்கத் தக்கதல்ல. பெரும்பாலான உபகரணங்களும் இதர துணைக் கருவிகளும் ஐ. நா. சபையின் உதவியாகவோ அல்லது கொழும்புத் திட்டத்தின் பயனாகவோ நமக்குக் கிடைத்தவையே.

பம்பாய் டாக்டர் ஸ்ரீநிவாசன்
22-8-75 பாபா அணுசக்தி ஆராய்ச்சிக் கேந்திரம்

திரு ஆதிசேஷய்யா பற்றிப் படித்து மகிழ்ந்தோம். சென்னை பல்கலைக் கழகத்துக்கு ஒரு Vice Chancellor கிடைத்திருக்கிறார் என்பதை விட ஒரு Wise Chancellor கிடைத்திருக்கிறார் என்பதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். மால்கம் ஆதிசேஷய்யா சென்னைப் பல்கலைக் கழகத்தார்க்கு ஒரு 'வெல்கம்' ஆதிசேஷய்யா தான். வளர்க அவர் தொண்டு! வளர்க சென்னை பல்கலைக் கழகம்!

செகந்திராபாத்
29—8—75 பார்வதி — சிவகாமி



பாரதீய வித்யாபவனுக்காக ஸ்ரீமதி எம். எஸ். சுப்புலக்ஷ்மி அவர்கள் வழங்கியுள்ள பத்து பக்திப் பாடல்கள் அடங்கிய இசைத் தட்டை லண்டனில் ஹார்வுட் பிரபு வெளியிட்டார். முதல் இசைத்தட்டைப் பெற்றுக் கொள்பவர் இந்தியத் தூதர் ஸ்ரீ பி. கே. நேரு.

ரூபி டஸ்ட் டீயில் மட்டுமே காணும் மூன்று சிறப்பம்சங்கள்

1. கணத்தில் கிட்டிடும் பானம்

2. தருவதும் செறிந்த மணம்

3. பெருவதோ கோப்பைகள் அதிகம்



கெட்டியான டிகாக்ஷன் மட்டுமல்ல; சிக்கனத்தையும் சிறப்பம்சமாய்க் கொண்ட ஓரே டீ-லிப்டன் ரூபிடஸ்ட். முழுமையான தேநீரின் மறு பெயர்தான் லிப்டன் ரூபி டஸ்ட்.

ஒவ்வொரு பாக்கெட்டுக்கும் செறிவு மிக்க அதிகக்கோப்பைகள்

லிப்டன் ரூபி டஸ்ட்

LRDC-10 TAM



24

அஷோக் மறைமுகமாக எச்சரித்ததை லட்சியம் செய்யாமல் போலீஸ் அதிகாரி ரவோஜாவிடம் மனத்திலுள்ளதைக் கொட்டித் தீர்த்தாள் அஞ்சலி:

''அம்மாவுக்கும் அப்பாவுக்கும் ஓயாமல் சண்டை. அப்புறம் அம்மாவுக்கும் ஸ்வர்ணுவுக்கும், அம்மாவுக்கும் எனக்கும்... அஷோக்குக்கும் எனக்கும்... அம்மாவைக் கொலை செய்ய நினைக்காதவர்கள் யாருமே இவ்விடத்தில் கிடையாது. என்னால் முடிந்திருந்தால் நானே செய்திருப்பேன். யாரோ முந்திக் கொண்டு விட்டார்கள். பட், வெளிப்படையாக எல்லோருடைய முன்னிலையிலும் கொலை செய்யாமல், மறைவாகக் கொலை பண்ணிவிட்டு ஒளிந்து கொள்வது கோழைத்தனம். இதுதான் எனக்குப் பிடிக்கவில்லை...''

''உளறுகிறான்; ஒரே உளறல்'' என்றான் அஷோக் கோபத்துடன்

''உனக்கேன் கோபம் வருகிறது? நீயா கொலை செய்தாய்?'' அஞ்சலி கேட்டாள்.

''வில் யு கீப் யுவர் மவுத் ஷட்?'' என்று சீறிக்கொண்டே எழுந்தான் அஷோக்.

''நோ.... நான் பேசத்தான் பேசுவேன். நீ யார் தடுக்க? நான் இப்போது ஒரு சுதந்திரப் பறவை. அம்மா ஸ்தானம் உனக்கு வந்து விட்டது என்று நினைத்துக் கொண்டிருக்கிறாயா? நதிங் டூயிங்'' என்றாள் அஞ்சலி.

அஷோக் கோபத்தில் என்ன செய்வது என்று அறியாமல் நின்று கொண்டிருந்தான்.

''நான் இப்போது போலீஸ் அதிகாரி என்ற முறையில் விசாரிக்க வரவில்லை. குடும்ப நண்பன் என்ற முறையில் வந்திருக்கிறேன்.'' என்றார் ரவோஜா.

''இந்தப் பெண்ணைக் கைது செய்து பதினாலு வருஷங்கள் உள்ளே வையுங்கள். இவளுக்குக் கணவனாக வரப் போகிறவனையாவது காப்பாற்றலாம்'' என்றான் அஷோக்.

''இவளுக்குக் கணவனாக வரப்போகிறவன் என் மகனாக இருந்தால்?'' என்று கேட்டார் ரவோஜா சிரித்துக் கொண்டே.

''போலீஸ் அதிகாரி என்ற முறையில் உங்களால் அவனுக்குப் போலீஸ் பாதுகாப்பு கொடுக்க முடியும்'' என்றான் அஷோக்.

காலடி ஓசை கேட்டுத் திரும்பிப் பார்த்தார்கள்.

கபூர் நின்று கொண்டிருந்தார்.

ரவோஜா எழுந்து அவரருகில் சென்று கூறினார்: ''ஐ ஆம் ஸாரி, மிஸ்டர் கபூர்...''

''நான் வாக்குமூலம் தருகிறேன், எழுதிக் கொள்ளுங்கள். நான்தான் மோகினியைக் கொன்றேன்'' என்றார் கபூர்.

ரவோஜா அறையிலிருந்த மற்றவர்களைப் பார்த்தார்.

அஷோக் சொன்னான்: ''இப்பொழுது அவர் சொல்வது எதற்கும் அர்த்தம் இல்லை. அவர் நிறையக் குடித்திருக்கிறார்.''

''நான் உன் அம்மாவைக் கொல்லவில்லை என்று நீயுமா நினைக்கிறாய்? அவ்வளவு கோழையா நான், அவ்வளவு தகுதியற்றவனா?'' அழாத குறையாக அவர் கேட்டுக் கொண்டே சோபாவில் வந்து உட்கார்ந்தார்.

''மிஸ்டர் கபூர்... நீங்கள் கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். அப்புறம் இதைப் பற்றிப் பேசிக் கொள்ளலாம்'' என்றார் ரவோஜா.

''நேற்றிரவு அவளை நான் கழுத்தை நெரித்து — ஒரு துணியினால் – நெரித்துக் கொன்று விட்டேன்.''

''நீங்கள் இப்போது சொல்வது பொய்'' என்றான் ராகேஷ்.

''எது பொய்?''

''அம்மா துணியினால் நெரித்துக் கொல்லப்பட்ட விவரம் என்மூலம் அறிந்தீர்கள். எதற்காகப் பொய் சொல்லுகிறீர்கள்?''

''நான் ஒவ்வொன்றையும் விளக்கமாகச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை... நான்தான் மோகினியைக் கொன்றேன். என்னைக் கைது செய்யுங்கள், மிஸ்டர் ரவோஜா!''

வாசல் மணி ஒலித்தது. ராகேஷ் வாசலை நோக்கிச் சென்றான்.

''நல்லவர்களுக்கு அடையாளம் சொல்லிக் கொள்ளாமல் வருவதா?'' என்று கேட்டாள் விஜயா.

''நீ எதற்காக இப்பொழுது இங்கு வந்தாய்? – என் அப்பா ஏதோ உளறிக்கொண்டிருக்கிறார்.''

''என்ன?''

''அவர்தான் கொலை செய்தாராம் போலீஸ் அதிகாரியிடம் சொல்லிக் கொண்டிருக்கிறார்.''

''அவர் கொல்லவில்லை என்று எனக்குத் தெரியும்.''

''எப்படி?'' ராகேஷ் ஆச்சரியத்தில் கூவுவது போல் கேட்டான்.

''உள்ளே வந்து சொல்லலாமா?''

''ஓ எஸ்... கம் இன்.''

ஏதோ சொல்லிக் கொண்டிருந்த கபூர் விஜயாவைப் பார்த்ததும், குரலைச் சற்று உயர்த்திக் கேட்டார்: ''நீ எதற்காக வந்தாய்?''

''எனக்குத் தெரிந்த உண்மைகளைச் சொல்ல வந்தேன்'' என்றாள் விஜயா.

''நோ.. அவள் சொல்லப் போவது பொய். நம்பாதீர்கள்'' என்றார் கபூர்.

''நீங்கள் யாரென்று தெரியவில்லையே?'' என்றார் ரவோஜா.

''ஆஃபீஸில் என்னுடைய பி.ஏ.வாக இருக்கிறாள்'' என்றார் கபூர்.

''நான் இவளைத் திருமணம் செய்துகொள்ளப் போகிறேன்'' என்றான் ராகேஷ்.

ரவோஜா ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தார்.

''உனக்குத் தெரிந்த விவரங்கள் என்ன, சொல்லேன்'' என்று கேட்டாள் அஞ்சலி.

''நான் எல்லோருடைய முன்னிலையிலும் சொல்லத் தயாராக இல்லை. போலீஸ் அதிகாரி.... நீங்கள்தானே? உங்களுடன் தனியாகப் பேச விரும்புகிறேன். மிஸ்டர் கபூர் அவருடைய மனைவியைக் கொல்லவில்லை என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும்.''

''நாங்கள் இந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். எங்களுக்கும் தெரிய வேண்டும். எங்கள் முன்னிலையில் சொல்வதில் என்ன தவறு?'' என்று கேட்டாள் சசி.

''யாரிடத்திலும் இதைப் பற்றி விவாதிப்பதில்லை என்று மிஸ்டர் கபூருக்கு நான் வாக்குறுதி கொடுத்திருக்கிறேன். ஆனால் இதை ஒரு போலீஸ் அதிகாரியிடம் விவாதிப்பது என்பது, செய்யாத குற்றத்தைச் செய்ததாகக் கூறும் மிஸ்டர் கபூரைக் காப்பாற்றப் போகிறது என்ற காரணத்தினால், அவருக்கு நான் கொடுத்திருக்கும் வாக்குறுதியை மீறுவது தவறில்லை என்று எனக்குப் பட்டது. மற்றவர்களுக்கு இதைப் பற்றித் தெரியவேண்டும் என்ற அவசியம் இல்லை என்று நான் நினைக்கிறேன்'' என்றாள் விஜயா.

''நீ சொல்வது உண்மை என்று எப்படித் தெரியும்? இத்தனை நாட்களாய் மிஸஸ் கபூரோடு இருந்து விட்டு, இப்போது மிஸ்டர் கபூரோடு ஒட்டிக் கொண்டு விட்டாய்... இவ்வளவு சுலபமாக விசுவாசத்தை மாற்றிக் கொள்ளத் தெரிந்த உனக்கு. ' என்று சசி சொல்லி முடிப்பதற்குள், அஞ்சலி குறுக்கிட்டாள்.: ''விசுவாசத்தை மாற்றிக் கொள்வது என்றால் என்ன அர்த்தம்? அப்பாவும்





அம்மாவும் ஒருவருக்கொருவர் எதிரிகளா யிருந்தனர், ஆகவே அப்பாதான் அம்மா வைக் கொன்றிருப்பார் என்று அர்த்தமா?''

''நான் அப்படிச் சொல்லவில்லை. நீ வேண்டுமென்றே...'' என்று கூறுவதற்குள் அசோக் சொன்னான். ''ப்ளீஸ்... இரண்டு பேரும் நிறுத்துங்கள். ஆனால் எனக்கும் இது பிடிக்கவில்லை. எங்கள் குடும்பத்துக்குத் தெரி யாத விஷயம் மிஸ் விஜயாவுக்கு என்ன தெரியப் போகிறது?''

''விஜயாவும் இந்தக் குடும்பந்தான்'' என் ருன் ராகேஷ்.

இவர்கள் இவ்வாறு பேசிக் கொண்டிருந்த போது சோபாவில் சாய்ந்தவர், கபூர், அப்படியே தூங்கிப் போய்விட்டார்.

''உங்களுக்கு ஆட்சேபணை இல்லாவிட்டால் இங்கேயே சொல்லலாமே?'' என் ரு ர் ரவோஜா.

''ஆட்சேபணை இருப்பதால்தான் தனிமை யில் சொல்லுகிறேன் என்கிறேன். இது மிஸ்டர் ராகேஷுக்குக்கூடத் தெரியாது.''

ராகேஷ் கூறினன்: ''மாடியிலிருக்கும் என்னுடைய அறைக்குப் போய்ப் பேசுங்கள். விஜயா என் தந்தைக்குக் கொடுத்திருக்கக் கூடிய வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டு மென்று நினைப்பது எனக்குப் புரிகிறது. எனக் கும் இது பற்றித் தெரிய வேண்டுமென்று நான் முட்டாள்தனமாக வற்புறுத்த மாட் டேன். விஜயா இவ்வளவு அழுத்தமான வளா என்பதுதான் என் ஆச்சரியம்.''

ரவோஜாவும் விஜயாவும் மாடிக்குச் சென்றார்கள்.

''அவள் என்ன சொல்லப் போகிறுள் என்று நிஜமாகவே உனக்குத் தெரியாதா?'' என்று ராகேஷைக் கேட்டான் அசோக்.

''தெரியாது. இப்பொழுது அவள் வீட் டுக்குப் போயிருந்தேன். அவள் நான் சொன்ன தகவல்களைக் கேட்டுக் கொண்டாளே தவிர, அவளாக ஒன்றும் சொல்லவில்லை. உங்களைப் போல் நானும் அதிர்ச்சிக்கு உள்ளாகியிருக் கிறேன்'' என்ருன் ராகேஷ்.

''அப்பா கொன்றிருக்க மாட்டார் என்று நீ நம்புகிருயா?'' என்ருன் அசோக்.

''நிச்சயமாக!''

''அப்படியாஞல் யார் கொன்றிருப் பார்கள்? அப்பா தாம் கொன்றதாகச் சொல் வானேன்? யாரைக் காப்பாற்ற வேண்டு மென்ற எண்ணம்?''

அப்பொழுது ராம் சிங் அங்கு வேகமாக வந்தான்.

''வந்து பாருங்களேன்!'' அவன் குரல் படபடத்தது. உடம்பு நடுங்கிக் கொண் டிருந்தது.

''என்ன?''

''வாருங்களேன்.''

அசோக், ராகேஷ், சசி ஆகிய மூவரும் அவனுடன் சென்ருர்கள்.

பின்னல் வேண்டாத சாமான்களைப் போடு வதற்கென்று ஒரு சிறிய அறை இருந்தது.

அங்கே ஸ்வர்ணு இருந்தாள். அவள் இருந்த நிலையிலிருந்தே அவளுக்கு என்ன ஆகிவிட்டது என்று தெரிந்தது. பக்கத்தில் ஒரு பாட்டில் விஸ்கி காலியாகக் கிடந்தது. அவள் எத்தனை . நேரமாக அங்கு அப்படிக் கிடக்கிருள்? அவள் அருகில் ஒரு காகிதம். கோணல் மாணலாக எழுதியிருந்தாள்.

''நேற்றிரவு அம்மாவை ரத்தன்லாலுடன் டாக்ஸியில் பார்த்தேன். பிட்சி அப்பாவுக்கு உபதேசம் செய்கிருள். அவளைப் பின் தொடர்ந்தேன். ரத்தன்லால் தங்கியிருக் கும் இடத்துக்குச் சென்று திரும்பி வந் தாள். வாசலில் நின்று கொண்டிருந்தேன். நிறையக் குடித்திருந்தேன். கூட ஒரு



'மொரோன்' இருந்தான். அவனை வீட்டுக்கு அனுப்பிவிட்டேன். தலை சுற்றியது. நிற்க முடியவில்லை. அவளைத் தீர்த்துக் கட்டவேண்டுமென்ற வெறி. நான் இப்படி இருக்க இவள் தானே காரணம்? அவள் வெளியே வந்த போது, முன்னால் போய் நின்றேன். திடுக்கிட்டாள். என்னைப் பார்த்துக் கத்தினாள். 'நீ இந்த நேரத்தில் இங்கே என்ன செய்கிறாய்?' என்றாள். 'நீ என்ன செய்கிறாய்?' என்று நான் கேட்டேன். அப்பாவைத் திட்டினாள். வாய்க்கு வந்தபடி திட்டினாள். அவளைக் கொலை செய்யப் பார்த்தாராம். அவர் நல்ல மறைவாக இருந்து பழிவாங்கப்போகிறாராம். 'ரிட்ஜ் அருகே கார் இருக்கிறது வா' என்றேன். வந்தாள். என் புடவைத் தலைப்பைக் கிழித்து அவள் கழுத்தில் வைத்து நெரித்தேன். 'அடி பாவி' என்றாள். அவ்வளவுதான். 'உன் காதலனுக்காக என் வாழ்க்கையை வீணடித்தாயே, சனியனே போ... ஒரு நல்ல மனுஷன் கணவனாக வாய்த்தும், அவன் வாழ்க்கையைப் பாலைவனமாக்கினாயே, போ...' அவள் கீழே விழுந்தாள். வீட்டுக்கு வந்தேன்....அழுகையாக வந்தது. எதற்கு என்று புரியவில்லை. கிழித்த புடவை

கண் நோயால் சிவந்த கண்களும் நனைந்த கைக்குட்டைகளுமாகக் காட்சி தருபவர்கள் தங்களது கண்ணையும் கவலையையும் மறந்து சிரித்து மகிழ இதோ வருகின்றன....

தந்தது: தாஜா

படம்: [illegible]



"என் மாமியாருக்குக் கொஞ்சம்கூட ஈவு இரக்கமே கிடையாது...."

"ஏன்? என்ன பண்ணினாள்?"


"'கண்வலியாலே கண்ணுலே ஜலம் ஜலமா கொட்டறது'ன்னேன்.... ஒரு கூடை வெங்காயத்தைக் கொடுத்து நறுக்கச் சொல்லிட்டா!...."



"எல்லோரும் கண் வலின்னு சொல்லி ஜாலியா லீவ் போடறாங்க....நம்ம துரதிருஷ்டம், அதுக்குக்கூட வழியில்லே...."

"ஏன்?"

"நான் கண் டாக்டர்கிட்டேதானே வேலை பார்க்கிறேன்?"



"ரெண்டு நாளா கண்ணெல்லாம் ஒரே வலி...."

"டாக்டரைப் போய்ப் பாரேன்..."

"ஐயையோ! நான் மாட்டேன்!.... இப்பத்தான் பல் வலின்னு டாக்டர்கிட்டே போனேன்...ரெண்டு பல்லைப் பிடுங்கிட்டார்!..."



"முன்பெல்லாம் அரை நாள் லீவு கேட்டால்கூட எங்க மானேஜர் மூக்காலே அழுவார்... அவர்கிட்டே போய், 'கண்வலி; மூணு நாள் லீவு வேணும்'னு கேட்டேன்..."

"என்ன சொன்னார்?"

"முடியாதுன்னு சொல்லி மூக்காலே அழறதுக்குப் பதிலா கண்ணாலேயே ஜலம் விட்டு அழுதார். அவருக்கும் கண் வலியாம்!..."



"கண் டாக்டர் வீட்டுக் கல்யாண ரிஸப்ஷனுக்குப் போயிருந்தியே, ரொம்பத் தடபுடலாக இருந்ததோ?"

"அதெல்லாம் ஒண்ணுமில்லே.... எல்லோரையும் உட்கார்த்தி வைச்சு, கண்ணிலே மருந்தை ஊற்றி அனுப்பிச்சுட்டார்...."

யைப் பெட்டியில் வைத்தேன். மறுபடியும் குடிக்கத் தொடங்கினேன். காலையில் அப்பா வந்தார். நாம் கொலை செய்து விட்டதாக அவர் நினைக்கிறார். இந்தக் கடிதம் கிடைத்த வுடன் எல்லாம் விளங்கும். நான் சாகப் போகிறேன். ரூபிக்கு இனி விஜயாதான் அம்மா... நான் சொர்க்கத்துக்கு டிக்கட் வாங்கி விட்டேன். விஸ்கி பாட்டில் விஸ்கி... சொர்க்கமா, நரகமா? — நரகந்தான்.... நரக....''

கடிதம் முற்றுப்பெறவில்லை.

அவர்கள் மூவரும் ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டு சிறிது நேரம் நின் றார்கள்.

அவர்கள் மறுபடியும் வாசலுக்குச் சென்ற போது, சதீஷைக் 'கிளப்'பிலிருந்து கொண்டு வந்து ஹாலில் போட்டிருந்தார்கள். ''பாபி ஓடிவிட்டாள். பாபி ஓடிவிட்டாள்'' என்று அவன் கண்களை மூடிய நிலையில் சொல்லிக் கொண்டிருந்தான்.

ரவோஜாவும் விஜயாவும் மாடியிலிருந்து இறங்கி வந்தார்கள். ராகேஷ் ஸ்வர்ணாவின் கடிதத்தை ரவோஜாவிடம் நீட்டினான்.

சோபாவில் படுத்துக் கொண்டிருந்த கபூர் ஏதோ முணு முணுத்துக் கொண்டே இன் னொரு பக்கமாகத் திரும்பிப் படுத்தார்.

அஞ்சலியும் ஷம்மியும் வெளியே போனார்கள்.

முற்றும்

சிவப்புக் கண் சிரிப்புக்கள்!



''முந்தாநாள் என் காதலியின் கண்களோடு என் கண்கள் சந்தித்து உறவாடின நெடுநேரம்....''


''அப்புறம் என்ன ஆச்சு ?''

'' அவளுக்கு இருந்த கண் வலி எனக்கும் வந்து விட்டது !''




''முதலாளிக்கு நம்ம ராமநாதன் மேலே ரொம்ப நம்பிக்கையாமே? அவன் எந்தக் காகிதத்தைக் கொண்டுபோய் நீட்டினாலும் கண்ணை மூடிக்கொண்டு கையெழுத்துப் போட்டுடுறாராமே ?''

''நம்பிக்கையாவது, மண்ணாங்கட்டியாவது! நாலு நாளா அவருக்குக் கண் வலி ! கண்ணைத் திறக்கவே முடியாமல் அவஸ்தைப்படுறார்! அதுதான் விஷயம்!''




''நேத்து பெண் பார்த்துட்டு வந்தோமே - அந்தப் பெண்ணைப் பிடிச்சிருக்காடா உனக்கு?''

'' பெண்ணைப் பிடிச்சிருக்கு....ஆனா அவள் கண்ணைத்தான் பிடிக்கல்லே!''



'' எங்க வீட்டிலே எல்லாருக்கும் இந்தச் சிவப்புக் கண் நோய் வந்திருக்கு சார்....எனக்கு மட்டும்தான் வரல்லே!....''

''உரக்கச் சொல்லாதீங்க சார்!... யார் கண்ணாவது பட்டுவிடப் போகிறது!...''



''இதோ பாருங்க... என் வலது கண் என்ன கலரோ, அதேமாதிரி சிவப்பிலே பட்டுப் புடவை இருந்தா எடுத்துப் போடுங்க !....''



8. இரண்டாம் தரப்பு கை

படித்துக் கொண்டிருந்த மாலைப் பத்திரிகையை மடித்து மேஜை மீது ஒரு விசிறு விசிறிவிட்டு 'உம்' என்று பெருமூச்சு விட்டுக் கொண்டே சோபாவில் சாய்ந்து மேட்டுவளையைப் பார்த்தான் சேகர்.

அவன் எதிரில் கிரைம் பிராஞ்ச் இன்ஸ்பெக்டர் கோபால், ரமேஷ், மாலதி மூவரும் அமர்ந்து அவன் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''மடையர்கள்! வெறும் முட்டாள்கள்'' என்று வாய்விட்டுத் திட்டினான் சேகர்.

''யாரை அண்ணா சொல்கிறாய்?'' என்று கேட்டாள் மாலதி.

''உன்னை, என்னை, இந்த உலகத்தை, இந்தப் பத்திரிகைக்காரர்களை — எல்லாரையும்தான். பாரேன். ஒரு பத்திரிகை பாக்கி விடாமல் தாரிணி தேவியின் மரணத்தைத் தற்கொலை என்று கொட்டை எழுத்தில் போட்டிருக்கிறதே!''

''இல்லையண்ணா! உன் சிநேகிதரின் பத்திரிகை மட்டும், 'ராஜ வம்சத்து நாரீமணியின் வீர மரணம்' என்று போட்டிருக்கிறது'' என்று புன்னகை செய்தாள் மாலதி.

''இல்லையா, பின்னே! விஷத்தை அத்தனை தைரியமாகக் குடித்திருக்கிறாளே!..... வீராங்கனைதானே!'' என்றான் சேகர் எகத்தாளமாக.

''ஏன் அண்ணா, அத்தனை பரிகாசமாகச் சொல்கிறாய்?''

''பின்னே என்ன? கட்டுப்பாடாக எல்லாம் சுய சிந்தனையை இழந்துவிட்டன. ஒன்றுவது இது 'கொலையாக இருக்கலாமோ?' என்று சந்தேகிக்கவே இல்லையே —''

''பஞ்சாயத்தார்களே அப்படித்தானே சொல்லியிருக்கிறார்கள்?'' என்றார் கோபால்.

''அப்படி ஒரு 'கதை' தாரிணியைப் பற்றி ஏற்கனவே உருவாக்கப்பட்டிருக்கிறது, இன்ஸ்பெக்டர். 'நான் ஒரு நாள் விஷத்தைக் குடிப்பேன்' என்று அவள் சொல்லி வந்ததைப் பஞ்சாயத்தார் உள்ளபடி காது புளிக்கக் கேட்டு விட்டார்கள். அந்த நிலையில் அவளுடைய மரணம் யாருடைய சந்தேக வட்டத்துக்குள்ளும் வராமல் சாமர்த்தியமாகத் தப்பித்துக் கொண்டுவிட்டது.''

''நீங்கள் அதைக் கொலை என்று சந்தேகிக்கிறீர்களா?''

''இது கொலையா, தற்கொலையா என்று தீர்மானிப்பதற்குமுன் — இது ஒரு தனிச் சம்பவமா அல்லது வேறு சில சம்பவங்களின் தொடர்ச்சியா என்பதை நாம் ஆராய வேண்டும்'' என்று நிறுத்தின சேகர், மேஜை டிராயரைத் திறந்து ஒரு சின்ன குறிப்பேட்டை எடுத்து ஒரு தடவை பார்த்துக் கொண்டான்.

''சில சம்பவங்கள் நடந்திருக்கின்றன. இந்த மதுர பவனத்திலிருந்து முந்தாநாள் தான் ஒரு பெண் காணாமல் போயிருக்கிறாள். அதே நாள் மாலை முத்துக் காட்டில் ஒரு பெண் தூக்கிச் செல்லப்படுவதை இருவர் பார்த்திருக்கிறார்கள்.... இங்கே காணாமல் போனவள்தான் அங்கே தூக்கிச் செல்லப்பட்டாளா? தூக்கிச் சென்றவர்கள் யார்? ஏன் தூக்கிச் செல்லப் பட்டாள்? எங்கே கொண்டு போனார்கள்..? மதுரபவனத்தில் எத்தனையோ வேலைக்காரர்களும் வேலைக்காரிகளும் இருக்கும் போது விமலா மட்டும் காணாமல் போவானேன்..... விமலாதான் தாரிணி தேவியின் அருகில் நெருக்கமாகப் பழகுகிறவள்.....அது மட்டுமல்ல; விமலா காணாமல் போன சந்தர்ப்பமும் பல கேள்விகளை எழுப்புகிறது..... மறு நாளிலிருந்து விமலாவுக்கு 'நைட் டியூட்டி' தொடங்குகிறது.....இரவு டியூட்டி ஆரம்பமாகும்போது அவள் காணாமல் போயிருக்கிறாள்.... இரவில்தான் தாரிணி தேவியும் இறந்திருக்கிறாள். இந்த இரண்டையும் சேர்த்துப் பார்த்தால் ஓர் உண்மை தெரிகிறது —''

''தாரிணி தேவி இறக்கும்போது அங்கே விமலா இருப்பதை யாரோ விரும்பவில்லை— அதுதானே?'' என்று கேட்டார் கோபால்.

''கரெக்ட்! விமலா இருப்பதை யாரோ விரும்பவில்லை. அப்படியானால் அந்த யாரோ யார்? எதற்காக அவர் விமலா இருப்பதை விரும்பவில்லை? விமலா நம் ஆள் என்கிற விஷயம் அவருக்குத் தெரிந்துவிட்டதா....? அவளை அப்புறப்படுத்திவிட்டு அவர் என்ன செய்தார்?.... தாரிணியைக் கொன்றாரா?''

''நியாயமான சந்தேகங்கள்தான்!'' என்றார் கோபால்.

''இன்னொரு விஷயம். விமலாவை ஒரே ஆள் கடத்திக் கொண்டு போயிருக்க முடியாது..... முத்துக்காட்டில் ஒரு வெள்ளைப் பொருளை இரண்டு பேர் தூக்கிக் கொண்டு போனதை ரமேஷூம் மாலதியும் பார்த்திருக்கிறார்கள். ஆம் ஐ கரெக்ட்?'' என்று மாலதியையும் ரமேஷையும் பார்த்தான் சேகர்.

''ஹண்டரட் பர்சண்ட் கரெக்ட்—'' என்றாள் மாலதி.

''ஆகவே இரண்டு பேர் இதே விவகாரத்தில் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்! அந்த



இரு விழிகள்

ரேகா சந்திரநாத்

இரண்டு பேர் யார்? விமலாவை அப்புறப்படுத்த நினைத்த நபரும், அவனுடைய கூட்டாளி ஒருத்தனுமா?.... அல்லது வேறு இருவரா?''

''ஒரு பெரிய குண்டர் கூட்டமே வேலை செய்கிறதோ என்றுகூடத் தோன்றுகிறது'' என்றாள் மாலதி.

'' அப்படியானால் அந்தக் குண்டர் கூட்டம் எங்கே இருக்கிறது? அதன் திட்டம் என்ன? தாரிணியைத் தீர்த்துக் கட்டுவதுடன் அதன் திட்டம் முடிந்துவிடுகிறதா? அல்லது இன்னும் ஏதாவது இருக்கிறதா?''

''தாரிணியை அது ஏன் தீர்த்துக் கட்ட வேண்டும்?'' என்று கேட்டான் ரமேஷ்.

''ஒரு பணக்காரி — பிரமுகி — காரணங்களுக்கா பஞ்சம்?'' என்று திருப்பிக் கேட்டான் சேகர். ''அவளால் யாராவது ஏமாற்றப்பட்டிருக்கலாம். அவளே யாருக்காவது கெடுதல் செய்திருக்கலாம்.....அல்லது அவள் சொத்துக்காக யாராவது —''

'' ஸார்! மதுர பவனத்திலிருந்து ஒரு துரும்புகூடக் களவு போகவில்லை'' என்றார் கோபால்.

''திருடப்படாமலே, அவள் சொத்துக்கள், அவள் மறைவு காரணமாக யாருக்காவது சேர முடியும் என்று இருந்தால் —'' என்று கேட்டான் சேகர்.

''தாரிணி தேவிக்குக் குழந்தைகள் கிடையாது'' என்றாள் மாலதி.

''மிஸஸ் பணிக்கருக்கு மூன்று குழந்தைகள் இருக்கின்றனவே! அவைகளை முன்னிட்டு யாராவது செய்திருக்கக் கூடாதா? பணிக்கருக்குக்கூட இப்போது பிராக்டீஸ் அத்தனை இல்லை என்றும், பணக் கஷ்டம் என்றும் கேள்வி—''

''அவர் செய்திருப்பாரா — ஏதாவது ரவுடி கோஷ்டியைக் கையில் போட்டுக் கொண்டு.''

''ஏன் கூடாது?''

''அவர் செய்திருக்க முடியாது. ஏனெனில் அவர் தம் வீட்டுக்குப் போன பிறகு கோவிந்து அவளுடன் பேசிக் கொண்டிருந்ததை வேலைக்காரர்கள் பார்த்திருக்கிறார்கள்'' என்றான் ரமேஷ்.

''அப்படியானால் கோவிந்துதான் அதைச் செய்தாரா?'' என்று கேட்டுவிட்டுச் சேகர் ஒவ்வொருவர்முகமாகப் பார்த்தான். மாலதி, ரமேஷ், கோபால் யாருமே இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கவில்லை.

''விமலாவைக் கடத்திச் சென்ற ஆள் மதுரபவனத்திலேயே இருப்பதாகவும் அவனைப் பற்றித் தடயம் கொடுப்பதாகவும் விருந்து ஆரம்பிக்குமுன் தாரிணி என்னிடம் சொன்னாள்'' என்றான் ரமேஷ்.

''அப்போது உங்கள் அருகில் இருந்தது யார்?''

''மாஜி நீதிபதிதான் இருந்தார்!''

''ஓ! அந்த ஒற்றைக் கண் பேர்வழி!''

''அந்த ஆள் செய்திருப்பாரா?'' என்றாள் மாலதி.

''அவர் எதற்காகச் செய்ய வேண்டும்?''

''விமலாவைக் கடத்திச் சென்ற ஆளைக் காப்பாற்ற! விமலாவைக் கடத்திச் சென்றவனைப் பற்றிய விவரத்தைத் தாரிணி வெளியில் சொல்லிவிடாதிருக்க —''

''பிதற்றல்! அந்தக் கிழத்துக்குக் கரப்பானைக் கண்டாலே தொடை நடுங்குமே!'' என்றான் ரமேஷ்.

''சரி, தாரிணி தேவிக்கு அவளுடைய விஷத்தை எடுத்து அவளுக்குக் கொடுத்துக் கொன்றது யார்?''

''தாரிணியின் கைகளேதான்!'' என்றாள் மாலதி.

"மாலதி! நீ ஒரு விஷயத்தை மறந்துவிடுகிறாய். எவ்வளவுதான் வீரம் பேசினாலும் விஷத்தை 'டக்'கென்று எடுத்துக் குடிப்பது என்பது அத்தனை எளிதல்ல; தாள முடியாத அவமானம், சட்டத்தின் பிடியில் சிக்கியே ஆக வேண்டிய நெருக்கடி, கண் மூடித்தனமான க்ஷண ஆத்திரம் — இம்மாதிரி சமயங்களிலே மட்டும்தான் ஒருத்திக்கு விஷம் குடிக்கும் துணிவும் வேகமும் பிறக்கும். யாரோ முன் பின் தெரியாத ஒருத்தி யாரோ பையனுடன் சுற்றிக் கொண்டிருக்கிறாள் என்பதற்காக அவர்களோடு துளிக்கூடச் சம்பந்தப்படாத ஒருத்தி விஷம் குடித்துத் தன்னை மாய்த்துக் கொண்டாள் என்பது நம்பமுடியாத விஷயம். ஆகவே இதில் இரண்டாம் தரப்புக் கைகள் சம்பந்தப்பட்டிருக்க வேண்டும் என்று வைத்துக் கொண்டே துப்புத் துலக்க வேண்டும்—"

"கரெக்ட்!" என்றார் கோபால்.

"நீ என்ன சொல்லிவிட்டு மதுர பவனத்திலிருந்து வந்திருக்கிறாய் ரமேஷ்?"

"என் பத்திரிகைக்குத் தாரிணி தேவியின் அந்திம கிரியைப் பற்றிச் செய்தி கொடுத்துவிட்டு வந்துவிடுவதாகக் கூறிவிட்டு வந்திருக்கிறேன் —"

"குட். நல்ல ஐடியா..... 'நானே முக்கியமான சேதி சொல்ல வேண்டுமே, எப்படிச் சொல்லி அனுப்புவது ?' என்று இருந்தேன். நன்றாகக் கேட்டுக் கொள்..... இப்போது தாரிணி தேவி விஷம் குடித்து இறந்துவிட்டாள் என்றே இந்த உலகம் நம்பிவிட்டது. அது அப்படியே நம்பிக் கொண்டிருக்கட்டும். நாமும் அப்படியே நம்புவதாகப் பாசாங்கு செய்வோம். 'எதிரி' இந்தப் பாசாங்கில் நன்றாக ஏமாந்து போவான். அசிரத்தையாகக்கூட இருப்பான்.... தலையைக்கூட நீட்டுவான்..... மதுரபவனத்துக்கேகூட வருவான். அப்படி யாராவது வந்தால் கவனிக்கத்தான் உன்னை டாக்டர் தம்பதியுடன் மதுர பவனத்தில் தங்கச் சொன்னேன் —"

"எத்தனை நாட்கள் தங்கியிருப்பது ?"

"அதிக நாள் இருக்க நேராது. அநேகமாக இன்று இரவோ அல்லது நாளையோ இந்த விஷயத்தில் சம்பந்தப்பட்ட யாராவது மதுர பவனத்துக்கு வருவார்கள்."

" எதற்காக?"

"ரமேஷ்! விமலாவின் கைப் பையை இன்னொர் ஆளும் தேடிக் கொண்டிருப்பதாக எனக்குச் செய்தி கிடைத்திருக்கிறது!" என்று கூறிவிட்டு மாலதியை அர்த்தபுஷ்டியுடன் பார்த்தான் சேகர்.

மாலதி அழகாகப் புன்னகை செய்தாள். அது, 'இந்தத் துப்பு நான் கண்டுபிடித்து வந்து சொன்னதாக்கும்' என்று கூறுவது போலிருந்தது.

"என்ன? விமலாவின் கைப் பையை இன்னொர் ஆளும் தேடுகிறானா ? யார் ?" என்று வியப்புடன் கேட்டான் ரமேஷ்.

"அதைத் தேடிக் கொண்டிருப்பது யார் என்று எனக்கு ஓர் ஊகம் இருக்கிறது. ஆனால் அதை இப்போது சொல்லமாட்டேன். ஆனால் அந்த ஹாண்ட் பாக், அதைத் தேடிக் கொண்டிருக்கிறவர்களின் கையில் மட்டும் போய்விடாக் கூடாது. அதில் முக்கியமான சில சாட்சியங்கள் இருக்கின்றன. அது நம்மிடம் உடனே வந்தாக வேண்டும். இன்றிரவு நீ மதுரபவனத்தில் தங்குவது அதைத் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு வருவதற்காகவும்தான்...... நாளைக் காலையில் நான் உன் வருகைக்காக இங்கேயே காத்திருப்பேன்...... ஓகே ?"

"ஓ. கே!" என்று எழுந்து கொண்டான் ரமேஷ். "நானும் இன்றிரவு மதுரபவனத்தில் தங்கத் தீர்மானித்ததற்கு ஒரு முக்கியமான காரணம் இருக்கிறது. ஆனால் அதை இப்போது சொல்லமாட்டேன்..... நாளைக் காலையில் வரும் போது அந்தக் காரணத்தை நீ நேரில் பார்ப்பாய்; அப்படியே அசந்து போய்விடுவாய் —"

" என்னப்பா, புதுசாக ஏதோ சொல்லிவிட்டுக் கிளம்புகிறாய். கொஞ்சம் விளக்கமாகத்தான் சொல்லிவிட்டுப் போயேன் " என்றான் சேகர்.

"ஊஹும்..... நாளை வரையில் நீ காத்திருக்கத்தான் வேண்டும். பை பை!"

ரமேஷ் வீதிக்கு வந்து ஓர் ஆட்டோவைக் கூப்பிட்டு ஏறிக் கொண்டான். பின்னாலேயே வந்து வழி அனுப்பின மாலதி, "ரமேஷ் ! ஆபத்து எதிலும் மாட்டிக் கொள்ளாதீர்கள் ! ஜாக்கிரதையாக இருங்கள்" என்றாள்.

"என் விமலாவுக்காக நான் உயிரையும் கொடுப்பேன்" என்றான் ரமேஷ்.

"எனக்கு மட்டும் விமலா நல்லபடியாக வந்து சேர வேண்டும் என்று கவலையில்லையா? நான் வேண்டிக் கொள்ளாத சாமி இல்லை, தெரிந்து கொள்ளுங்கள்" என்று கண்களைத் துடைத்துக் கொண்டாள் மாலதி.

ஆட்டோ நகர்ந்தது.

'விமலா ! நீ இருக்கும் இடம் எனக்குத் தெரிந்து விட்டது. உன்னைக் கண்டுபிடித்து, விடுவித்து, நாளைக் காலைக்குள் இந்தச் சேகர் முன் நிறுத்தாவிட்டால் நான் ரமேஷ் இல்லை!'

ஆட்டோ மதுரபவனத்தை நோக்கிச் சிட்டாய்ப் பறந்தது !

மதுர பவனம் கன்னங்கரிய இருளில் மூழ்கிக் கிடந்தது. வானத்துப் பட்டில் எண்ணற்று மின்னிய வெள்ளிச் சிரிப்புக்களையே அண்ணாந்து பார்த்துக் கொண்டிருந்தது.

அமைதியான அமைதி. அந்த அமைதியைக் கிறிக் கொண்டே, எங்கோ ஒரு கடிகாரத்தில் பன்னிரண்டு தடவை மணி அடித்தது.

'ஒன்று, இரண்டு, மூன்று' என்று எண்ணிக் கொண்டே வந்த ரமேஷ், 'அட, பன்னிரண்டாகிவிட்டதா ?' என்று திடுக்கிட்டு எழுந்தான்.

மெதுவாக எழுந்து வராந்தாவுக்கு வந்தான். அவன் நெஞ்சு 'படக், படக்' என்று அடித்துக் கொண்ட ஓசை அவனுக்கே பூதாகாரமாகக் கேட்டது. (தொடரும்)



ஒரு தவற்றைச் செய்துவிட்டு அதைத் திருத்திக் கொள்ளாதவன் இரண்டாவது தவற்றைச் செய்கிறான். — கன்பூஷியஸ் — பாலி

கூந்தலுக்கு சாயம் இப்படிச் பூசாதீர்கள்!





பாரதத்திலேயே
முதன்முதல்
தயாராகும் தானே-பரவும்
ஹேர் டை
உபயோகியுங்கள்.

புதியது!

கோத்ரெஜ்


பர்மனெண்ட் ஹேர் டை

சமமாகவும் இயற்கையாகவும் தானே பரவுகிறது

இப்போது, கூந்தலை இழை இழையாகப் பிரித்துச் சாயமேற்றும் தொல்லையில்லை. நிரூபணம் பெற்ற, தன்னிகரற்ற கோத்ரெஜ் பார்முலா (ஆக்க இலக்கணம்) கூந்தலுக்குச் சாயமேற்றுவதை, கூந்தலை அலசுவதைப் போல அத்தனை எளிதாக்கி விட்டது— காரணம், நீங்கள் பூசும்போதே, அதன் வண்ணம், சமமாகவும் எளிதாகவும் தானே பரவுகிறது.

கோத்ரெஜ் பர்மனெண்ட ஹேர் டை— இதில் தீங்கு விளைவிக்கும் ரசாயனப் பொருட்கள் எதுவுமில்லை. மென்மையான, மனதுக்கினிய நறுமணம் கொண்டது. உங்கள் கூந்தலைப் பல வாரங்கள் மென்மையாகவும் இளமை மெருகோடும் இயற்கையான கருமையோடும் விளங்கச் செய்கிறது.


ஆண்களுக்கும் பெண்களுக்கும் கூட! 2 வண்ணங்கள்: இயற்கையான கருமை, கரும் பழுப்பு.



கோத்ரெஜ் பர்மனெண்ட் ஹேர் டை, இதர ஹேர் டைகளை, பிந்தியவைகளாக்கிவிட்டது. ஷாம்பூ தேய்ப்பது போல் அத்தனை எளிது, இதனை உபயோகிப்பது.

CMGS-69-162 TAM

வாழ்க்கையின் அர்த்தம் புரிகிறது...



அய்க்கண்

போட்டிக்கதை 3

எல்லாம் முடிந்து விட்டது.

சட்டப்படி இனிமேல் அவர்கள் கணவன்—மனைவி இல்லை. கோர்ட்டிலே விவாகரத்து வழக்கு முடிந்து வெளியே வருகிறார்கள், சந்திரனும், அபர்ணாவும்.

கோர்ட்டிலே கூட்டம் அதிகம் இல்லை. அங்கே இருந்தவர்களுக்கு அபர்ணாவை அடையாளம் தெரியாதது நல்லதாய்ப் போயிற்று.

வழக்கு ஆரம்பத்திலேயே சந்திரன் சொல்லி யிருந்தான்.

''அபர்ணா! நீ வளர்ந்து வர்ற நடிகை. படங்களிலே குடும்பப் பாங்கான பெண்ணாகவே நடிச்சு நடிச்சு உனக்குன்னு ஓர் 'இமேஜ்' ரசிகர்கள்மத்தியிலே ஏற்பட்டிருக்கு. இந்த நிலையிலே நீ கணவனை விவாகரத்து செய்திட்டவங்கிற நியூஸ் வெளியே தெரிஞ்சா —கிசுகிசு செய்தியாகப் புகைந்தால் கூட, அந்த 'இமேஜ்' உடைஞ்சு போயிடும். ரசிகர்கள் மத்தியிலே உனக்கு இருக்கிற புகழ், மதிப்பு எல்லாம் போய், வெறுப்பும் கெட்ட பேரும் ஏற்பட்டுடலாம். அதனாலே இந்த விவாக ரத்து விஷயம் பரம ரகசியமாக இருக்கட்டும்....''

சில மணி நேரங்களுக்கு முன்பு வரை, கணவன் — மனைவியாக இருந்த அவர்கள், இப்போது உறவில்லாத யாரோவாக, கோர்ட்டுக்கு வெளியே வரும்போது அவன் மனம் நடந்ததை எண்ணியது.

அன்று இரவு வெகு நேரம் கழித்து வந்த அபர்ணா, அலுப்போடு ஒன்றும் பேசாமல் சோபாவில் தளர்ந்து சாய்ந்தாள். அவளுக்காகக் காத்துக் கொண்டிருந்த கணவனை அவளால் நிமிர்ந்து கூடப் பார்க்க முடியவில்லை. காத்திருந்ததால் ஏற்பட்ட சலிப்பும் மனைவியின் மௌனமும் அவனுடைய பொறுமையைத் தகர்த்து விட்டன.

''அபர்ணா! ஏன் இவ்வளவு லேட்?''

அபர்ணா திடுக்கிட்டு நிமிர்ந்து உட்கார்ந்து கணவனைப் பார்த்தாள் அவள்.

இந்தக் கேள்வி இதுவரை அவன் வாயால் கேட்காதது; அவள் காதால் கேட்காதது.

அவள் எங்கே போயிருந்தாள் என்பது அவனுக்குத் தெரியும். பம்பாயிலிருந்து வந்திருந்த புரொட்யூஸர் — டைரக்டர் சுதர்ஸனை, ஹோட்டல் பிரியாவில் சந்தித்து நடித்துப் பட சான்ஸ் கேட்கத்தான் அவள் போயிருந்தாள்.

கணவனிடமிருந்து வந்த எதிர்பாராத கேள்வியைக் கேட்டு, மனம் பதைக்க, உதடு துடிக்க, முகம் சுருங்க, விதிர்விதிர்த்துப்போய் விட்டாள் அபர்ணா.

கணவன் சாதாரணமாக இந்தக் கேள்வியைக் கேட்கவில்லை என்பதை அந்த நடிகை புரிந்து கொண்டாள்.

''என்மேல் நம்பிக்கை இல்லாமல் கேட்கிற இந்தக் கேள்விக்கு நான் சொல்ற பதில், உங்களுக்கு நம்பிக்கை ஏற்படுத்தப் போகிறதா?'' என்று சினிமா வசன பாணியிலேயே நறுக்கென்று சொல்லி விட்டு ஹாலை விட்டு உள்ளே சென்றாள்.

அன்று முதல் அவனுடைய இதய பீடத்தை விட்டு வெளியேறி விட்டாள், அபர்ணா.

சாதாரண நாடகத் துணை நடிகையாக இருந்த அவளை, இன்றைய நட்சத்திர ஸ்தானத்துக்குக் கொண்டு வரும்வரை, அவனுடைய எழுத்துச் செல்வாக்கு அவளுக்குத் தேவையா யிருந்தது. உயர்ந்த பாத்திரங்களைப் படைத்து அதன் மூலம் குணசித்திர நடிகைகளை உருவாக்குகிற எழுத்தாளக் கணவன் இனிமேல் தேவையில்லை.

கோர்ட் வாசலுக்கு வந்து நிற்கிறார்கள் இருவரும். அவர்கள் பிரியும் நேரம் நெருங்கி விட்டது.

அபர்ணா, தன் சகோதரன் மகள் ரூபி சாந்தியுடன் சொந்தக் காரில் வந்திருந்தாள். சந்திரன், டைரக்டர் ராஜாராமின் காரைக் கேட்டு எடுத்துக் கொண்டு வந்திருந்தான்.

''போய்ட்டு வரேங்க...''

—குரல் தழுதழுக்க, கண்களில் நீர் கசிய, கைகூப்பி வணங்குகிறாள் அபர்ணா.

''ஓகே... விஷ் யூ குட் லக்!''

—நிச்சலனமாகச் சொல்ல ஆரம்பித்த அவன் குரல் திடீரென்று உடைந்து தழுதழுக்கிறது.

''தாங்க் யூ!''

—கீழே விழத் துடித்த கண்ணீர்த் துளிகளை அகன்ற விழிகளுக்குள் விழுங்கிக் கொண்டே அவனை ஓரக் கண்களால் பார்க்கிறாள் அபர்ணா.

தன் கையைப் பிடித்துக் கொண்டிருந்த குழந்தை சாந்தியை விலக்கி, அபர்ணா கையில் ஒப்படைக்கிறான் அவன்.

''சாந்தி! நீ அத்தையோட காரிலே போம்மா...''

''இல்லே, நான் உன்னோடதான் வருவேன். வா, வீட்டுக்குப் போவோம்.''





விஷயம் புரியாத குழந்தை அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு காரை நோக்கி இழுக்கிறாள்.

''இல்லே, சாந்தி! நான் உன்னோட வந்தா, நீ வீட்டுக்குப் போக முடியாது. நான் வேறே பாதையிலே தனியாப் போறேன்...''

வலுக் கட்டாயமாக அவளுடைய பிஞ்சுக் கைகளை விலக்குகிறான் சந்திரன்.

அப்பொழுது அபர்ணாவின் டிரைவர் ஓடி வருகிறான்:

''அம்மா! நம்ம கார் 'கார்ப்பரேட்டரி'லே ரிப்பேர் ஆயிடுச்சும்மா. நானும் என்னென்னமோ பண்ணிப் பார்த்துட்டேன். ஒண்ணும் சரிப்படலே. பக்கத்திலே ஒர்க்ஷாப்பே காணோம். டவுன்லேருந்துதான் யாரையாவது கூட்டிக்கிட்டு வந்து ரிப்பேர் செய்யணும்....ரெண்டு மூணு மணி நேரமாகுமே?'' என்று கையைப் பிசைகிறான் டிரைவர்.

ரெண்டு மணி நேரத்துக்கு மேல் இந்த இடத்தில் நின்று கொண்டிருப்பதா? —

அபர்ணா திகைக்கிறாள்.

''மிஸ் அபர்ணா! இஃப் யூ டோன்ட் மைன்ட், என் காரிலேயே வீட்டுக்குப் போயிடலாமே... இங்கே நீங்க தனியாக் காத்துக்கிட்டு நிக்கறது நல்லாயில்லே. டிரைவர்! நீ காரை ரிப்பேர் பண்ணிக்கிட்டு வா... சாந்தி! வாம்மா, நம்ம காரிலேயே போவோம்'' என்று காரின் பின் ஸீட்டைத் திறக்கிறான் சந்திரன்.

அபர்ணா ஒன்றும் பேசாமல் பின் ஸீட்டில் ஏறி உட்காருகிறாள். சாந்தி முன் ஸீட்டில் சந்திரன் பக்கத்தில் உட்கார்ந்து கொள்கிறாள்.

கார் நகர்கிறது.

''மாமா! எனக்குப் பசிக்குது. காப்பி வாங்கித் தா...'' என்று திடீரெனக் குரல் எழுப்புகிறாள் சாந்தி.

அந்தச் சாலையில் இருந்த ஒரு ஹோட்டல் முன்னால் காரை நிறுத்துகிறான் சந்திரன்.

'ஹோட்டல் சுபா'!

சட்டென்று திரும்பி அபர்ணாவைப் பார்க்கிறான்; அதே சமயத்தில் அவளும் அவனைத் திரும்பிப் பார்க்கிறாள்.

கல்லாவில் உட்கார்ந்திருந்த முதலாளி, அபர்ணாவை அடையாளம் தெரிந்துகொள்கிறார்:

"வாங்கம்மா! வாங்க ஸார்! வாங்க... உள்ளே போங்க..." என்றவர் மணியை ஓங்கி அடித்து "டேய் பையா! இவங்களை 'ஃபாமிலி ரூமு'க்கு அழைச்சுக்கிட்டுப் போ" என்று அலறுகிறார்.

"இல்லீங்க... காப்பி மட்டும்தான் சாப்பிடப் போறோம்... ஃபாமிலி ரூம் வேண்டாம். இங்கேயே..." என்று தயங்குகிறாள் அபர்ணா.

"நோ... நோ... உங்க மாதிரி ஃபாமிலிகளுக்குத்தானே ஃபாமிலி ரூம் வைச்சிருக்கோம்.... ப்ளீஸ் நீங்க அங்கே போங்க.... டேய் பையா!" என்று மறுபடியும் கொஞ்சம் பெரிய சுருதியில் அலறுகிறார் அவர்.

"நம்ம டைவர்ஸ் விஷயம் வெளியே தெரிய வேண்டாம். இந்த மாதிரி சங்கடமான நிலை இதுதான் கடைசி..." என்று ரகசியமாக அவள் காதுகளில் மட்டும் கேட்கும்படியாகச் சொல்லிவிட்டு, சாந்தியுடன் உள்ளே செல்கிறான் சந்திரன்.

சந்திரன் அபர்ணாவைப் பால பாஸ்கரின் நாடக ஒத்திகையில்தான் முதன் முதலில் சந்தித்தான். பாலபாஸ்கர் நல்ல நடிகன் மட்டுமல்ல; ஒரு திறமையான நாடக டைரக்டர். அவனுடைய 'தோ நாடகக் குழு'வுக்குச் சந்திரன்தான் நாடகங்கள் எழுதிக் கொடுப்பது வாடிக்கை. அப்பொழுதே சந்திரனின் இரண்டு நாடகங்கள் திரைப்படமாகியிருந்தன. தயாரிப்பிலிருக்கும் மூன்று நாடகங்களுக்கும் கதை, வசனம் எழுதிக் கொண்டிருந்தான். சினிமா உலகில் பிஸி எழுத்தாளனாகி விட்டாலும், நண்பன் பாலபாஸ்கருக்காகத் தொடர்ந்து நாடகங்கள் எழுதிக் கொடுத்து வந்தான் அவன்.

அன்றைய ஒத்திகையின்போது அபர்ணாவைச் சந்திரனுக்கு அறிமுகம் செய்து வைத்தான் பாலபாஸ்கர்.

"மிஸ் அபர்ணா, தஞ்சாவூர்ப் பக்கத்துப் பொண்ணு. சினிமா சான்ஸ் தேடி மெட்ராசுக்கு வந்திருக்கு. நல்லா ஆக்ட் பண்ணுது..." என்றான் அவன்.

சந்திரனுடைய எழுத்துத் திறமையில் ஏற்கனவே மதிப்பு வைத்திருந்த அபர்ணா, அவனை நேரில் கண்டதும் முதல் பார்வையிலேயே நெஞ்சைப் பறி கொடுத்து விட்டாள்.

அறிமுகத்துக்குப் பின் பேச்சும் பழக்கமும் தொடர்ந்து, ஹோட்டலுக்கு வந்து காப்பி சாப்பிடும் அளவுக்கு வளர்ந்தது.

அன்று இதே ஃபாமிலி ரூமில்தான் அபர்ணா உணர்ச்சிப் பெருக்கில் தன் துயரங்களை அவனிடம் கொட்டித் தீர்த்தாள்.

சினிமா நடிகையாவதற்காக அவள் படும் துயரங்கள் அவனுக்குப் புரிந்தது. சட்டென்று ஒரு முடிவுக்கு வந்தான் அவன். பக்கத்தில் போய் அவள் கண்ணீரைப் பரிவோடு துடைத்தான். அவனுடைய கை ஸ்பரிசம் உணர்ந்து உடல் சிலிர்த்து நிமிர்ந்து பார்த்தாள் அவள்.

"அபர்ணா! அழாதே! சினிமா உலகமே அப்படித்தான். புதுசா வர்றவங்களையெல்லாம் காலடியிலே போட்டு நசுக்கிற இதே சினிமாக்காரங்க, நட்சத்திர நடிகர்களாயிட்டா, அவங்க காலடியிலே விழுந்து தவம் கிடப்பாங்க. உன்னை ஒரு நடிகையாக்குவது — ஸ்டாராக்குவது என் பொறுப்பு — என் திறமைக்கு ஒரு சவால்..."

அவனுடைய பேச்சின் உறுதியையும் உண்மையையும் கண்ட அபர்ணா அவன் மார்பில் முகம் புதைத்து நிம்மதியாக நெட்டுயிர்த்தாள்.

பாலபாஸ்கரின் நாடகத்தில் அபர்ணாவுக்கென்றே ஓர் அற்புதமான பாத்திரத்தை உருவாக்கி அவளை நடிக்கச் செய்தான் சந்திரன். நாடகம் வெற்றிகரமாக நடந்து, வெள்ளி விழா, பொன் விழா, வைர விழா எல்லாம் கடந்தது.

நாடகத்தில் அவளுடைய நடிப்புத் திறமை பற்றிச் சந்திரன் டைரக்டர் ராஜாராமிடம் சொன்னான். ராஜாராம் புது முகங்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிற நல்ல டைரக்டர். நாடகத்தைப் பார்த்த அவரும் அபர்ணாவின் நடிப்பைப் பாராட்டி, அவளைக் கதாநாயகியாகப் போட்டு, அந் நாடகத்தைத் திரைப்படமாக்கினார். படம் எதிர்பார்த்தபடியே 'ஓஹோ' என்று ஓடியது. ஒரே இரவில் அபர்ணா நட்சத்திர நடிகையாகி விட்டாள். தமிழ்த் திரை வானத்தில் அவள் இப்போது ஒரு புதிய நிலவு.

மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு இன்று அதே ஹோட்டலில் அதே ஃபாமிலி ரூமில் அதே சர்வர் சுந்தரம் அவர்களை வரவேற்கிறான்.

"ஸார்! அம்மா நடிப்பை அடிக்கடி சினிமாவிலே பார்த்து ரசிப்பேனுங்க. இப்போ நான் அவங்க விசிறி. உங்களாலே அவங்க முன்னுக்கு வந்ததையும் ரெண்டு பேரும் கல்யாணம் பண்ணிக்கிட்டதையும் பேப்பரிலே பார்த்து ரொம்பச் சந்தோஷப்பட்டேன்.... இப்போ இங்கே நேரிலேயே வரு



ஆடையிலே பொட்டழகு அணங்கினிடம் கட்டழகு
ஜாடையிலே ரதியழகு ரம்யமான சிரிப்பழகு
வாடையிலே மலரழகு மலர்ச்சியின் முக அழகு
நாடையிலே நாண(அ)ழகு நங்கையின் சிறப்பழகு

மேலட்டை வண்ணப்படம்: உத்ரா

லிங்கன்னு நான் எதிர்பார்க்கவேயில்லீங்க..'' என்று உளம் உருகப் பேசுகிறான் சுந்தரம்.

''மாமா! பசிக்குது மாமா!'' என்று சந்திரனை உலுக்குகிறாள் குழந்தை சாந்தி.

''குழந்தை யார் ஸார்?''

''என் அண்ணன் குழந்தை. பெயர்சாந்தி'' என்கிறாள் அபர்ணா.

''பாப்பா, சாந்திக் கண்ணு! இதோ டிபன் கொண்டாறேன் அம்மா...'' என்று உள்ளே செல்லத் திரும்புகிறான் சுந்தரம்.

'விவாகரத்து ஆனதை விருந்துடன் கொண்டாடுகிற அதிசய தம்பதிகள் நாம்தான்' என்று மனத்துக்குள் சிரித்துக் கொள்கிறான் அவன்.

சர்வர்களுக்கே உரிய சர்க்கஸ் திறமையுடன் கையில் மூன்று தட்டுக்கள் நிறைய ஸ்வீட், பலகாரங்களைக் கொண்டு வந்து வைக்கிறான் சுந்தரம். சாந்தி வேகமாகக் கையையும் வாயையும் இணைக்க ஆரம்பிக்கிறாள்.

ஹோட்டலை விட்டுக் கார் மறுபடியும் நெடுஞ்சாலையில் நீந்திச் செல்கிறது.

வயிறு நிறைந்துவிட்ட மகிழ்ச்சியில் முன் ஸீட்டில் நின்றுகொண்டே சுற்றிலும் வேடிக்கை பார்த்துக் கொண்டு வந்த சாந்தியின் பார்வையில் ஒரு பொம்மைக் கடை விழுகிறது.

வால்ட் டிஸ்னியின் மிக்கி மவுஸ் மாதிரி அமைந்திருந்த ஒரு பெரிய பலூன் பொம்மை. அந்தக் கடையின் முகப்பில் பல வண்ணங்களில் காற்றில் அசைந்தாடிக் கொண்டிருக்கிறது.

''மாமா!... அதோ அந்தப் பொம்மை வாங்கித் தா, மாமா!''

சந்திரனின் மோவாயைத் தொட்டுத் திருப்புகிறாள் குழந்தை.

''சாந்தி!''

—பின்னாலிருந்து அபர்ணாவின் குரல் கடுமையாக ஒலிக்கிறது.

''இப்ப எதுக்குப் பொம்மை? வீட்டிலே எவ்வளவோ இருக்கே?''

''இந்தப் பொம்மை வேணும் அத்தே!'' என்று சிணுங்கிக் கைகளை உதற ஆரம்பிக்கிறாள் சாந்தி.

''மிஸ் அபர்ணா! குழந்தை ரொம்ப ஆசைப்படுகிறாள். என்னுடைய கடைசி அன்பளிப்பாக அவளுக்கு ஒரு பொம்மை வாங்கிக் கொடுக்க விரும்புகிறேன். தயவுசெய்து தடுக்காதீர்கள்'' என்று ஆங்கிலத்தில் கேட்டுக் கொள்கிறான் சந்திரன். அதுவே தன்னுடைய கடைசி அன்பளிப்பு என்ற விஷயம் குழந்தைக்குத் தெரிய வேண்டாம் என்பதால் தான் ஆங்கிலத்தில் பேசுகிறான் அவன்.

'ஓ.கே' என்ற பாவனையில் தலையை ஆட்டுகிறாள் அபர்ணா.

காரிலிருந்து இறங்கி, இளம் மான் குட்டியாய்த் துள்ளிக் கொண்டு, அத்தையை ஒரு கையிலும் மாமாவை ஒரு கையிலும் பிடித்து இழுத்துக் கொண்டு கடைக்கு ஓடுகிறாள் சாந்தி.

நடிகையை அடையாளம் தெரிந்து கொண்ட கடை முதலாளி, சட்டென்று எழுந்து, ''வாங்க... வாங்க...'' என்று வரவேற்கிறார்.



''உன்னிடம் எப்பவோ ஐம்பது பைசா கைமாற்று வாங்கினேன் என்பதற்காகத் தினமும் நீ, பைசா கொண்டை போட்டு எனக்கு நினைவு படுத்தணுமா?''

கடை வாசலில் அவர்களை விட்டு விட்டு உள்ளே உற்சாகத்துடன் நுழைந்தாள் சாந்தி.

''குழந்தை நம்ம குழந்தைதானே?''என்று கேட்கிறார் கடைக்காரர்.

''இல்லீங்க... என் அண்ணன் குழந்தை'' என்ற அபர்ணாவின் பதிலில் கடைக்காரருக்கு நம்பிக்கை ஏற்படவில்லை என்பதை அவருடைய முகம் காட்டுகிறது.

''சரிசரி'' என்று முணு முணுத்து விட்டு, ''டேய்! குழந்தைக்கு நல்ல பொம்மைகளை எடுத்துக் கொடு'' என்று உள்ளே பார்த்துக் குரல் கொடுத்தவாறு, ''உட்காருங்க ஸார்! உட்காருங்கம்மா!'' என்று அவர்களுக்குத் தானே நாற்காலிகளை எடுத்துப் போட்டு உபசரிக்கிறார்.

''ஸார் கதை வசனம் எழுதி, நீங்க நடிச்ச 'அவள்தான் மனைவி' படத்தை நேத்து நாலாவது தடவையாய்ப் பார்த்தேன். புருஷன் பண்ணற கொடுமைகளை யெல்லாம் நீங்க எதிர்த்துப் பேசாமப் பொறுமையா யிருக்கீங்களே, அது என் மனசையே உருக்கிடுச்சுங்க.. என் ஒய்ஃப் அதைப் பார்த்து விம்மி விம்மி அழுதிட்டா. அவ்வளவு உருக்கமாய் நடிச்சிருக்கீங்க... இவ்வளவு அருமையாய் எப்படித்தான் நடிக்கிறீங்களோ?'' என்று வாயாரப் பாராட்டுகிறார் கடைக்காரர்.

அபர்ணா ஒன்றும் பேசத் தோன்றாமல் கீழே பார்த்துக் கொண்டிருக்கிறாள்.

''ஸார்! அதுதான் நடிப்பு...'' என்று சொல்லிவிட்டு உள்ளே பார்வையைத் திருப்புகிறான் சந்திரன்.

சாந்தி மிக்கிமௌஸ் பொம்மையைக் கையில் எடுத்துப் பார்க்கிறாள். வேறு ஒரு பொம்மையைப் பார்த்ததும், மிக்கி மவுஸை வைத்துவிட்டு, அதை எடுத்துக் கொள்கிறாள். பிறகு அதையும் விட்டுவிட்டு இன்னொரு பொம்மையிடம் ஓடுகிறாள். ஒவ்வொரு பொம்மையை எடுத்ததும் தூரத்தில் இருக்கிற இன்னொரு பொம்மை அவள் கண்களைக் கவர்கிறது.

கைக்கு ஒரு பொம்மை இருந்தாலும், குழந்தையின் பார்வை பின்னாலே சிரித்துக் கொண்டிருக்கும் பொம்மைகளின் மேலேயே நிலைத்து நிற்க, அரை மனத்தோடு திரும்பி வருகிறாள்.



''எதற்கு நாலு போர்ட்டரைக் கூப்பிடுறீர்கள்? சின்னப் பெட்டி தானே? இதை நீங்களே ரெயிலில் வைக்க முடியாதா?''

''அதற்கில்லே! உனக்கு அப்பர் பர்த் கிடைக்க இருக்கே!''

பில்லுக்குப் பணம் கொடுத்து விட்டுச் சந்திரன் புறப்படுகிறான்.

கார், நெடுஞ்சாலையில் தவழ்ந்து செல்கிறது.

அபர்ணா வீட்டுக்குப் போகிற வழியில் தான் டைரக்டர் ராஜாராமின் பங்களா.

''மிஸ் அபர்ணா! டைரக்டரைப் பார்த்து விஷயத்தைச் சொல்லிவிட்டுப் போகலாமே? உன் வாழ்க்கை முன்னேற்றத்தில் அவருக்கு முக்கிய பங்கு இருக்கு இல்லையா?''

அபர்ணாவின் மனதிலே திடுமென்று ஒரு புழுக்கம்.

''இப்பவே நாம் சொல்லிடணுமா?''

—அவள் குரல் சுரத்தில்லாமல் பிசுபிசுக்கிறது.

''ஆமா... இப்பத்தான் நாம் நாமாயிருக்கிறோம். நாளைக்கு நீங்க, நீங்க... நான், நானாயிடுவோமில்லையா?''

—புன்முறுவலிக்கிறான் அவன்.

அபர்ணா தலையை ஆட்டுகிறாள். என்னவோ அவனுடைய பேச்சை அவளால் தட்ட முடியவில்லை. அவனுடைய பேச்சில் உள்ள ரசனையா அல்லது கடைசி நான்தானே என்ற கழிவிரக்கமா? அல்லது....

கார், பங்களாவுக்குள் நுழைகிறது.

சினிமா செட் போட்டதுபோல் பிரம்மாண்டமான வீடு அது. காரிலிருந்து இறங்கி, மூவரும் உள்ளே செல்கிறார்கள்.

''வா சந்திரன்! வாம்மா அபர்ணா! ஏய் சாந்திக்குட்டி! யூ ஆர் வெல்கம்'' என்று சிரித்து வரவேற்றவாறு உள்ளிருந்து வருகிறார் டைரக்டர் ராஜாராம்.

''என்ன சந்திரன், எல்லாம் முடிந்துவிட்டதா?''

தலையை ஆட்டுகிறான் அவன்.

''அபர்ணா! நான் இப்போ டைரக்டர் என்கிற முறையிலே பேசலே — உன்னுடைய 'வெல்-விஷர்'. என்கிற முறையிலே பேசறேன். கணவன் — மனைவின்னா, அதிலும் சினிமாத் தொழிலில் உள்ள கணவன் — மனைவின்னா, ஆயிரம் கருத்து வேறுபாடுகள் இருக்கும். அவற்றை அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டுப் போகப் பழகிக்கணும். அட்ஜஸ்ட் செஞ்சுக்க முடியாத அளவுக்குக் கருத்து வேறுபாடு வந்து விட்டால் கூட, நீங்க கொஞ்ச காலம் தாற்காலிகமாகப் பிரிஞ்சு இருந்து பார்த்திருக்கலாம். ஆனா நீ உணர்ச்சி வசப்பட்டு நிரந்தரமாகப் . பிரிஞ்சு போயிடணும்னு அவசரப்பட்டுத் தீர்மானிச்சிட்டே... ஆல்ரைட்— இந்த விஷயம் வெளியிலே வேறே யாருக்கும் தெரிய வேண்டாம். என் மனைவிக்குக்கூட நான் இதைச் சொல்லலே...''

''எனக்கு வேறே வழியில்லே, ஸார்! தமிழ்ப் படங்களிலும் முயற்சி செஞ்சு நடிகையாகணும்னு எனக்கு ரொம்ப ஆசை. ஆனால் அதுக்கு இவர்...'' என்று சமாதானம் சொல்லும் முறையில் முணுமுணுக்கிறாள் அபர்ணா.

''எனக்கு எல்லாம் தெரியும் அபர்ணா! எட்டத்திலே இருக்கிற லட்சியங்கள் மனிதனுக்குத் தேவைதான்; அது அவனை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வர்றது உண்டுதான். ஆனால் எட்ட முடியாத பேராசைகள், மனிதனை அதல பாதாளத்திலே தள்ளிவிடும் — என்ன பார்க்கிறே? இவ்வளவும் உன் கணவன் — ஐ மீன் — இந்தச் சந்திரன் எழுதுகிற வசனங்கள் மாதிரி இருக்கேன்னு பார்க்கிறியா?— இதெல்லாம் வாழ்க்கை அனுபவங்கள். உனக்குப் புரிய நாட்களாகும்'' என்று சிரிக்கிறார் ராஜாராம்.

டெலிபோன் மணி கிணு கிணுக்கிறது. ரிஸீவரை எடுத்துப் பேசுகிறார் டைரக்டர்.

''ஹலோ, ராஜாராம் ஹியர்... ஆமா, இங்கேதான் இருக்காங்க... எந்த ஸ்டுடியோ? சரி, உடனே அனுப்பி வைக்கிறேன்'' என்று சொல்லிவிட்டுப் போனை வைக்கிறார்.

''என்ன அபர்ணா, இன்னிக்கு மல்லிகா பிக்சர்ஸ் படத்துக்கு கால்ஷீட் கொடுத்திருக்கியாமே? அவங்க திலகா ஸ்டுடியோவிலே நாலாம் நம்பர் ஃப்ளோரிலே உனக்காகக் காத்துக்கிட்டு இருக்காங்களாம். உன் அண்ணன் உன்னைத் தேடி ஒவ்வொரு இடமாய்ப் போன் பண்ணிட்டுக் கடைசியிலே இங்கே பண்ணியிருக்கான்.''

''ஆமாம் ஸார்! இன்னிக்கு அபர்ணாவுக்கு அங்கே ஷூட்டிங்தான்.... கோர்ட்டுக்குப் போக வேண்டி ஏற்பட்டதாலே மறந்து போச்சு'' என்கிறான் சந்திரன்.

''சரி, என்ன நிலைமை ஏற்பட்டாலும் கால்ஷீட்டுக்குக் கரெக்ட் டயத்துக்குப் போகணும். நமக்குத் தொழில்தான் முக்கியம். முதலாளி லேட்டாய்ப் போகலாம். ஆனால் தொழிலாளி லேட்டாய்ப் போகக் கூடாது. அபர்ணா! நீ ஸ்டுடியோவுக்குப் புறப்படு. உன் காரிலேதானே வந்தே?''

''இல்லே ஸார்! என் கார் கோர்ட் வாசலிலேயே ரிப்பேர் ஆயிடுச்சு. உங்க காரிலேதான் இங்கே வந்தோம்.''

''அப்படியா? சரி, இப்பவும் என் காரிலேயே ஸ்டுடியோவுக்குப் போ. எனக்கு ஒண்ணும் வேலையில்லே. சந்திரன்! நீ அபர்ணாவைக் கூட்டிக்கிட்டு ஸ்டுடியோவுக்குப் போ. அங்கேயும் அபர்ணா கார் வரலேன்னா ஷூட்டிங் முடிஞ்சதும் இந்தக் காரிலேயே அவ வீட்டிலே டிராப் பண்ணிட்டு வா.'' என்று சொல்லி அனுப்பி வைக்கிறார் ராஜாராம்.


அமிர்தாஞ்சன் கிரைப் மிக்ஸ்சர்
குழந்தையின் ஜீரண சக்தியை
சீராக்கி ஆரோக்கியமும்
ஆனந்தமும் அளிக்கிறது.
வயிற்றுவலி, வாயு, அஜீரணம்,
பல்முளைக்கும் உபாதை
முதலியவைகளை
உடனே குணப்
படுத்துகிறது.
அமிர்தாஞ்சன் லிட்.
AMRUTANJAN
Gripe Mixture
ஆனந்தமாய் இருக்கும் குழந்தை
அமிர்தாஞ்சன் கிரைப் மிக்ஸ்சர்
சாப்பிடும் குழந்தை
OBM: 2642/TM


ஐடெக்ஸ்
அழகு சாதனங்கள்
EYETEX
BINDI
EYETEX
REGD.
EYETEX
BINDI
EYETEX
PASTE
EYETEX- DELUXE BINDI PENCIL
ARAVIND LABORATORIES MADRAS-600 033

சாந்தியை அழைத்துக் கொண்டு அவசரம் அவசரமாகக் காரில் ஏறுகிறாள் அபர்ணா. அவர்கள் ஸ்டுடியோவை அடைந்தபோது ஏற்கெனவே கதாநாயகன் வந்து மேக்கப்புடன் காத்துக் கொண்டிருக்கிறார்.

''எக்ஸ்யூஸ் மீ, ஸார்! கொஞ்சம் லேட்டாப் போயிடுச்சு'' என்று கூறிவிட்டு, மேக்கப் அறைக்கு விரைகிறாள் நடிகை. சந்திரன் ஸெட்டிலேயே உட்கார்ந்து கொள்கிறான்.

மேக்கப் நடக்கும்போதே, வசனகர்த்தா அன்றைய டேக்கில் பேசவேண்டிய 'டயலாக்'கைப் படித்துக் காட்டுகிறார்.

''இன்னிக்கு ஒரு முக்கியமான சீன். தாலி கட்டிய மனைவியைப் பிடிக்காமல் பழைய காதலியை நினைத்தே ஏங்கிக்கொண்டிருக்கிறான் கணவன். அவள் நினைவிலே மனைவியை அலட்சியப்படுத்தித் தனிமையிலே தவிக்க விடுகிறான் அவன். அவனைத் திருத்துவதற்காக மனைவி பாடு படற சீன் தான் இன்னிக்கு.''

''ரொம்ப எமோஷனல் சீன்தான். சரி, வசனத்தைப் படிங்க.''

''உலகத்திலே விரும்பியதெல்லாம் கிடைக்கலேன்னு வருத்தப்படறது முட்டாள்தனமுங்க; கிடைக்கிறதை விரும்பி சந்தோஷமாமாயிருக்கிறதுதான் புத்திசாலித்தனம்... ஏன்னா, விருப்பங்கறதுக்கு ஓர் எல்லை இல்லிங்க. ஒண்ணிலேருந்து ஒண்ணாய் விருப்பங்கள் வளர்ந்துக்கிட்டேதான் போகும். விருப்பங்களையெல்லாம் மனிதனுக்குக் கொடுத்த கடவுள் திருப்தியை மட்டும் அவனுக்குக் கொடுக்கல்லே. பெரிய பொம்மைக் கடைக்குள்ளே ஒரு குழந்தையைக் கொண்டு போய் விட்டால், இது வேணும், அது வேணும்னு ஒவ்வொண்ணாய் எடுத்துப் பார்த்துக்கிட்டே இருக்குமே ஒழிய, கையிலே இருக்கிற பொம்மையைப் பார்த்துத் திருப்தி அடையாது. இல்லையா?—''

'ஸெட்'டுக்கு வந்த பிறகும் அவள் மனம் ஒருநிலைப்படவில்லை. வசனகர்த்தா பலமுறை திரும்பத் திரும்ப டயலாக்கைப் படித்துக் காட்டுகிறார். ஆனால் அபர்ணா அதைத் தெளிவாக அழுத்தமாகப் பேச முடியாமல் தடுமாறுகிறாள். டைரக்டர் வீரப்பன் 'டேக்'கை ஓ.கே. பண்ண முடியவில்லை.

''இந்த வசனம்தான் படத்திலேயே ரொம்ப முக்கியமான வசனம். இதை மாத்தவோ, விட்டுடவோ நான் விரும்பலே'' என்ற டைரக்டர், சந்திரன் பக்கம் திரும்புகிறார்.

''என்ன மிஸ்டர் சந்திரன், ரொம்ப ஆச்சரியமாயிருக்கே? எவ்வளவு நீள டயலாக் கொடுத்தாலும் பளிச்சினு ஒரே டேக்கிலே பாவத்தோட சொல்ற உங்க ஒய்ஃப், ஏன் இன்னிக்கு இப்படி...''

அபர்ணாவுக்கே ஆச்சரியமாயிருக்கிறது. அவளுக்கு இதுவரை இத்தனை டேக்குகள் 'கட்'டானதில்லை. தன்னை மீறிக் குழம்பிக் கொண்டிருந்த மனத்தைத் தேற்றிக்கொள்ள முயற்சி செய்கிறாள்.

என்றுமில்லாதபடி டைரக்டரின் கோபத்துக்கு ஆளான நடிகை, அந்த டயலாக் எப்படித் தன் உள்ளத்தின் அடித்தளத்துக்குப் போய்க் கலக்குகிறது என்பதை உணர்ந்து, ஒன்றும் பேசத் தோன்றாமல் அலுப்பாக உட்காருகிறாள்.

''சரி... இன்னிக்கு அபர்ணாவுக்கு 'மூட்' சரியில்லே. இந்த ஷாட்டை நாளைக்கு எடுத்துக்கொள்வோம்...'' என்று ஷூட்டிங்கை கான்ஸல் செய்துவிட்டு எழுந்திருக்கிறார் வீரப்பன்.

தளர்ந்து நடந்து வந்த அபர்ணா, முன் கதவைத் திறந்து உட்காருவதைப் பார்த்து வியப்படைகிறான் சந்திரன்.

கார் புறப்பட்டு வெகு நேரமாகியும் அவர்கள் எதுவுமே பேசவில்லை.

அபர்ணாவின் பார்வை எங்கோ வெற்றிடத்தில் நிலைத்து நின்று, சிந்தனை அசை போட்டுக்கொண்டிருப்பதை அவன் புரிந்துகொள்கிறான்.

வீட்டு போர்ட்டிகோவில் காரை நிறுத்துகிறான் சந்திரன்.

''சாந்தி! வீடு வந்துவிட்டது இறங்கம்மா'' என்று உரக்கச் சொல்கிறான் சந்திரன்.

அது சாந்திக்காகச் சொன்னது என்பதைவிட அபர்ணாவுக்காகச் சொன்னது என்பதுதான் சரி.

கதவைத் திறந்து கொண்டு பொம்மைகளுடன் உற்சாகமாக வீட்டுக்குள் ''அம்மா'' என்று கூவிக்கொண்டு துள்ளிஓடுகிறாள் சாந்தி.


முன் ஸீட்டில் இருந்த அபர்ணாவின் சிந்தனை இன்னும் கலையவில்லை.

''மிஸ் அபர்ணா! வீடு வந்துவிட்டது... இறங்குங்க... எனக்கு நேரமாயிடுச்சு. நான் போயிட்டு வர்றேன்.'' என்றவன், சற்று அமைதிக்குப் பிறகு, தொடர்ந்து சொல்கிறான்:

''நாளைக்கு அந்த வசனத்தின் அர்த்தத்தை நல்லாப் புரிஞ்சுக்கிட்டுப் பேசுங்க...''

சட்டென்று அவன் மார்பில் சாய்ந்து கொண்டு விம்முகிறாள் அபர்ணா.

''என்னை மன்னிச்சிடுங்க... நீங்க எழுதிய அந்த வசனத்தின் அர்த்தம் மட்டுமில்லே — வாழ்க்கையின் அர்த்தமும் எனக்குப் புரிஞ்சுட்டுதுங்க. வாங்க உள்ளே போகலாம்'' என்று அவன் கையைப் பிடித்துக் கொண்டு காரிலிருந்து இறங்குகிறாள் மனைவி.



டாக்டர்: ''என்ன ஆச்சரியம்! இவ்வளவு பெரிய வாயை நான் இதுவரை பார்த்ததில்லே! என்ன ஆச்சரியம்! இவ்வளவு பெரிய வாயை நான் இதுவரை பார்த்ததில்லே!''

நோயாளி: ஆமாம்! அதுக்கு இரண்டு தடவை ஏன் சொல்லிக் காட்டறீங்க?

டாக்டர்: ஒண்ணு நான் சொன்னது, இன்னொண்ணு உன் வாய்க்குள்ளேயிருந்து வந்த எதிரொலி!

* பல்லாயிரக்கணக்கான நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்க நவம்பர் முதல்தேதி முதல்!

கண்ணதாசன்

மாத இலக்கிய இதழ்

மீண்டும் வருகிறது..

ஆசிரியர்: கண்ணதாசன்

இணை: இராம.கண்ணப்பன்

முதல் இதழிலேயே

அர்த்தமுள்ள இந்து மதம்

மூன்றாம் பாகம் துவங்குகிறது

தனி இதழ் விலை ரூ 2.50
ஆண்டுச்சந்தா ரூ 30/-
ஆறுமாத சந்தா ரூ 15/-

விபரங்களுக்கு:
ஸ்ரீ விஜயா
பப்ளிஷர்ஸ்.

47/10 வடக்கு உஸ்மான் ரோடு, சென்னை—600017

இது முற்றிலும் புதிய நிர்வாகம்.



எது உங்கள் ராசி?

சமுதாயம் மாறிக் கொண்டிருக்கிறது. அதுவும் தலை கீழாக மாறிக் கொண்டிருக்கிறது.

பொருளாதாரத்தில் பழைய ஏற்பாடுகளுக்கு இனி வேலை இல்லாமல் போகப் போகிறது.

வரம்பு மீறிச் சொத்து சேர்ப்பது இனி நடக்காது.

'நாலு தலைமுறைக்குச் சாப்பிடலாம்' என்று இனி நினைக்க முடியாது.

மாடியின் மீது ஏறி நின்று 'கண் எட்டும் வரை தெரிவதெல்லாம் என் நிலம்' என்று இனி பெருமை பேச முடியாது.

பணத்துக்குள்ள மரியாதை நம்முடைய தலைமுறையிலேயே வீழ்ச்சி அடைந்து கொண்டு வருகிறது.

இனிமேல் தேவைக்கு மேல் சேர்த்து வைப்பவன், 'திருடன்' என்று அழைக்கப்படுவான்.

ஆகவே இன்றைய இந்தியன் முதலில் பேராசையைக் கட்டுப்படுத்திக் கொண்டாக வேண்டும்.

நமது வேதங்களும் முனிவர்களும் இதைச் சொன்ன போது யார் யாருக்குப் புரியவில்லையோ, அவர்களுக்கெல்லாம் சட்டம் புரிய வைத்துவிட்டது.

'நாம் சொத்துச் சேர்க்காமல் விட்டுவிட்டோமே' என்று வருந்தியதுண்டு. இப்போதோ, 'நல்ல வேளை, சேர்க்காமலிருந்தோமே' என்று மகிழ்ச்சி அடைகிறேன்.

நிம்மதியான வாழ்க்கைக்கும், நிம்மதியான தூக்கத்துக்கும் நியாயமான சொத்துக்கள்தான் இனி உதவ முடியும்.

மெத்தைக்குள் கறுப்புப் பணம், தலையணைக்குள் தங்கம்; பூஜை அறையில் நகைகள், குளிக்கும் அறையில் வைரம் என்று வைத்துக் கொண்டு ஏன் செத்துச் செத்துப் பிழைக்கிறீர்கள்?

இனி மேல் எந்த ஆட்சி வந்தாலும் இதை விட மேலே போகுமே தவிர, குறையப் போவதில்லை.

ஆகவே, அளவுக்கு மீறிப் பணம் வைத்திருப்பவர்கள், முதலிலே மனத்தை மாற்றிக் கொள்ளுங்கள். பிறருக்கு உதவியாவது பாபத்தைத் தொலையுங்கள்.

வசதி இல்லாமல் திருமணம் ஆகாமல் இருக்கும் ஏழைப் பெண்களுக்குத் திருமணம் செய்து வையுங்கள்.

தினசரி நூறு பேருக்காவது சோறு போடுங்கள்.

என்னிடம் பணம் இருந்தால் இவ்வளவையும் செய்ய ஆசைப்படுகிறேன். இல்லாததால் இருப்பவர்களுக்குச் சொல்கிறேன்.

அரண்மனை போல் வீடு கட்டுவதை இனி கனவிலும் கருதாதீர்கள்.

உங்களுக்கு எவ்வளவு நியாயமான தேவையோ, அவ்வளவை வைத்துக் கொண்டு மற்றவற்றைத் தானதருமம் செய்துவிடுங்கள்.

சர்க்காரிடம் பிடிபட்டு, ஒன்றுக்கு ஐந்தாகப் 'பெனல்டி' போடப்பட்டு, குற்றக் கூண்டிலே தலை குனிந்து நின்று சொத்துக்களோடு மானம் மரியாதையை இழப்பதைவிட தர்மவான் என்று பெயர் எடுப்பதில் பெருமையும் உண்டு; புண்ணியமும் உண்டு.

அதனால் நாடு வாழும், வீடு வாழும், எல்லோருக்கும் எல்லாமும் கிடைக்கும்.

இனி மேல் பாபத்தை மறைத்து வைக்க முடியாது என்பதை மட்டும் நிச்சயமாகத் தெரிந்து கொள்ளுங்கள்.

அப்படி மறைத்து வைத்தால் ஒவ்வொரு வேலைக்காரனுக்கும் பயப்பட வேண்டி இருக்கும்!

தப்பாகச் சம்பாதிப்பது பாவம்; அதைச் சரியாகச் செலவழிப்பது புண்ணியம்.

உங்கள் பாவத்தைப் புண்ணியத்தால் தீர்த்துக் கொள்ளுங்கள்.

தஸ்தாவேஜுகளுக்கு, 'பத்திரம்' என்று பெயர் வைத்ததற்குக் காரணம், அதைப் பத்திரமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதே.

பணத்துக்கு 'நாணயம்' என்று பெயர் வைத்ததற்குக் காரணம், அதில் நாணயமாக நடந்து கொள்ள வேண்டும் என்பதே.

காலம் மாறிவிட்டது. பழைய பந்தாக்கள் இனிச் செல்ல மாட்டா.

ஆடை அணிவதில்கூட இனி அடக்கம் வேண்டியிருக்கும்.

ஆசைக்கு வரம்பு கட்டாவிட்டால், அவமானம் வரம்பு கடந்து போய்விடும்.

வருமானமே அவமானம் என்றுவதைவிட வள்ளல் என்ற வெகுமானம் பெரிதல்லவா?

'பிறர்க்குதவி செய்யாப் பெருஞ்செல்வம்' வேறு எதற்கும் உதவாது.

'பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைக்காதீர்கள்.'

ஆடிட்டருக்குக் கொடுக்கும் பணத்தை, அவதிப்படுவோனுக்குக் கொடுங்கள்.

வக்கீலுக்குக் கொடுக்கும் பணத்தை வசதியற்றவனுக்குக் கொடுங்கள்.

''கேளுங்கள்; கொடுக்கப்படும்'' என்றார் ஏசுநாதர்.

''கொடுக்காவிட்டால் எடுக்கப்படும்'' என்கிறது சட்டம்.

நீங்கள் கொடுப்பதை விரும்புகிறீர்களா?
அதிகாரிகள் எடுப்பதை விரும்புகிறீர்களா?

Printed and published by V. Vaidyanathan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031. Editor: K. Rajendran


காலைப்புத்துணர்ச்சியும்
நறுமணமும்
நாள் முழுதும்
திகழட்டும்!
பாண்ட்ஸ்
ட்ரீம்ஃப்ளவர்
டால்க்
Pond's
Dreamflower talc
சீஸ்ப்ரோ-பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடெட்
HT-CP-8341

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

இலங்கையில் விலை 75 சதம் (தபால் செலவு தனி)